www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஏப்ரல் 2012
ரூ.10.00



## ஐ.நா.தீர்மானம்:

# சிங்கள இனவெறி நாயைப் பாதுகாத்த இந்திய நரி!

படிப்பகம்

www.padippakam.com

# அணு உலை அல்லது சிறை!

## அணு உலையைவிட அரசுதான் மிகக் கொடியது என்ற படிப்பினையை கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டம் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

**கூ**டங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டத்தின் மீது அனுதாபம் கொண்டவர் போல நடித்து வந்த ஜெயலலிதா, சங்கரன் கோவில் இடைத்தேர்தல் வாக்குப்பதிவு முடிந்த மறுகணமே, தனது அடிமைகளவையைக் கூட்டி, அணு உலையைத் திறப்பதாக அறிவிப்பை வெளியிட்டார். தங்களுடைய போராட்டத்தை மாநில அரசு மதிப்பதாகவும், ஆதரிப்பதாகவும் கருதிக்கொண்டிருந்த அப்பாவி மக்கள் நம்ப வைத்துக் கழுத்தறுக்கப்பட்டு விட்டனர்.




போலீசு அதிகாரிகளுக்கும், படையினருக்கும் சிரமமோ அலைச்சலோ இல்லாத வகையில், ‘சங்கரன்கோவில் வேலை முடிந்தவுடன் அப்படியே கூடங்குளம் வேலையையும் முடித்து விடலாம்’ என்ற கோணத்திலேயே அம்மாவின் போலீசு மூளை சிந்தித்துள்ளது, எனவேதான், போராடும் மக்கள் அணு உலைக்கு எதிராக எழுப்பிய கேள்விகளுக்கு, சம்பிரதாயமான முறையில் ஒரு பதிலைச் சொல்வதற்குக் கூட ஜெ அரசு அக்கறைப்படவில்லை.

‘முல்லைப்பெரியாறு புகழ்’ ராஜேஷ்தாஸ், ஜார்ஜ் போன்ற போலீசு உயரதிகார வர்க்கத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான போலீசார் அந்தப் பகுதி கிராமங்கள் அனைத்தையும் சுற்றி வளைத்தனர். அணு உலையைச் சுற்றி ஆயுதப் படைகள் நிறுத்தப்பட்டு ஊழியர்கள், பொறியாளர்கள், ரசிய வல்லுநர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். தண்ணீர், பால், காய்கறி உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் அப்பகுதிகளுக்கு நிறுத்தப்பட்டன. குழந்தைகள் பாலுக்குத் தவிக்கும் நிலை ஏற்பட்டது. இடிந்தகரை பகுதியின் மீது கடற்படையின் டார்னியர் விமானங்கள் வட்டமடித்தன.

கூடங்குளத்தில் போராட்டக்குழு உறுப்பினர் சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட 11 பேர் மார்ச் 20-ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டனர். இந்தக் கைதை எதிர்த்து கூட்டப்புளி கிராமத்து மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். 42 பெண்கள், 30 பள்ளிச் சிறுவர்கள் உள்ளிட்ட 178 பேர் கைது செய்யப்பட்டனர். தேசிய பாதுகாப்பு சட்டம் பாயும், போலீசு படைகள் ஏவிவிடப்படும் என்று ஊடகங்கள் மூலம் மக்களிடையே பீதி பரப்பப்பட்டது.

கைது நடவடிக்கை பற்றி அறிந்தவுடனே, மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் 10 பேர் நேரடியாக அங்கே சென்று விட்டனர். ராஜத்துரோகம், சதி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் சென்ற ஆண்டில் பதிவு செய்த வழக்கில் போராடிய மக்களைக் கைது செய்திருந்தது போலீசு. ராஜத்துரோக வழக்கில் தேடப்படும் குற்றவாளியான சிவசுப்பிரமணியத்தை இந்த மாதம் முதல்வர் எப்படி சந்தித்துப் பேசினார் என்று கேள்வி எழுப்பி, இது பொய்வழக்கு என்று வாதிட்டனர் வழக்குரைஞர்கள். கூட்டப்புளியில் கைது செய்யப்பட்ட மக்களை இரவோடு இரவாக ரிமாண்டு செய்வதற்கு போலீசு போட்ட திட்டத்தையும் முறியடித்தனர். மறுநாள் காலை கைது செய்யப்பட்ட பெண்களின் ஆவேசப் பேச்சால் அதிர்ந்தது நீதிமன்றம்.



கைது செய்யப்பட்டவர்களை உள்ளூர் சிறையில் வைக்காமல் கூட்டப்புளி மக்களை திருச்சிக்கும், கூடங்குளத்தினரை கடலூர் சிறைக்கும் அனுப்பியது போலீசு. நள்ளிரவு நேரத்தில் சிறைக்குக் கொண்டு வரப்பட்ட அம்மக்களை திருச்சி மற்றும் கடலூர் சிறை வாயிலில் நின்று ம.க.இ.க; பு.மா.இமு. ஆகிய புரட்சிகர அமைப்பு

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 27 இதழ்: 6
ஏப்ரல் 2012

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

# அணு உலைகளைவிட ஆபத்தானவை!

ஓட்டுப் பொறுக்கி அரசியலில் என்னதான் கேவலமான நாய்ச் சண்டையில் கருணாநிதியும் ஜெயலலிதாவும் ஈடுபட்டிருந்தாலும், வேறு பல விடயங்களில் அண்ணனும் தங்கையுமாக உறவு கொண்டு, ஒன்றுபட்டுச் செயல்படுகிறார்கள். இதற்கு, பன்னாட்டு - இந்நாட்டுக் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சேவை செய்வதில் இருந்து சோனியா-மன்மோகன் கும்பலுக்குத் துணை நின்று ஈழத் தமிழரின் முதுகில் குத்துவது வரை எவ்வளவோ எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். கருணாநிதி - ஜெயலலிதாவின் பாசப் பிணைப்புக்கு மிகச் சமீபத்திய சான்றாக, கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பு மக்கள் போராட்டங்களைக் கொச்சைப்படுத்தி அவதூறு செய்து ஒடுக்குவதில் இருவரும் கை கோர்த்துக் கொண்டு செயல்படுவதைக் கூறலாம்.

இந்த வகையில் காங்கிரசு, பாரதிய ஜனதாக் கட்சி மற்றும் போலி கம்யூனிஸ்டுகளின் ''தேசியக் கூட்டணி''யும் கருணாநிதி-ஜெயலலிதாவின் ''திராவிடக் கூட்டணி''யும் ஒரே உத்தியைத்தான் பின்பற்றுகின்றன; இரண்டு கூட்டணிகளும் கூட்டுச் சேர்ந்து ஒரு மகாகூட்டணியும் அமைத்துக் கொண்டு செயல்படுகின்றன. கூடங்குளம் அணுஉலை பற்றிய அப்பகுதி மக்களின் அச்சத்தைப் போக்குவதற்காக என்று மத்திய-மாநில அரசுகள் தனித்தனியே இரண்டு நிபுணர் குழுக்களை அமைத்தன. அவை கூடங்குளம் வளாகத்தில் விருந்துண்டு ஏப்பமும் அறிக்கையும் விட்டதோடு சரி. போராடிய மக்களை சந்திக்கவோ, அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கவோ இல்லை.

இந்த நிலையில், அணுஉலை எதிர்ப்புப் போராட்டத் தலைமைக்கு எதிராக ''அமைப்புசாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் அந்நியத் தொடர்பு, அந்நிய நிதி உதவி'' என்ற அவதூறு கட்டவிழ்த்து விடப்பட்டது. மன்மோகன் - சோனியாவின் எடுபிடி நாராயணசாமி போதாதென்று சிதம்பரமும் மன்மோகனுமே இந்தப் பொய்ப் பிரச்சாரத்தில் இறங்கினர். சி.பி.ஐ., ஐ.பி. முதலிய மத்திய உளவுப் படைகளை ஏவி விசாரணை, சோதனை, வங்கிக் கணக்கு முடக்கம், ஜெர்மனி சுற்றுலாப் பயணி வெளியேற்றம் என்று அனைத்து ஊடக உதவியுடன் பல கூத்துக்களை நடத்தினர். கடைசியில் அவ்வாறான புகார்கள் எதற்கும் ஆதாரங்கள் இல்லை, ''உறுதிப்படுத்தப் படவில்லை'' என்று நாடாளுமன்றத்திலேயே அறிவித்து விட்டனர். ஆதாரம் எதுவுமின்றி நாராயணசாமி, சிதம்பரம், மன்மோகன் ஆகியோர் புளுகியதற்கோ, அதற்காக உளவுத்துறைகள் கேடாகப் பயன்படுத்தப்பட்டதற்கோ எந்த விளக்கமும் தரப்படவில்லை.

ஆனால், அணுஉலைக்கு எதிராகப் போராடிய மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை மற்றும் அவதூறுப் பிரச்சாரம் என்ற தொடர் ஓட்டக் குச்சியை (பேட்டனை) ஜெயலலிதாவும், தமிழக உளவுத்துறையும் கையேற்றுக் கொண்டனர். அமைதிவழி - உண்ணாவிரதப் போராட்டங்கள் மட்டுமே நடத்தியவர்கள் மீது நூற்றுக்கணக்கான பொய் வழக்குகள் போட்டு, பல ஆயிரம் போலீசாரை குவித்து, அதிரடிப்படையின் அணிவகுப்பு மிரட்டல் விடுத்து, குழந்தைகளுக்குப் பால் உள்ளிட்ட உணவுப் பொருள், மின்சாரம், குடிதண்ணீர் வழங்கீட்டைத் தடுத்து, ஏதோ பயங்கரவாதத் தடுப்புப் போல பாசிச அடக்குமுறையை ஏவிவிட்டனர். இதனால் ஏற்பட்ட எதிர்ப்பலைகளைத் திசை திருப்பிவிடுவதற்காக வழக்கமான அவதூறுப் பிரச்சாரத்துடன், போராட்டத் தலைமைக்கு நக்சலைட்டுகளுடன் தொடர்பு, நக்சலைட்டுகள் ஊடுருவல் - அதனால் தீவிரவாத - வன்முறை போராட்டங்களில் குதிப்பார்கள் என்று ஜெயாவின் உளவுத் துறையும் போலீசும் பீதியூட்டும் செயல்களில் இறங்கின. இந்த அவதூறுக்கு ஆதாரமாக உளவுத்துறையே ''முன்னாள் நக்சல்பாரிகள்'' என்று சொல்லும் மூன்றுபேரைப் பிடித்து, அவர்களிடம் வன்முறைக்கு வழிவகுக்கும் கடிதமும், வரைபடமும் சிக்கியதாகவும், போராட்டக்காரர்களிடையே நக்சல்பாரிகள் உள்ளதான ''வீடியோ'' ஆதாரங்களை ஆய்வு செய்வதாகவும் பலவாறு புளுகுகிறது. பிடிபட்டதாகக் கூறப்படும் எவரும் நக்சல்பாரி அமைப்பினர் அல்ல. போலி ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதும் பொய் வழக்குகள் புனைவதும் ஜெயலலிதாவின் உளவுத்துறைக்கும் போலீசுக்கும் கைவந்த கலை. கலைஞர் மற்றும் சன் குழுமங்களின் வானொளி அலைவரிசைகள் ஜெயாவின் இந்த அவதூறுப் பிரச்சாரத்தை விசுவாசமாக ஒலி-ஒளிபரப்புகின்றன.

அப்பாவி முஸ்லீம் இளைஞர்களைப் பிடித்து தீவிரவாதிகள் என்று சுட்டுக் கொல்வது; ஆர்.எஸ்.எஸ் குண்டுவெடிப்புகளுக்குப் பழிபோடுவது; சீரழிந்த, அமைப்பு சாரா நபர்களைப் பிடித்து அவர்களைக் காட்டி நக்சல்பாரிகளை இழிவுபடுத்துவது — இதெல்லாம் போலீசு, உளவுத் துறையின் கைவரிசை. வெளிநாட்டவர், நக்சல்பாரிகள் என்பதாலேயே நாட்டு மக்களின் நியாயமான எந்தப் போராட்டங்களையும் ஆதரிக்கக் கூடாதா? மக்கள் மீதான பாசிச அடக்குமுறைகளை எதிர்க்கக் கூடாதா? மக்களை ஒடுக்க முயலும் தேசிய, திராவிடக் கூட்டணிகள் அணு உலைகளை விடவும் ஆபத்தானவை. ●



படிப்பகம்

www.padippakam.com

## ஐ.நா.தீர்மானம்:

# சிங்கள இனவெறி நாயைப் பாதுகாத்த இந்திய நரி!

**ஐ.நா.வின் தீர்மானத்தை திருத்தத்துடன் ஆதரித்து, பாசிச ராஜபக்சேவை மனித உரிமை மீறல் விசாரணைகளிலிருந்து காப்பாற்றியுள்ளது இந்தியா.**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் 22-ஆம் தேதியன்று இலங்கை தொடர்பாக அமெரிக்கா கொண்டுவந்துள்ள தீர்மானம், இந்தியாவின் சதித்தனமான திருத்தத்துடன் கூடிய ஆதரவோடு வெற்றி பெற்றுள்ளது. சீனா,ரஷ்யா, கியூபா முதலான நாடுகள் இத்தீர்மானத்தை எதிர்த்துள்ளன.

இத்தீர்மானம், இலங்கையின் சிங்கள இனவெறி அரசுக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம் என்றும், ராஜபக்சேவைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்கக் கோரும் தீர்மானம் என்றும் திரும்பத்திரும்ப தமிழக ஓட்டுக்கட்சிகளும் தமிழினப் பிழைப்புவாதிகளும் ஊடகங்களும் பரபரப்பூட்டுகின்றனர். இத்தீர்மானம் இலங்கையைக் கண்டிப்பது போலவும், ராஜபக்சே கும்பலின் போர்க்குற்றங்களை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்று கோருவது போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றனர். ஆனால், இந்தத் தீர்மானத்தில் சிங்கள இனவெறி பாசிச-பயங்கரவாத அரசின் போர்க்குற்றங்களையோ, இனப்படுகொலையையோ கண்டிப்பதாக எதுவுமில்லை. ராஜபக்சேவைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்கவிக்கவுமில்லை.

சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனிவா நகரில் இந்தியா, இலங்கை உள்ளிட்டு 47 நாடுகள் உறுப்பினர்களாக உள்ள ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைக் கவுன்சில், எவ்வித அதிகாரமும் இல்லாத ஓர் அலங்கார அமைப்பாகும். ஒரு குறிப்பிட்ட நாடு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருப்பதாக இந்த கவுன்சிலில் பெரும்பான்மை நாடுகள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினாலும், அதனை ஐ.நா. பொதுச்சபை விவாதித்து, அதனடிப்படையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அங்கீகரித்தால்தான் குற்றம் சாட்டப்பட்ட அந்நாட்டில் தலையிட முடியும். அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்கள் தங்களது மேலாதிக்க ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கு ஏற்ப மனித உரிமைக் கவுன்சிலின் தீர்மானத்தைப் பயன்படுத்திக் கொள்வதுதான் இவ்வமைப்பின் நடைமுறைப் பயன்பாடாக உள்ளது.

ஈழத்தில் நடந்த இன அழிப்புப் படுகொலைகளுக்குப் பிறகு, கடந்த 2009-ஆம் ஆண்டில் மனித உரிமைக் கவுன்சிலில் சுவிட்சர்லாந்து அரசு ஈழப்போர் தொடர்பாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அதுவும் சிங்கள இனவெறி அரசின் இன அழிப்புப் படுகொலைக்கு எதிரான தீர்மானம் அல்ல. மக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு, இறுதிப் போரின் போது சிவிலியன்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும், அதையும் இதர மனித உரிமை மீறல்களையும் இலங்கை அரசே விசாரிக்க வேண்டுமென்றும் அத்தீர்மானம் குறிப்பிட்டது. சிங்கள இராணுவத்தின் போர்க்குற்றங்களைப் பற்றி மவுனம் சாதித்த அத்தீர்மானத்தை, இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு எதிரான தீர்மானம் என்றும், போர்க்குற்றவாளி ராஜபக்சேவைத் தண்டிக்கக் கோரும் தீர்மானம் என்றும் ஈழ ஆதரவாளர்களும் ஊடகங்களும் அன்று ஊதிப் பெருக்கினர். இத்தீர்மானத்தை எதிர்த்து இந்தியா, இலங்கை, சீனா, ரஷ்யா, கியூபா முதலான பெரும்பான்மை நாடுகள் வாக்களித்ததால் இத்தீர்மானம் தோல்வியடைந்தது.

இதே நேரத்தில் இலங்கை அரசு மற்றொரு தீர்மானத்தை முன்மொழிந்தது. பயங்கரவாதத்தை வீழ்த்தி வெற்றியைச் சாதித்துள்ள இலங்கை அரசையும் இராணு

சிங்கள இனவெறி பாசிச பயங்கரவாத ராஜபக்சே அரசின் போர்க்குற்றங்களையோ, இனப்படுகொலையையோ கண்டிக்காத ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் வெற்றுத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கக் கோரி தமிழினப் பிழைப்புவாதிகள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

வத்தையும் பாராட்டிய அத் தீர்மானம், போரினால் அக திகளாகியுள்ள மக் களுக்கும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு செய்யவும் உலக நாடுகள் உதவ வேண்டுமென்று கோரியது. இப்படி ஆடு களுக்காக அழுத ஓநாயின் தீர்மானத்தைப் பெரும் பான்மை நாடுகள் வாக் களித்து நிறைவேற்றின.



போர்க்கைதிகளான புலிப்படையினரை நிர்வாணப்படுத்தி, கைகளைக் கட்டி சித்திரவதை செய்து சிங்கள இனவெறி இராணுவம் சுட்டுக் கொன்ற கொடூரம்: பிரிட்டனின் சானல் 4 காணொளி அண்மையில் வெளியிட்டுள்ள உலகை அதிரச் செய்த ஆவணப்படம்.

ஈழப் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த இன அழிப்புப் படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் மற்றும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் கண்டனங்களைத் தொடர்ந்து, சிங்கள இனவெறி பாசிச ராஜபக்சே கும்பல் 2010 மே மாதம் ''கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (எல்.எல்.ஆர்.சி.)'' என்ற ஆணையத்தை நிறுவி விசாரணை நடத்துவதாக அறிவித்தது. இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச அரங்குக்கு இழுக்கப்படுவதைத் தவிர்த்து, நீதியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இலங்கையில் வளமாக உள்ளதாகக் காட்டிக் கொள்ளவும், இதன் மூலம் சர்வதேசத் தலையீட்டை முறியடிப்பதும்தான் இந்த ஆணையத்தை ராஜபக்சே கும்பல் அமைத்ததற்கான காரணம். இந்த ஆணையம் புலிகளின் போர்க்குற்றங் களை விசாரிப்பதற்காகவே உருவாக்கப்பட்டது. போரில் புலிகள் வீழ்த்தப்பட்டிருந்தாலும், அவர்களுடன் தொடர் புடைய புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களைத் தீவிரவாதி கள் என்று முத்திரை குத்தி வதைக்கும் நோக்கத்துடன் விசாரணையை நடத்தியது. இறுதிக் கட்டப் போரின் போது நடந்த அத்துமீறல்கள், தனிநபர்களின் பாதிப்பு கள் பற்றியும் விசாரிப்பதாகத் தெரிவித்தது. இதன் மூலம் அரசு மற்றும் இராணுவ அதிகாரிகளில் ராஜபக்சே கும் பலுக்கு விசுவாசமாக இல்லாதவர்களை இனம் கண்டு களையெடுக்கவும், பழிவாங்கவும் இதனைப் பயன் படுத்திக் கொண்டது.

மனித உரிமை மீறல்கள் பிரச்சினையில் சிங்கள அர சாங்கத்தைப் பாதுகாத்ததில் இழிபுகழ் பெற்ற முன்னாள் அரசுத் தலைமை வழக்குரைஞர் சி.ஆர். டிசில்வா இந்த ஆணைக்குழுவுக்குத் தலைமை தாங்கினார். அரசாங்கத் தின் ரப்பர் ஸ்டாம்பாகச் செயல்பட்ட இந்த ஆணைக் குழு எந்த வகையிலும் சுயேட்சையானதோ, நடுநிலை யானதோ அல்ல என்பது யாவரும் அறிந்த உண்மை.

இறுதியாக இந்த ஆணைக்குழு தனது அறிக்கையை 2011 டிசம்பர் 16 அன்று வெளியிட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்டப் போரின் போது சிங்கள இராணுவம் எவ்விதப் போர்க்குற்றமும் இழைக் கவில்லை; மக்களைப் பாதுகாக்க அக்கறையோடும் பொறுப்போடும் செயல்பட்டது என்றுதான் இந்த அறிக்கை கூறுகிறது. இந்த அறிக்கையையும் ஐ.நா. வுக்குச் சமர்பிக்கப் போவதில்லை என்று சிங்கள அமைச்சரவை அறிவித்துவிட்டது.

இந்த நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந் துரைகளை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துவது தான், அமெரிக்காவால் முன்மொழியப்பட்டு, தற்போது ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் நிறைவேற்றப்பட் டுள்ள தீர்மானத்தின் சாரம். இத்தீர்மானம், போரின் இறுதிக் கட்டத்தில் ராஜபக்சே கும்பலால் நடத்தப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களுக்கு எதிரானதல்ல. அந்த விவகாரத்துக்கும் இந்த தீர்மானத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

போர்க்குற்றவாளியான ராஜபக்சே அரசு தம்மைத் தாமே விசாரணை செய்து கொண்டுள்ளதாகக் கூறும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஆதரித்து, அதன் பரிந்துரைகளை விரைவாகச் செயல்படுத்தக் கோரு கிறது, இத்தீர்மானம். நல்லிணக்க ஆணைக்குழு கவனத்தில் கொள்ளாத மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு கள் தொடர்பாக நம்பகமான விசாரணை தொடங்கப்பட வேண்டும் என்றும், சர்வதேசச் சட்டவிதிகள் மீறப்பட் டது குறித்த குற்றச்சாட்டுகள் பற்றி கவனம் செலுத்து மாறும் இலங்கை அரசை இத்தீர்மானம் கோருகிறது. இந் தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் தனது வலுவான ஆதிக் கத்தை நிறுவும் போர்த்தந்திரத் திட்டத்தின் ஓர் அங்கமா கவே, சீனாவுடனான அரசு தந்திர மற்றும் பொருளாதார உறவுகளிலிருந்து விலகி நிற்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே அமெரிக்கா இத்தீர் மானத்தைக் கொண்டு வந்துள்ளது. மற்றபடி, ராஜபக்சே கும்பலின் போர்க்குற்றங்கள் பற்றியோ, இனப்படு கொலை பற்றியோ இத்தீர்மானத்தில் ஒரு வார்த்தைகூட இல்லை.

டப்ளின் தீர்ப்பாயத்தில் முன்னின்று உழைத்த, ஈழத் தமிழர்களால் நன்கறியப்பட்டவரான பால் நியூமென்,



படிப்பகம்

ஐ.நா. மனித உரிமைகள் கமிசனின் தற்போதைய கூட்டத்தொடரில் இலங்கையில் நடந்துள்ள இனப்படுகொலை, போர்க்குற்றம் பற்றி எதுவுமே விவாதிக்கப்படவில்லை என்று பேட்டியளித்துள்ளார். இத்தீர்மானம் இலங்கையைக் கண்டிக்கும் நோக்கம் கொண்டதல்ல என்று ஜெனிவாவுக்கான அமெரிக்கத் தூதர் எலின் சாம்பர்லெய்ன் டோனஹோ தெரிவித்துள்ளார். இலங்கையிலுள்ள மனித உரிமை அமைப்புகள்கூட இந்தத் தீர்மானத்தில் போர்க்குற்றங்களுக்கு எதிராக ஒன்றுமேயில்லை என்கின்றனர். ஆனால், தமிழக ஓட்டுக்கட்சிகளும், சில பிழைப்புவாத ஈழ ஆதரவாளர்களும் ஒன்றுமில்லாத இந்த வெற்றுத் தீர்மானத்தைத்தான் ஏதோ கேழ்வரகில் நெய் வடிந்த கதையாக ஏற்றிப்போற்றி, அமெரிக்காவானது, இலங்கையைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விடுவதைப் போல சித்தரிக்கின்றனர்.



உள்நாட்டு பாசிசக் கொடுங்கோன்மையை நியாயப்படுத்த, அந்நியத் தலையீடுகளையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்ப்பவர்கள் போல நடத்தும் நாடகம்: இலங்கையின் ஆளும் கட்சி எம்.பி.க்கள் ஐ.நா. தீர்மானத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.

''போர் முடிந்து மூன்றாண்டுகளே ஆகியுள்ள நிலையில், மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு கூடுதல் அவகாசம் அளிக்க வேண்டும்'' என்று கூறி அமெரிக்கா முன்வைத்த இந்தத் தீர்மானத்தை ரஷ்யா, சீனா, கியூபா முதலான நாடுகள் எதிர்த்தன. ''இலங்கை போன்ற ஒரு ஜனநாயக நாட்டுக்கு அமைதி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள போதிய அவகாசம் வழங்க வேண்டும்'' என்று கூறி தீர்மானத்தை எதிர்த்த இந்தியா, ஒரு திருத்தத்தை முன்வைத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் இத்தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது. ''ஐ.நா. மனித உரிமைத் தூதர் அலுவலகம் அளிக்கும் உதவியை இலங்கை ஏற்க வேண்டும்'' என்ற வாசகங்களை நீக்கிவிட்டு, ''ஐ.நா. மனித உரிமை தூதர் அலுவலகம் அளிக்கும் எத்தகைய உதவியையும் இலங்கை அரசுடன் கலந்தோலனை நடத்தி அதன் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும்'' என்று முக்கியமான இத்திருத்தத்தின் மூலம் இந்தியா இத்தீர்மானத்தை மேலும் செல்லாக்காசாக்கியுள்ளது. தொழில்நுட்ப உதவி என்ற விதியின் கீழுள்ள இந்த முக்கியமான அம்சத்தை திருத்தியமைத்து, இலங்கையின் மனித உரிமை மீறல் விசாரணைகளில் ஐ.நா. தலையிடுவதற்கன வாய்ப்பையும் அடைத்து, இலங்கை அரசு இத்தகைய சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் காப்பாற்றியிருக்கிறது இந்திய அரசு. இந்தியா செய்துள்ள இந்த 'சிறிய' திருத்தம் மனித உரிமை கமிசனிடமிருந்து இலங்கையைக் காப்பாற்றும் கவசமாகப் பயன்படும்.

அமெரிக்காவின் விசுவாச அடியாளாக உள்ள இந்தியா, தனது வட்டார மேலாதிக்க நலன்களுக்காக சிங்கள இனவெறி பாசிச பயங்கரவாதத்தை ஆதரித்து நிற்கும் நோக்கத்துடன்தான் முந்தைய மனித உரிமை பாதுகாப்பு கவுன்சிலில் சுவிஸ் தீர்மானத்தை எதிர்த்தது. பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல், இப்போதைய தீர்மானத்தை நரித்தனமான திருத்தத்துடன் ஆதரித்துள்ளது. இந்தியா இத்தீர்மானத்தை எதிர்த்ததை விட, ஆதரித்த தன் மூலம் இலங்கை அரசுக்கு மேலும் உதவியுள்ளது. ஆனால், இந்தியாவின் முடிவு இலங்கைக்கு எதிரானதாகவும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவானதாகவும் உள்ளதாக கருணாநிதி, ஜெயலலிதா மற்றும் பிற ஓட்டுக் கட்சிகளும் பிழைப்புவாதிகளும் போட்டி போட்டுக் கொண்டு உரிமை பாராட்டுகின்றனர்.




ஐ.நா. தீர்மானத்தில் சிங்கள இனவெறி ராஜபக்சேவின் போர்க்குற்றங்களுக்கு எதிராக ஒன்றுமில்லை என்ற போதிலும், 'இது எங்களுக்கும் தெரியும். இருந்தாலும், இதுவாவது நடக்கிறதே என்று பார்க்க வேண்டும். எவ்வித நடவடிக்கையுமின்றி தறிகெட்டுத் திரியும் சிங்கள இனவெறி பாசிஸ்டுகளுக்கு கடிவாளம் போடும் முயற்சியாகவே இதைப் பார்க்க வேண்டும். இது முதல் அடிதானே தவிர, முழுமையானதல்ல என்பது எங்களுக்குத் தெரியும்' என்



படிப்பகம்

www.padippakam.com

றெல்லாம் தமிழினப் பிழைப்புவாதிகள் நியாயவாதம் பேசுகின்றனர். இரண்டாம் பட்ச எதிரிகளுடன் தற்காலிகமாகக் கூட்டணி அமைத்து, முதன்மை எதிரியான இனவெறி பாசிச ராஜபக்சே கும்பலை வீழ்த்துவது என்ற அரசியல் உத்தியுடன் தாங்கள் அணுகுவதாக இதற்கு நியாயம் கற்பிக்கின்றனர். இப்படிச் செய்ததன் மூலம் இந்தியா போர்க்குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டதே, அது நியாயமா?

இட்லரும் முசோலினியும் போல, இந்தியாவும் இலங்கையும் இணைந்து இழைத்ததே தமிழின அழிப்புப் போர்க்குற்றம். புலிகளையும் ஈழத் தமிழ் மக்களையும் பூண்டோடு ஒழிக்குமாறு முள்ளிவாய்க்கால் போரை வழிநடத்தியதில் இலங்கை அரசின் கூட்டாளிதான் இந்திய அரசு. போர்க்குற்றவாளியான இந்திய அரசிடம் பிழைப்புவாத ஈழ ஆதரவு அமைப்புகளும் ஓட்டுக் கட்சிகளும் ஐ.நா. தீர்மானத்துக்கு ஆதரவாக ஓட்டுப் போடச் சொல்லிக் கூப்பாடு போட்டன. ராஜபக்சேவுடன் இந்திய அரசையும் கூண்டிலேற்றுவதற்குப் பதிலாக, இலங்கை மட்டும்தான் போர்க்குற்றவாளி என்றும், இந்தியா முன்நின்று ஈழத் தமிழர்களுக்கு நீதியும் உரிமையும் பெற்றுத்தரும் என்றும் இவர்கள் பிரமையூட்டுகின்றனர். அதன் மூலம் போர்க்குற்றவாளியான இந்தியாவை தப்பவைக்கும் திருப்பணியைச் செய்துள்ளனர். போர்க் குற்றவாளியான இந்திய அரசை நியாயவானாகக் காட்டி, தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்ததன் மூலம் போர்க்குற்றவாளியான ராஜபக்சேவையும் விடுவிக்கத் துணைபோயுள்ளனர்.

கடல் வற்றி கருவாடு தின்னலாம் என்று காத்திருந்த கொக்கின் கதையாக, இந்திய உதவியுடன் ஈழ விடுதலையைச் சாதிக்க முடியும் என்று நம்ப வைத்து தமிழக இனவாதிகள் நடத்திய சந்தர்ப்பவாத அரசியலின் நீட்டிப்புதான் இது. இந்திய தேசியத்தை எதிர்ப்பதாகவும் தேசிய இன விடுதலையைச் சாதிக்கப் போவதாகவும் சவடால் அடிக்கும் இத்தமிழினக் குழுக்களும் தலைவர்களும் அரசியல் ரீதியில் இந்திய வட்டார மேலாதிக்க அரசின் அப்பட்டமான கைக்கூலிகளாக உள்ளனர். அன்று ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை வரவேற்று ஆதரித்த இவர்கள்தான், இன்று இந்தத் தீர்மானத்தையும் ஆதரிக்கிறார்கள். எம்.ஜி.ஆர் இருந்திருந்தால் இப்படி நடக்க விட்டிருக்க மாட்டார்; இந்திரா காந்தி இருந்திருந்தால் ஈழத்தை விடுதலை செய்திருப்பார்; வங்கதேச விடுதலையைப் போல தனி ஈழத்தை உருவாக்கியிருப்பார் - என்றெல்லாம் ஏற்றிப் போற்றியவர்களும் இவர்கள்தான். இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்தால், அது இந்தியாவுக்கு பேராபத்து என்று பீதியூட்டி உபதேசம் செய்தவர்களும் இவர்கள்தான். ஈழ விடுதலைக்கு எதிரான பார்ப்பன பாசிச ஜெயலலிதாவை ஈழத்தாயாகச் சித்தரித்தவர்களும் இவர்கள்தான்.

இந்தியா அல்லது அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் முதுகில் ஏறி ஈழத் தமிழர்க்கு நீதியும் உரிமையும் பெற்று விட இயலுமெனக் கருதுவது வீண்கனவு மட்டுமல்ல; ஈழ விடுதலைக்கே எதிரான துரோகத்தனமாகும். இந்தியாவையும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களையும் தாஜா செய்தோ, அவற்றின் தயவினாலோ, அரசு தந்திர நடவடிக்கைகள், அழுத்தங்கள் மூலமாகவோ இந்திய - இலங்கை அரசுகளின் போர்க்குற்றங்களுக்கு ஒருக்காலும் நீதி பெற முடியாது. இத்தகைய பிழைப்புவாத - சந்தர்ப்பவாத ஈழ ஆதரவு அமைப்புகளையும் இயக்கங்களையும் அம்பலப்படுத்தி, சர்வதேச அரசுகளைப் பணிய வைக்கும் தனித்துவமான உறுதியான புரட்சிகர மக்கள் இயக்கங்களைக் கட்டியமைப்பதன் மூலம்தான் இப்போர்க்குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும்.

● பாலன்

### கியூபா:

## இனப்படுகொலைகளின் கவசமா, இறையாண்மை?

இலங்கை மீதான அமெரிக்கத் தீர்மானத்தை கியூபா எதிர்த்துள்ளது. 2009-இல் சுவிட்சர்லாந்து கொண்டு வந்த தீர்மானத்தையும் கியூபா, பொலிவியா, நிகராகுவா உள்ளிட்ட நாடுகள் எதிர்த்தன. கியூபா முற்போக்கு, சோசலிச நாடாகச் சித்தரிக்கப்பட்டு வந்திருப்பதால், கியூபாவின் தவறைக் காட்டித் தமது கம்யூனிச எதிர்ப்புக்கு வலு சேர்த்துக் கொள்கிறார்கள் இனவாதிகள். கியூபாவை மட்டுமின்றி, சீனத்தையே சோசலிச நாடு என்று இன்னமும் சாதித்துக் கொண்டிருக்கும் போலி கம்யூனிஸ்டுகள்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள்.

ஒடுக்கப்பட்ட நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடவும், தனது கைக்கூலி ஆட்சிகளை நிறுவவும் மனித உரிமை மீறல் என்பதை அமெரிக்கா ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துகின்ற காரணத்தினால், ''ஏகாதிபத்தியத் தலையீட்டை எதிர்ப்பது, பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதை எதிர்ப்பது, பின்தங்கிய ஒடுக்கப்பட்ட நாடுகளின் இறையாண்மையைப் பாதுகாப்பது'' என்ற பொதுக் கோட்பாட்டைக் கூறிக்கொண்டு, ராஜபக்சே போன்ற பாசிஸ்டுகளுக்குத் துணை போகின்றன கியூபா போன்ற நாடுகள்.

ராஜபக்சே போன்றவர்கள் தமது உள்நாட்டு பாசிசக் கொடுங்கோன்மையை நியாயப்படுத்திக் கொள்ளும் தேவை சர்வதேச அரங்கில் எழும்போது, அந்நியத் தலையீடுகளையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்ப்பவர்கள் போல நடிக்கிறார்கள். அவ்வளவே. இதுவும் வேடம். அமெரிக்காவின் மனித உரிமைக் கவலையும் வேடம். பாசிச மோடியும், ஜெயலலிதாவும் எழுப்பும் மாநில உரிமைச் சவடாலை அங்கீகரித்து அவர்கள் பின்னால் செல்ல முடியாது. ராஜபக்சே பேசும் இறையாண்மை சவடாலும் அத்தகையதுதான்.

சர்வதேச அரசியலிலும் சரி, உள்நாட்டு அரசியலிலும் சரி இத்தகைய முரண்நிலைகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த வேடதாரிகளில் யார் தரப்பிலும் நிற்க விரும்பாதவர்களும், ஜனநாயகத்திலும் இறையாண்மையிலும் நம்பிக்கை கொண்டவர்களுமான நாடுகள் இலங்கை இனவெறிப் பாசிச அரசுக்கு எதிரான தீர்மானத்தை தாங்களே முன்மொழிந்திருக்க வேண்டும்.

ஈழப்பிரச்சினைக்காக இன்று கியூபாவையும் பொலிவியாவையும் விமரிசிக்கின்ற தமிழினவாதிகள், அமெரிக்காவின் ஆக்கிரமிப்புகளுக்கும் படுகொலைகளுக்கும் எதிராகவோ, இந்தியாவின் காஷ்மீர் படுகொலைக்கு எதிராகவோ ஏன் மூச்சு விடவில்லை என்பது குறித்துப் பரிசீலிப்பார்களேயானால், கியூபாவின் அரசியல் சந்தர்ப்பவாதம் குறித்த தெளிவு அவர்களுக்கு கிடைக்கக் கூடும்.



படிப்பகம்

www.padippakam.com

## அதிகரிக்கும் போலீசு கண்காணிப்பு:

# பாசிசமயமாகும் அரசு!

**வடமாநிலத் தொழிலாளர்கள் மட்டுமின்றி, எல்லா பிரிவு மக்களையும் கண்காணிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளாகக் கருதும் அரசின் அணுகுமுறை காலனிய ஆட்சியை நினைவுபடுத்துகிறது.**

**செ**ன்னை - வேளச்சேரியில் ஐந்து வடமாநில இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட போலி மோதல் கொலை, திருப்பூரில் ஜாய் ஆலுக்காஸ் நகைக்கடையில் நடந்த திருட்டு ஆகிய இரண்டு சம்பவங்களுக்குப் பின், வட மாநிலங்களில் இருந்து பிழைப்பு தேடி வந்திருக்கும் கூலித் தொழிலாளர்கள், தமிழகத்தில் உயர் கல்வி படித்துவரும் வட மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோர் பற்றிய விவரங்களைப் பதிவுசெய்வதைக் கட்டாயமாக்கி உத்தரவிட்டுள்ளது, தமிழக போலீசு. சென்னை, திருப்பூர், வேலூர் ஆகிய மாவட்டங்களில் வடமாநிலக் கூலித் தொழிலாளர்கள் பற்றிய விவரங்களைப் பதிவு செய்வதைத் தமிழக போலீசு அதிகாரிகளே நேரடியாக நடத்தி வருகின்றனர். வட மாநிலக் கூலித் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளில் அதிரடியாகப் புகுந்தும், அவர்களைத் திருமண மண்டபங்கள் போன்ற இடங்களுக்கு வலுக்கட்டாயமாக ஓட்டிவந்தும் இப்பதிவினை போலீசார் நடத்தி வருகின்றனர். வட மாநிலத் தொழிலாளர்களின் பிறந்த ஊர், தொழில், தற்போதைய முகவரி, கைபேசி எண்கள் ஆகியவற்றோடு, அவர்களின் விரல் ரேகைகளும் போலீசாரால் வலுக்கட்டாயமாகப் பதிவு செய்யப்படுகின்றன. தமிழகத்திலுள்ள அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் தற்பொழுது கணக்குப் பாடம் நடைபெறுகிறதோ இல்லையோ, வடமாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களைக் கணக்கெடுக்கும் பணி மும்மரமாக நடைபெற்று வருகிறது.

தமிழக அரசும், போலீசும் தயாரித்து வரும் இந்த ''சந்தேக லிஸ்டு'' வட மாநிலத் தொழிலாளர்கள், மாணவர்களோடு மட்டும் நின்றுவிடவில்லை. சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் வாடகைக்கு குடியிருந்து வரும் குடும்பங்கள் மற்றும் தனிநபர்கள் பற்றிய விவரங்களை அவர்களது புகைப்படம், கைபேசி எண்களோடு பெற்று அருகிலுள்ள போலீசு நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும் என சென்னை மாநகர போலீசு வீட்டு உரிமையாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளது. இந்த விவரங்களைக் கொடுக்கத் தவறும் வீட்டு உரிமையாளர்களுக்கு ஒரு மாத சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்றும் போலீசு எச்சரித்துள்ளது.

ஈழத் தமிழர்கள் விடுதலைப் புலிகளாக அல்லது அவர்களின் ஆதரவாளர்களாக, முசுலீம்கள் தீவிரவாதிகளாகச் சந்தேக வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டு ஒரு பொதுக்கருத்து உருவாக்கப்பட்டதைப் போல, வடமாநிலக் கூலித் தொழிலாளர்களைக் கொள்ளையர்களாகவும், வாடகைக்குக் குடியிருப்போரைச் சந்தேகத்துக்கு உரியவர்களாகவும் முத்திரை குத்துகிறது, தமிழக போலீசின் இந்த உத்தரவு. இது, குடிமக்களின் சுதந்திரமாக நடமாடும் உரிமை மற்றும் குடிபெயரும் உரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது; இனப் பாகுபாடு மற்றும் வர்க்கப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயக விரோத நடவடிக்கை எனக் குறிப்பிட்டுப் பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் இந்த உத்தரவுக்கு எதிராகக் கண்டனம் தெரிவித்துள்ளன.

திருப்பூர் மாவட்டத்தில் வேலை செய்துவரும் வட மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை, திருப்பூர் நகரிலுள்ள டவுன் ஹாலுக்கு ஓட்டி வந்து, விசாரணை நடத்தி, அவர்களது கை ரேகைகளையும் பதிவு செய்யும் போலீசு.





படிப்பகம்

www.padippakam.com



தனது வீட்டில் குடியிருந்து வரும் வாடகைதாரர் பற்றிய விவரங்களை சென்னை போலீசிடம் அளிக்கும் வீட்டு உரிமையாளர்.

எனினும், தமிழகத்தில் நடந்துவரும் கொலை, கொள்ளை ஆகியவற்றைக் காரணமாகக் காட்டி, தனது இந்தப் பீதியூட்டும் உத்தரவை நியாயப்படுத்தி வருகிறது, தமிழக போலீசு. பாதுகாப்பான நகர வாழ்க்கைக்கு இது போன்ற கணக்கெடுப்பு அவசியமென்றும், மும்பய், டெல்லி, பெங்களூரு, புனே போன்ற நகரங்களில் வசிப்போர் பற்றிய விவரங்களைப் போலீசிடம் பதிவு செய்யும் நடைமுறை ஏற்கெனவே அந்நகரங்களில் அமல்படுத்தப்பட்டு வரும்பொழுது, தமிழகத்தில் இது கால தாமதமாகத் தொடங்கப்படுகிறதென அலுத்துக் கொள்கிறது, தமிழக போலீசு. அதாவது, சென்னையின் புற நகர்ப் பகுதியில் நடந்த இரண்டு வங்கிக் கொள்ளைகளையடுத்து, வாடகை வீட்டில் குடியிருப்போரைக் கண்காணிக்க வேண்டும் என்ற முடிவுக்கு போலீசு வரவில்லை; அதன் மனதில் ஏற்கெனவே தயாராக இருந்த திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்தக் கொள்ளைகளை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது என்பதுதான் இப்பதிவின் பின்னணியிலுள்ள உண்மை.

வட மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வரும் கூலித் தொழிலாளர்கள் மத்தியில் நக்சலைட்டுகளும் கலந்து வருகிறார்கள் என ஏற்கெனவே பீதி கிளப்பி வந்த போலீசு, அவர்களைப் பாகுபடுத்திப் பதிவு செய்வதற்கான வாய்ப்பாக இந்தக் கொள்ளைச் சம்பவங்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. நடக்கின்ற எந்தவொரு குற்றத்தையும் தனது அதிகாரத்தையும் மக்கள் மீதான கண்காணிப்பையும் கூட்டிக் கொள்வதற்கான வாய்ப்பாக போலீசு பயன்படுத்தி வருகிறது என்பதுதான் இங்கு நமது கவனத்திற்குரியது.

தமிழகத்தில் போலீசின் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்கெனவே எந்தப் பஞ்சமும் கிடையாது. தீவிரவாதிகளின் நடமாட்டத்தைக் கண்காணிப்பது என்ற பெயரில் முக்கிய ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், பொது இடங்களில் ''மெட்டல் டிடெக்டர் மற்றும் சி.சி.டி.வி. கேமரா'' கண்காணிப்பு; இரவு 11 மணிக்கு மேலாகிவிட்டால், வாகனங்களைத் தடுத்து நிறுத்திப் பரிசோதிக்கும் நேரடிக் கண்காணிப்பு; பகல்பொழுதுகளில் தெருவுக்குத்தெரு நடத்தப்படும் வாகனப் பரிசோதனை என்ற கண்காணிப்பு; இவை ஒருபுறமிருக்க, தெருவில் குடிமக்களின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்காகப் புறக்காவல் நிலையங்கள் புதிதுபுதிதாகத் திறக்கப்படுவதோடு, பல்வேறு தெருச் சந்திப்புகளில் செக்போஸ்டுகளும், சி.சி.டி.வி. கேமராக்களும் அமைக்கப்படுகின்றன. போலீசின் ''இன்ஃபார்மர்களாக''ப் பணியாற்றுவதற்காகவே போலீசு நண்பர்கள் குழு, போலீசு பாய்ஸ் கிளப்புகள் ஒவ்வொரு பகுதியிலும் கட்டப்படுகின்றன. இப்படி தெருக்கள் மற்றும் பொது இடங்களில் இருந்து வரும் போலீசின் கண்காணிப்பு இன்று வீடு வரை நீள்கிறது.

• • •

குடும்ப அட்டை, மக்கள் தொகை கணக்கெடுப்பு போன்றவை மூலம் குடிமக்கள் பற்றிய தேவையான விவரங்களை அரசு பெற்று வந்தாலும், மேலும் மேலும் குடிமக்களின் அந்தரங்க விசயங்களை அறிந்து கொள்ளுவதற்கும், அவற்றைத் தொகுத்து வைத்துக் கொண்டு அவர்களின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் அரசு பல்வேறு வழிகளில் முயன்று வருகிறது. தமிழகத்தில் பயின்று வரும் வடமாநில மாணவர்கள் பற்றி தற்பொழுது தமிழக போலீசு நடத்தத் துணிந்திருக்கும் இந்தக் கணக்கெடுப்பை, மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை ஏற்கெனவே எடுத்து வருவதாகக் கூறுகிறார், சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர். மைய அரசோ தேசிய அடையாள அட்டைத் திட்டம் மூலம் குடிமக்கள் அனைவரையும் தமது முழுக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரும் முயற்சியினைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

தேசிய அடையாள அட்டை (ஆதார்) திட்டம், குடிமக்களின் பெயர், வயது, முகவரி போன்ற வெளிப்படையான விவரங்களை மட்டும் கொண்டிருக்கவில்லை; அவரது வங்கி இருப்பு தொடங்கி அவருக்கு உள்ள நோய் வரை அனைத்து அந்தரங்கமான தகவல்களையும் இந்த ஆதார் அட்டையின் மூலம் அரசு நோட்டம் விடுகிறது.

தமிழகத்தில் நடந்து வரும் கொலை, கொள்ளையைச் சாக்கிட்டு தமிழக போலீசு மேற்சொன்ன கணக்கெடுப்பு - கண்காணிப்பை நடத்தி வரு



படிப்பகம்

www.padippakam.com

கிறதென்றால், மைய அரசு கார்கில் போரைச் சாக்காக வைத்து ஆதார் திட்டத்தைக் கொண்டுவந்தது. பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் கார்கில் போரை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி, தீவிரவாத ஊடுருவலைத் தடுப்பதற்காக எல்லைப்புறப் பகுதி களில் வசிக்கும் மக்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க வேண்டுமென ஆலோசனை கூறியது. பா.ஜ.க. கூட்டணி ஆட்சி இந்த ஆலோசனையின் அடிப்படையில், தேசிய பாதுகாப்பை மறுசீரமைப்பது என்ற அறிக்கையைத் தயாரித்தது. அதில் வங்கதேச முசுலீம்கள் ஊடுருவலை மிகப் பெரும் அச்சுறுத் தலாகக் காட்டி, தேசிய அடையாள அட்டைத் திட்டத்தை நாடெங்கும் கொண்டு வரும் முடிவை எடுத்தது. இதற்கு ஏற்ப, குடிமக்களின் அந்தரங்க விசயங்களையும் பதிவு செய்வதற்கு ஏற்றவாறு மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. பா.ஜ.க.விற்குப் பின் ஆட்சியைப் பிடித்த காங்கிரசு கூட்டணி அரசு, 2008 - ஆம் ஆண்டு மும்பயில் நடந்த தீவிரவாதத் தாக்கு தலைச் சாக்காகக் காட்டி, தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு தனியான ஆணையத்தை அமைத்தது.

''தேசிய அடையாள அட்டை இருந்தால்தான் இனி ரேஷன் பொருட்கள் கிடைக்கும்; சமையல் எரி வாயு உருளை கிடைக்கும்; அரசு அறிவிக்கும் சமூக நலத் திட்டங்களைப் பெற முடியும்'' என அரசு அடுத் தடுத்து போகிறபோக்கில் அறிவிப்பதன் மூலம் இத் திட்டத்தில் பொதுமக்கள் தாமே முன்வந்து பதிவு செய்துகொள்வதைக் கொல்லைப்புறவழியில் கட் டாயமாக்கி வருகிறது. ஆதார் அட்டை தனி மனித உரிமைகள், அந்தரங்கங்களை மீறுகிறது என மனித உரிமை அமைப்புகளும், ஜனநாயக இயக்கங்களும் சுட்டிக் காட்டினாலும், அந்த எச்சரிக்கையை நடுத்தர வர்க்கம்கூடப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. ஏதாவதொரு அட்டை இருந்தால்தான் தமது அடையாளத்தை அரசிடம் உறுதிப்படுத்த முடியும் என்ற நிலைக்குப் பொதுமக்கள் தள்ளப்பட்டிருப் பதால், பொது மக்கள் பற்றிய விவரங்கள் அனைத் தையும் பதிவுசெய்து, அவர்களைக் கண்காணிக்கும் திட்டத்தைச் செயற்படுத்துவது அரசுக்கு எளிதாகி விடுகிறது.

•••

வடமாநிலத் தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் வாடகை வீட்டில் குடியிருப்போர் பற்றித் தமிழகப் போலீசு நடத்திவரும் பதிவின்பொழுது அளிக்கப்படும் புகைப்படங்களும், கைபேசி விவரங் களும் போலீசாரால் தவறாகப் பயன்படுத்தப்படாது என்பதற்கு என்ன உத்தரவாதமுள்ளது என்ற கேள்விகு, ''எங்களை நம்புங்கள்'' என யோக்கியனைப் போலப் பதில் அளித்திருக்கிறது, சென்னை போலீசு. சென்னை போலீசாரால் பதியப்படும் வழக்குகளுள் 60 சதவீத வழக்குகள் பொய்யானவை என மனித உரிமை ஆர் வலர்கள் வெளியிட்டுள்ள விவரத்தோடு ஒப்பிட்டால், போலீசின் நேர்மையும், நாணயமும் நம்மைப் பீதி யடையச் செய்துவிடும். சென்னை வேளச்சேரியில் நடந்த போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட சுஜய்குமார் வங்கிகளை நோட்டம் விடுவது போல போலீசாரால் வெளியிடப்பட்ட காட்சியின் நம்பகத் தன்மை குறித்து ஐயம் எழுப்பப்பட்டு வரும் சூழ் நிலையில், இந்தக் கேள்வியை அவ்வளவு எளிதாகப் புறக்கணித்துவிட முடியாது.

''போலீசு கேட்கும் விவரங்களை அளிப்பதற்குச் சமூக விரோதிகள்தான் அச்சப்பட வேண்டும். சட்டப் படி கண்ணியமாக நடந்துகொள்ளும் பொதுமக்கள் ஏன் அச்சப்பட வேண்டும்?'' என்ற எதிர்க்கேள்வியின் மூலம் சாதாரண பொதுமக்களை சமாதானப்படுத்த முயலுகிறது, போலீசு. சமூக விரோதி யார், சட்டப்படி நடக்கும் குடிமகன் யார் என்ற கேள்விக்கு அரசிடம், போலீசிடம் இருக்கும் அளவுகோலே வேறானது. ஐந்தாறு மாதங்களுக்கு முன்பாகச் சட்டப்படி நடக்கும் குடிமக்களாகக் கருதப்பட்ட கூடங்குளம் - இடிந்த கரை பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், அணு உலையை எதிர்த்துத் தீவிரமாகப் போராடத் தொடங் கிய பிறகு, அவர்களைச் சமூக விரோதிகளாகக் காட்ட அரசும் போலீசும் தொடர்ந்து முயன்று வருகின்றன. கோவை பகுதியைச் சேர்ந்த சிறு தொழில் அதி பர்கள் மின்வெட்டைக் கண்டித்துப் போராடியபொழுது, தமிழக போலீசு அவர்களை லத்தியால் அடித்துத் துரத் தியது. கண்ணியமான குடிமக்கள் சட்டம் ஒழுங்கிற்குச் சவால் விடுப வர்களாக மாறியது அந்தப் போராட்ட தருணத்தில்தான்.

ஆங்கிலேய காலனிய ஆட்சியின் பொழுது தம்மை எதிர்த்துப் போரா டிய பழங்குடி இன மக்களைக் குற்றப் பரம்பரை சாதியாக முத்திரை குத்திய வெள்ளை துரைமார்கள், அம்மக் களை இரவு நேரங்களில் போலீசு

அதிகரித்துவரும் போலீசு கண்காணிப்பு: இரு சக்கர வாகன ஓட்டுநரிடம் போலீசு நடத்தும் விசாரணை மற்றும் சோதனை.





படிப்பகம்

www.padippakam.com

நிலையங்களில் அடைத்து வைத்துக் கண்காணித்தார்கள். தகவல் தொழில்நுட்ப வசதிகள் பெருகிவிட்ட இன்றைய மறுகாலனிய கட்டத்தில், இந்திய மக்களைக் கணினி வழியாகக் கண்காணிக்கத் தொடங்கியுள்ளனர், பழுப்பு நிற துரைமார்கள். கண்காணிக்கும் முறை வேண்டுமானால் மாறியிருக்கலாம். ஆனால், இரண்டு துரைமார்களுக்கும் பொதுமக்களைப் பற்றிய பார்வை ஒன்றுதான்.


ஆதார் அட்டை வழங்குவதற்காக மதுரையில் நடத்தப்பட்ட ''கேம்ப்''.

மைய அரசு சமீபத்தில் தேசிய தீவிரவாதத் தடுப்பு மையம் ஒன்றை அமைக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. இந்த அமைப்பின் கீழ் வரும் மைய அரசின் உளவுத் துறைக்கு, சந்தேகப்படும் அனைவரையும் கைது செய்யும் அதிகாரத்தையும் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதனை மாநில அரசுகளின் உரிமையில் தலையிடுவதாகக் கூறி, ஜெயா, மோடி உள்ளிட்டோர் எதிர்த்து சவுண்டு விட்டு வருகின்றனர். இந்தப் பிரச்சினையில் சந்தேக லிஸ்டில் கொண்டு வரப்படும் நபரைக் கைது செய்யும் அதிகாரம் மாநில போலீசிடம் இருக்க வேண்டுமா, அல்லது மைய உளவுத் துறையிடம் இருக்க வேண்டுமா என்பது குறித்துதான் காங்கிரசிற்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே மோதல் நடக்கிறதேயொழிய, மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுவது பற்றிப் போலி கம்யூனிஸ்டுகள்கூட அக்கறை கொள்ளவில்லை.

அரசு நடைமுறைப்படுத்தி வரும் தனியார்மய - தாராளமயப்பொருளாதாரக் கொள்கைகளால் தமது வாழ்வாதாரங்களை இழந்துவரும் விவசாயிகள், தொழிலாளிகள், வணிகர்கள், சிறுதொழில் அதிபர்கள் என ஆகப் பெரும்பான்மையான மக்கள் அரசை எதிர்த்துப் போராடத் தயாராகிவரும் சூழ்நிலையில்தான் அரசு அனைத்துக் குடிமக்களையும் தனது முழு கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டுவரத் தயாராகிறது. தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் திணிக்கப்படும் மறுகாலனியாக்கம், சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகம் போன்றவற்றையெல்லாம் வேண்டாத சதைப் பிண்டமாக, தனக்குத் தொந்தரவு தரும் விசயமாகப் பார்க்கிறது. மறுகாலனியாக்கம் சட்டத்தின் ஆட்சி என்ற இடத்தில் போலீசின் ஆட்சியைக் கொண்டு வருகிறது. மக்களின் சட்டபூர்வ போராட்டங்களைக்கூட, அது துப்பாக்கி முனையில் தீர்த்துவிடத்தான் முயலுகிறது.

வட மாநிலத்திலிருந்து வரும் கூலித் தொழிலாளர்கள், வாடகை வீட்டில் குடியிருப்போர் பற்றிய விவரங்களையெல்லாம் போலீசிடம் பதிவு செய்ய வேண்டும்; வட மாநில மாணவர்கள் பற்றிய விவரங்களைக் கல்லூரி நிர்வாகம் பதிவு செய்ய வேண்டும்; ஆதார் அட்டையை அல்லது அரசால் தரப்படும் வேறு ஏதாவதொரு அட்டையை, நாய்க்கு மாட்டிவிடும் லைசென்சு போன்று எப்போதும் கழுத்தில் மாட்டிக் கொண்டோ அல்லது சட்டைப் பையிலோ வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதெல்லாம் சட்டபூர்வமாகவே ஒரு பாசிச ஆட்சி திணிக்கப்பட்டு வருவதன் அடையாளங்கள்தான்.

வாய்ப்பு கிடைத்தால், கொலை - கொள்ளை, தீவிரவாதம் போன்ற குற்றச் செயல்களைக் காட்டி பொதுமக்களை இந்தக் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வருகிறார்கள்; அதற்கு வாய்ப்பில்லை இல்லாதபொழுது, அடையாள அட்டை இருந்தால்தான் அரசின் சமூக நலத் திட்டங்கள் கிடைக்கும்; ரேஷனில் அரிசியும், கோதுமையும் கிடைக்கும் எனப் பொய்யான காரணங்களைச் சொல்லி மக்களைத் தமது கண்காணிப்பிற்குள் இழுத்துக் கொள்கிறார்கள்.

சந்தேகப்படும் யாரையும் கைது செய்யலாம்; அவர்களைப் போலி மோதலில் சுட்டுக்கூடக் கொல்லலாம் என்றபடி அரசு பாசிசமயமாகிவரும்பொழுது, இந்த அடையாள அட்டைகள் சுட்டு வீழ்த்தப்பட்ட அல்லது கொட்டடியில் கொல்லப்பட்ட பிணங்களை அடையாளப்படுத்ததான் பயன்படும். மற்றபடி, தீவிரவாதத்தையும் கொலை - கொள்ளை போன்ற குற்றச் செயல்களையும் தடுக்கத்தான் இந்தக் கண்காணிப்பு தேவைப்படுகிறது என இந்திய ஆளுங்கும்பலும் போலீசும் சொல்வதெல்லாம் வெறும் பம்மாத்துதான். இதனைப் புரிந்துகொள்ள தீவிரவாதத்தைத் தடுப்பது என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட தடா, பொடா சட்டங்கள் யார் மீது ஏவப்பட்டது என்பதைக் கொஞ்சம் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தேசியத்தின் பெயரால் பாசிச இனவெறி!

**பிற மாநிலங்களில் இருந்து பிழைப்புத்தேடி குடியேறும் அனைவரும் கிரிமினல் குற்றவாளிகள் என்று கூறி சிவசேனா பாணியில் நஞ்சு கக்குகிறது த.தே.பொ.க. தலைமை.**

பொதுவுடைமையைத் தனது பெயரில் தாங்கி, தேசிய இன விடுதலையைத் தனது இலட்சியமாக அறிவித்துக் கொண்ட ஒரு கட்சி குறுகிய இனவெறிக் கட்சியாக, அதுவும் பாசிச இனவெறிக் கட்சியாகவும் இருக்க முடியுமா? முடியும் - என்று திரும்பத் திரும்பக் காட்டி வருகிறது, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி (த.தே.பொ.க.) என்ற பெயரிலுள்ள ஒரு அமைப்பு.

பாட்டாளி வர்க்க அரசியல் சித்தாந்தத்துக்கு மாறாக, எதிராக, இணையாக, தொழிற்சங்கப் பிழைப்புவாதத்தைத் தனது சித்தாந்தமாகக் கொண்டிருந்த நம்பூதிரிபாடின் சீடர்கள் அல்லவா, இவர்கள்! அதனாலேயே தமது தொப்புள் கொடி உறவைக் கைவிட மறுக்கிறார்கள்! தாங்களே அறிவித்துக் கொண்ட இலட்சியத்தையும் கொள்கையையும் மட்டுமல்ல; சொந்த அறிவையும் புதைகுழியில் போட்டுவிட்டு அவற்றுக்கு எதிரான நிலைக்கு வலிந்து வாதம் புரிகிறார்கள்.

**''தமிழர் இன எழுச்சி ஏற்படும் போதெல்லாம் தமிழகத்திலுள்ள இடதுசாரி இந்தியத் தேசியவாதிகளும் வலதுசாரி இந்தியத் தேசியவாதிகளும் பீதி அடைகின்றனர். இந்தியத் தேசியத்திற்கும் இந்திய ஒற்றுமைக்கும் இடையூறு ஏற்பட்டு விடுமோ என்று கலவரமடைகின்றனர்; கலங்கித் தவிக்கின்றனர்.''**

**''இனி முரண்பாட்டையும் இனச் சிக்கலையும் வெறும் வர்க்கச் சிக்கலாகவும் அரசியல் கட்சிகளின் குறைபாடுகளாகவும் திரித்துக் காட்டி இரசவாதம் செய்வார்கள் இந்தியத் தேசிய இடதுசாரிகள்''** (த.தே.பொ.கவின் பத்திரிக்கையான தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம், 2012 மார்ச் 16-13) என்று குற்றஞ்சாட்டும் மணியரசன் கும்பல் அதற்கு எடுத்துக்காட்டாக, ம.க.இ.க. மற்றும் அதன் தோழமை அமைப்புகளையும் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் இவற்றின் நிலைப்பாடுகளையும் சுட்டுகிறது.

**இன முரண்பாட்டையும் இனச் சிக்கலையும் அலசி ஆராய்ந்து கரை கண்ட மேதையாகிய, சிந்தனைச் சிற்பியாகிய மணியரசனே!** நேர்மையிருந்தால் இங்கே நாங்கள் எழுப்பும் சில கேள்விகளுக்கு உங்கள் பேராசான் நம்பூதிரிபாடு பாணியில் சுற்றி வளைக்காமல் நேரடியாகப் பதில் சொல்லுங்கள்:

இந்திய தேசியத்துக்கும் அதனால் சிறைப்படுத்தப்பட்டுள்ள தமிழ், மலையாள, கன்னட, தெலுங்கு, மராத்தி, ஒடியா, வங்காளி, காசுமீரி, பஞ்சாபி, அசாமி முதலிய தேசிய இனங்களுக்கும் இடையிலான முரண்பாடுதானே பகை முரண்பாடு? அவ்வாறின்றி இத்தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் பகை முரண்பாடுகளா? ஒடுக்கப்படும் இந்த தேசிய இனங்கள் தமது எதிரியாக, பகைச்சக்தியாகக் கொண்டுள்ளது, இந்திய தேசியத்தைத் தானே தவிர தங்களைப் போன்ற நிலையிலுள்ள பிற தேசிய இனங்களை எதிரியாக பகை சக்தியாகக் கொள்ள முடியுமா?

நேரடியாகவே கேட்கிறோம்: தமிழ் தேசிய இனத்துக்கும் இந்திய தேசியத்துக்கும் இடையிலானதுதான் பகை முரண்பாடு; தமிழ் தேசியத்தின் எதிரியாக, பகை சக்தியாக இருப்பது, இந்திய தேசியம்தான்! அண்டை தேசிய இனங்களாக இருக்கும் மலையாள, கன்னட, தெலுங்கு இனங்களோடு ஆற்றுநீர் பகிர்வு, எல்லைப் பிரச்சினை போன்றவைகளில் முரண்பட்டு நிற்பதாலேயே தமிழ் தேசிய இனம் அவற்றை பகை சக்தியாக எதிரி சக்தியாகக் கருத முடியுமா?

இன்னும் நேரடியாக, பகிரங்கமாகவே கேட்கிறோம்: முல்லைப் பெரியாறு - தேவிகுளம், பீர்மேடு பிரச்சினைக்காக மலையாளியையும்; காவிரி - கோலார் பிரச்சினைகளுக்காக கன்னடனையும்; பாலாறு - சித்தூர் பிரச்சினைகளுக்காக தெலுங்கனையும் தமிழன் எதிரியாகக் கொண்டு பகைநிலை எடுக்க வேண்டுமா? அப்படிச் செய்வதைத் தானே இந்திய தேசியம் விரும்புகிறது. அதுதானே இந்திய தேசியத்துக்குத் துணைபோவது? இதைத் தானே த.தே.பொ.க தலைமையாகிய நீங்கள் செய்கிறீர்கள்?

இந்திய தேசியத்திற்குள் சிறை வைக்கப்பட்டிருக்கும் தேசிய இனங்களுக்கிடையிலான நதிநீர் மற்றும் எல்லைப் பிரச்சினைகளைப் பகை முரண்பாடுகளாக வளர்த்து மோதவிடுவது தானே இந்திய தேசியத்தை பராமரித்து, பாதுகாப்பது; இதன் மூலம் இந்திய தேசியத்துக்கு எதிரான போராட்டங்களை வலுவிழக்கச் செய்வதுதானே த.தே.பொ.க.வின் வேலையாக இருக்கிறது?

தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளைப் பகை முரண்பாடுகளாக வளர்த்து மோதவிடுவிடும் த.தே.பொ.க.வின் கொள்கையை, வேலையை ம.க.இ.க. மற்றும் அதன் தோழமை அமைப்புகள் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் செய்யவில்லை என்று குத்தாட்டம் போடுகிறது மணியரசன் கும்பல்.



படிப்பகம்

www.padippakam.com

‘‘முல்லைப் பெரியாறு அணைய மீட்க எல்லையை மூடு! பொருளாதாரத் தடைபோடு!’’ என்ற தலைப்பிலான ம.க.இ.க. மற்றும் அதன் தோழமை அமைப்புகளின் 2012 ஜனவரி வெளியீடு குறித்து, **‘‘முல்லைப் பெரியாறு உரிமையை மீட்க, கேரளாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும், கேரளாவுக்குச் செல்லும் 13 பாதைகளை மூட வேண்டும் என்றும், அது கூறுவது சரி. ஆனால் இதே ம.க.இ.க. கேரளாவுக்குப் பொருளாதாரத் தடை விதிக்கும் நமது கோரிக்கையை 11.02.2010-இல் எதிர்த்து தனது வினவு இணையத் தளத்தில் எழுதியது’’** என்று த.தே.பொ.க. வாதிடுகிறது.

முல்லைப் பெரியாறு பிரச்சினையில் கேரளத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான முரண்பாடு 2012 - ஜனவரியில் நிலவிய அளவுக்கு 2010 - பிப்ரவரியில் கூர்மையடைந்திருக்கவில்லை. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வினவு இணைய தளத்தில் எழுதியதை எடுத்து வைத்துக் கொண்டு மேற்படி கோரிக்கைகளை முன்வைத்த தமிழினவாதிகளின் நிலைப்பாட்டிற்கு எதிராகவும் முன்னுக்குப்பின் முரணாக எழுதுவதாகவும் இப்போதைய ‘தமிழின எழுச்சியை மடைமாற்றுகிறது ம.க.இ.க.’ என்றும் அவதூறு செய்கிறது த.தே.பொ.க. அப்போதும்கூட கேரளாவுக்கு எதிரான பொருளாதார தடை, முற்றுகை விதிப்பது உடனடி நடவடிக்கையாக இருக்கக்கூடாது கடைசி பட்சமாக நடத்தலாம் என்றுதான் வினவு இணையத்தளம் எழுதியிருந்தது.

2012 ஜனவரி வெளியீட்டில் முல்லை பெரியாறு பிரச்சினை கூர்மையடைந்ததற்கான அடிப்படையை விளக்கும் போது தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கத்தின் விளைவாக எழுந்தது என குறிப்பிட்டிருக்கிறோம். இது ஏதோ இனப்பிரச்சினை, வர்க்கப் பிரச்சினையாகவும் இந்திய தேசியத்திற்கு ஆதரவாகவும் மடைமாற்றுவது என்றும் த.தே.பொ.க. வியாக்கியானம் செய்கிறது.

இந்திய தேசியத்தை உருவாக்கிப் பேணி வளர்க்கும் ஆளும் வர்க்கங்களையும் அவர்களின் தனியார்மயம் - தாராளமயமாக்கம் - உலகமயமாக்கத்தையும் ம.க.இ.க. முதலிய புரட்சிகர அமைப்புகள் எதிர்ப்பது, எப்படி த.தே.பொ.க. சொல்வதைப் போல இன உணர்வாளர்களை இந்திய தேசியவாதத்திற்குள் இழுத்துச் செல்வதாகும்?

ஆனால், இந்திய தேசியத்தையும், அதைக் கட்டிக் காக்கும் இந்திய அரசையும் தனது பகைச் சக்தியாக அறிவித்துக் கொண்டுள்ள த.தே.பொ.க. அவற்றுக்கு எதிராக ஒரு புல்லைக் கூட பிடுங்கியதில்லை என்பது இருக்கட்டும்; ம.க.இ.க. முதலிய புரட்சிகர அமைப்புகளைவிட தமிழீழத்தின் உறுதியான, ஆதரவாளராகப் பீற்றிக் கொள்ளும் த.தே.பொ.க.வும் பிற தமிழ் இனவாதிகளும் கூட முள்ளிவாய்க்கால் படுகொலை வரை இந்தியாவை (இந்திய தேசியம், இந்திய அரசு முதலியவற்றை) தமிழீழ விடுதலையின் பகைச் சக்தி என்ற உண்மையைக் சொல்லத் துணிந்ததுண்டா?

நக்சல்பாரிப் புரட்சிக் கட்சி தோன்றிய காலத்திலிருந்தே இந்திய தேசியத்துக்கு எதிராக தேசிய இனங்



சென்னையில் வடமாநிலத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்களுக்கு வாடகைக்கு வீடு தர வீட்டு உரிமையாளர்கள் தயங்குவதால், ஆலந்தூர் பகுதியில் இரும்புக் கடைகளில் வேலை செய்யும் வட மாநிலத் தொழிலாளர்கள் மேம்பாலத்தின் அடியில் தங்கியிருக்கும் அவலம்.

களின் விடுதலையை உயர்த்திப் பிடித்து வந்திருக்கிறது. அதனாலேயே தேசிய இனப் பிரச்சினை என்பது இனிமேலும் கிடையாது, முடிவுக்கு வந்துவிட்டது என்று தனது கட்சிப் பேராயத்தில் தீர்மானம் நிறைவேற்றியது, நம்பூதிரியின் போலி மார்க்சிஸ்ட் கட்சி. அப்போதும் அந்தக் கட்சியில்தான் இன்றைய த.தே.பொ.க. தலைமை குப்பை கொட்டிக் கொண்டிருந்தது. அதன்பிறகு வெவ்வேறு அவதாரமெடுத்து, தனது விரைவான சொந்த வளர்ச்சிக்கான குறுக்குவழி - ‘‘அடையாள அரசியல்’’ என்ற முறையில் த.தே.பொ.க. தலைமை தெரிந்தெடுத்துக் கொண்டதுதான், தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை. மற்றபடி தமிழ்த் தேசிய இனத்தின் மீது அதற்குள்ள பற்றினால் அல்ல.

ஏற்கெனவே இங்கே பல பத்து தமிழ்த் தேசிய இனக் குழுக்கள் உள்ளன; அவை எல்லாவற்றையும் விடத் த.தே.பொ.கட்சித் தலைமை வித்தியாசமானதும் ஆழ்ந்த சிந்தனையும் தமிழ்த் தேசியத்தின் தீவிரப் பற்றும் தெளிவும் கொண்டதாகக் காட்டிக் கொள்கிறது; ஆனால், நடைமுறையில் தமிழ்த் தேசியத்துக்கு எதிராகவே த.தே.பொ.கட்சித் தலைமை பலவாறு உளறிக் கொட்டிக் கிளறி மூடுகிறது.

நிலவுடைமை பண்பாட்டையும், பார்ப்பனிய சனாதனத்தைப் புகுத்திய நிலவுடைமை மன்னர்களின் அருமை பெருமைகளை ஏற்றிப் போற்றி பாரம்பரிய உரிமை பாராட்டி தமிழ்த் தேசியத்தைக் கொச்சைப்படுத்துகிறது. இந்திய தேசியத்தை - இந்து தேசியத்தை உயர்த்திப் பிடித்த பார்ப்பனிய பாரதியைப் போற்றுகிறது. இராமன் தமிழ்க் கடவுள் என்று சொல்லி இந்துத்துவத்தையும் தமிழ்த் தேசியத்துக்குள் புகுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு உண்மையில் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான இந்துத்துவ - இந்திய தேசியத்தையும் ஏற்றுக் கொண்டுள்ள த.தே.பொ.க. தலைமை, குறுகிய இனவெறி சிவ சேனா பாசிசத்தையும் கையிலெடுத்துக் கொண்டுள்ளதில் வியப்பில்லை. பிற மாநிலங்களில் இருந்து பிழைப்புத் தேடித் தமிழகத்தில் குடியேறும் பிற மாநிலத்தவர்கள் அனைவரும் கிரிமினல் குற்றவாளிகள், தமிழர்களுக்கு எதிராக ஆதிக்கம் புரிபவர்கள், அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று கூறி சிவசேனாக்களின் பாசிச இனவெறி பாணியில் நஞ்சு கக்குகிறது, த.தே.பொ.க. தலைமை.

**''கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் வன்முறை எனப் பலக் குற்றச் செயல் தமிழ்நாட்டில் பெருகிவிட்டதற்கு முகாமையான காரணம் வெளிமாநிலத்தவர்களின் மிகை வருகை என்று தமிழகக் காவல்துறை அறிவித்துள்ளது''** என்று கூறும் த.தே.பொ.க. தலைமை, தானும் அதை வழிமொழிந்து, **''தமிழகத்தில் தமிழர்கள் நடத்தும் கொள்ளை, பாலியல் வன்முறைகளை விட அதிக விகிதத்தில் வெளிமாநிலத்தவர் நடத்தும் கொள்ளை, பாலியல் வன்முறை நிகழ்வுகள் இருக்கின்றன''** என்று பச்சையாக கோயாபல்சு புளுகுகளை அள்ளி வீசுகிறது.

குடியேறும் வெளிமாநிலத்தவர் அனைவரும் ஒரே வகையினர் அல்ல. இன்றைய தனியார்மயம், தாராளமயம், உலகமய சூழலில் வாழ்வாதாரங்கள் பிடுங்கப்பட்டு, துரத்தியடிக்கப்படும் உழைப்பாளி மக்கள் பிற மாநிலங்களுக்குப் புலம்பெயர்ந்து, ஓலைக்கொட்டைகளிலும், தகரக் கொட்டடிகளிலும் புழுங்கித் தவிக்கின்றனர். தமிழ் ஒப்பந்தக்காரர்களிடம் கொத்தடிமைகளாக அற்பக் கூலிக்கும், சில தமிழ்க் கிரிமினல்களின் கேட்பாரற்ற தாக்குதல், வழிப்பறிக்கும் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கும் பலியாகிறார்கள்.

தமிழகத்திலுள்ள சுயநிதிக் கல்லூரிகளில் சேர்ந்து சீரழிந்த பண்பாட்டிலும், கிரிமினல் குற்றங்களிலும் ஈடுபடும் வெளிமாநிலத்தவர் வேறொரு பிரிவினர். இவர்கள், தமது சொந்த மாநிலங்களில் குறுக்கு வழியில் செல்வத்தைக் குவிக்கும் குடும்பங்களின் செல்லப் பிள்ளைகள். இந்த வேறுபாட்டை மூடிமறைக்கிறது, த.தே.பொ.க. தலைமை.

தமிழ்த் தேசத்தில் குடியேறும் வெளிமாநிலத்தவர்கள் எல்லாம் அடகுக்கடை, சினிமா முதலீட்டாளர்கள், தமிழர்கள் மீது ஆதிக்கமும் சுரண்டலும் செய்பவர்கள் மட்டுமல்ல, கிரிமினல் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் என்று பார்ப்பன - பாசிச ஜெயாவும் அதன் போலீசும் கூறுவதை வழிமொழிந்து மணியரசன் கும்பல் குற்றஞ் சுமத்துகிறது. அதனால் வெளிமாநிலத்தவர் அனைவரையும் வெளியேற்ற வேண்டும் என்று போராடவும் செய்கிறது.

வெளி தேசங்களில் குடியேறும் தமிழர்கள் எல்லாம் உழைக்கும் மக்கள்; குடியேறும் தமிழர்கள் அம்மாநிலங்களில் ஆதிக்கம் புரிபவர்களோ சுரண்டுபவர்களோ அல்ல



சென்னை-பள்ளிக்கரணையில் வட மாநிலத்தைச் சேர்ந்த கொள்ளைக்காரன் என்ற சந்தேகத்தின் பெயரில் பொது மக்களால் கொடூரமாகத் தாக்கப்பட்ட ஆந்திர வாலிபர்: இனப்பாகுபாடு என்ற கொடிய நஞ்சு.

என்று புளுகுகிறது, த.தே.பொ.க. தலைமை. இதுவும் உண்மையல்ல. வெளிமாநிலங்களில் குடியேறும் தமிழர்களிலும் ஒருபிரிவினர் கந்துவட்டி - லேவாதேவியிலும், அம்பானி, டாடா, பிர்லாக்களின் கார்ப்பரேட் நிறுவனங்களில் அதிகார வர்க்க முதலாளிகளாகவும், (சசிகலா) நடராசன், தம்பிதுரை, தேவநாதன் போன்ற தமிழர்கள் உ.பி., பீகார், அரியானாவில் சுயநிதிக் கல்லூரிகள் வைத்துக் கொள்ளையடிக்கிறார்கள், குடிபெயரும் தமிழர்கள் மற்றும் புலம் பெயரும் ஈழத்தமிழர்களிலும் ஒரு சிலர் குற்றச் செயல்களில் பிடிபடுகின்றனர். அதற்காக எல்லாத் தமிழர்களையும் வெளியேற்ற வேண்டும் என்பது சரியாகுமா என்று மணியரசன் கும்பல்தான் கூற வேண்டும்.

பாசிசக் கழிசடை அரசியல் மணியரசன்களே! ஆசியாவிலேயே மிகப் பெரிய குடிசைப் பகுதியான மும்பையின் தாராவியில் வாழும் ஐந்து இலட்சம் உழைக்கும் தமிழ் மக்களைத் தாக்கும் சிவசேனா இனவெறியர்களுக்கும், உலகம் முழுவதும் புலம் பெயர்ந்து வாழும் இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்களைத் தாக்கும் அந்தந்த நாட்டு நிறவெறி பாசிஸ்டுகளுக்கும் உங்களுக்கும் என்ன வேறுபாடு?

பின் குறிப்பு: **மணியரசன் வகையறாக்கள் எமக்கு எதிராகத் தமது அவதூறுகளைத் தொடர்வதற்கு வசதியாக ஒரு தகவல்: எமது தோழமை அமைப்பான புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி நூற்றுக் கணக்கில் ஒரிசா, ஜார்கண்ட், பீகார், சட்டிஸ்கர், வங்காள புலம்பெயர் தொழிலாளர்களை உறுப்பினர்களாக்கி வருகிறது!**

**- ஆசிரியர் குழு.**



படிப்பகம்

## அனைத்துலக மகளிர் தினம்:

# பெண்ணுரிமையின் போராயுதம்

உழைக்கும் பெண்கள் தங்கள் உரிமைக்காக போராடி இரத்தம் சிந்திய நாளான மார்ச் 8 அன்று பெண்கள் விடுதலை முன்னணியும் புரட்சிகர அமைப்புகளும் இணைந்து தாங்கள் செயல்படும் பகுதிகளில் வர்க்க உணர்வோடு இப்போராட்ட நாளைக் கொண்டாடி, பெண் விடுதலைக்கான போராட்டக் குரலை எதிரொலித்தன.



திருச்சியில், மார்ச் 8 அன்று காலை பெண்ணுரிமைப் போராளி தந்தை பெரியாரின் உருவச் சிலைக்கும், அம்பேத்கரின் உருவச் சிலைக்கும் விண்ணதிரும் முழக்கங்களுடன் மாலை அணிவித்து, கூடியிருந்த மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. மாலையில் உறையூர் கைத்தறி நெசவாளர் திருமண மண்டபத்தில் நடந்த அரங்குக் கூட்டத்தில், செயலாளர் தோழர் இந்துமதி, மார்ச் 8 மகளிர் தினம் என்பது கேளிக்கை நாளல்ல, போராட்ட நாள் என்பதை உணர்த்தி, பெண் விடுதலைக்குப் போராட அறைகூவினார். வழக்குரைஞர் மீனாட்சி, பெண்கள் மீதான அனைத்து வகையான அடக்குமுறைகளுக்கும் சட்டத்தின் மூலம் தீர்வு இல்லை என்பதையும், பெண்கள் அமைப்பாகத் திரண்டு போராடுவதன் மூலமே பெண் விடுதலையைச் சாதிக்க முடியும் என்பதையும் உணர்த்தினார். நோக்கியா நிறுவனத்தில் வேலை பார்க்கும் போது விபத்து என்ற பெயரில் கொல்லப்பட்ட அம்பிகா என்ற தொழிலாளியின் துயரக் கதையைக் கூறி, மறுகாலனியாதிக்கத்தின் கீழ் பெண்கள் மீதான அடக்குமுறை தீவிரமாகி வருவதையும், பெண்களை நுகர்வுப் பொருட்களாகப் பார்க்கும் வக்கிரத்தையும் விளக்கி, மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராகப் பெண்கள் அமைப்பாகத் திரண்டு போராட வேண்டிய அவசியத்தை ம.க.இ.க. தோழர் துரை.சண்முகம் உணர்த்தினார்.

பெண்கள் விடுதலை முன்னணியை அறிமுகப்படுத்தும்அறிமுக ஆட்டத்துடன், பெண் தோழரின் சிலம்பாட்டமும், தற்காலப் பெண்களின் அவலத்தைச் சித்தரிக்கும் நவீன அடிமைகள் நாடகமும், முல்லைப் பெரியாறு அணை எனும் நாடகமும், சிறுவர் கலைக்குழுவின் கழியல் ஆட்டமும், ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் கலைநிகழ்ச்சியும் பார்வையாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்று போராட்ட உணர்வூட்டன.

சேலம் - அண்ணாநகரில் , மார்ச் 8 அன்று பெ.வி.மு. சார்பில் தெருமுனைக் கூட்டமும் கலை நிகழ்ச்சியும் நடந்தது. தனியார்மய தாராளமயத்துக்கு எதிராக உழைக்கும் வர்க்கப் பெண்கள் அணிதிரண்டு போராட அறைகூவி மாவட்டத் தலைவர் தோழர் பத்மா, பொருளாளர் தோழர் அஞ்சலி, செயலாளர் தோழர் கந்தம்மா, ம.உ.பா. மையத்தின் செயலாளர் வழக்குரைஞர் மாயன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இத்தெருமுனைக் கூட்டமும் புரட்சிகர பாடல்களுடன் நடந்த பறையாட்டமும் பகுதிவாழ் உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைப்பதாக அமைந்தன.

- பு.ஜ. செய்தியாளர்கள்.

# "பகத்சிங் வழியில் விடுதலைப் போரைத் தொடர்வோம்!"

## - பு.மா.இ.மு.வின் பிரச்சாரம், உறுதியேற்பு!

''அநீதிக்கு எதிரான இந்தப் போர் எங்களோடு தொடங்கவும் இல்லை, எங்கள் வாழ்நாளோடு முடியப் போவதுமில்லை'' என்று முழங்கி தூக்கு மேடையேறிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளான பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் நினைவு நாளான மார்ச் 23-ஆம் தேதியன்று, புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி தாங்கள் செயல்படும் பகுதிகளில் பகத்சிங் நினைவை நெஞ்சிலேந்தி, அந்தப் போரை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல உறுதியேற்று தெருமுனைக் கூட்டங்களை நடத்தின.



சென்னையில், மார்ச் 23 அன்று பகத்சிங்கின் தியாகத்தைப் போற்றி அவரது இலட்சியக் கனவை நிறைவேற்ற உறுதியேற்று எழும்பூர் டாக்டர் சந்தோஷ் நகரில் பு.மா.இ.மு. தெருமுனைக் கூட்டத்தை நடத்தியது. 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட நடந்த இந்தக் கூட்டத்தில் முன்னணியாளர்கள் சிறப்புரையும், தோழர்களின் கலைநிகழ்ச்சி மற்றும் ஓவியக் காட்சியும் ஒரு மறுகாலனியாதிக்கத்தின் தாக்குதலை எதிர்த்து மீண்டும் ஒரு விடுதலைப் போரைத் தொடுக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தி போராட அறைகூவியது.

பென்னாகரம் பேருந்து நிலையத்தில், மார்ச் 23 அன்று காலை தியாகத் தோழர் பகத்சிங்கின் உருவப் படத்தைத் திறந்து வைத்து உறுதியேற்ற பு.மா.இ.மு. தோழர்கள், அங்கேயே தெருமுனைக் கூட்டத்தை நடத்தினர். மறுகாலனியத் தாக்குதலால் அனைத்து தரப்பு உழைக்கும் மக்களும் மரணப் படுகுழியில் தள்ளப்பட்டுள்ளதை விளக்கி, போராட அறைகூவிய இக்கூட்டம், உழைக்கும் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

- பு.ஜ.செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## பட்ஜெட்:

# செக்கு மீதேறி சிங்கப்பூர் பயணம்!

**தனியார்மயம்–தாராளமயம் எல்லா முனைகளிலும் தோல்வியடைந்த பிறகும் அதே செக்குமாட்டுப் பாதையில் செலுத்தப்படுகிறது, பட்ஜெட்.**

குலேபகாவலி என்றொரு பழைய திரைப்படத்தில் இப்படியொரு காட்சி வரும். ஒரு வீட்டின் திண்ணையில் உட்காரப் போகும் கதாநாயகனின் நண்பனிடம் அவ்வீட்டின் உரிமையாளர், ''திண்ணையில உட்காரதீங்க, அப்புறம் திண்ணை வரி போட்டு விடுவாங்க'' என்று எச்சரிப்பார். இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டில் சேவை வரியை விரிவாக்கியதன் மூலம், அப்படிப்பட்டதொரு வரிக் கொள்ளையை, மக்கள் மீது ஏவிவிட்டுள்ளது, மன்மோகன் சிங் அரசு.

தனியார்மயம் - தாராளமயத்தின் பின் அறிமுகப்படுத்தப்பட்ட சேவை வரி, இன்று ஆக்டோபஸ் போல மக்களைச் சுற்றிவளைத்து நெறித்து வருகிறது. இந்த பட்ஜெட்டில் 17 இனங்களைத் தவிர, மற்ற அனைத்தையும், ஏறத்தாழ 119 இனங்களைச் சேவை வரி விதிப்பின் கீழ் கொண்டுவந்துள்ள மைய அரசு, அவ்வரி விதிப்பையும் 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்திவிட்டது. சேவை வரியோடு, சுங்க வரி, உற்பத்தி வரிகளையும் உயர்த்தியிருப்பதன் மூலம், கடந்த ஆண்டைவிடக் கூடுதலாக 45,940 கோடி ரூபாயைப் பொதுமக்களிடமிருந்து கறந்துவிடும்படி பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வரிக் கொள்ளை ஒருபுறமிருக்க, பெட்ரோலியப் பொருட்களுக்குக் கொடுத்துவந்த மானியத்தில் 25,000 கோடி ரூபாயையும், யூரியாவிற்குக் கொடுத்து வந்த மானியத்தில் 7,000 கோடி ரூபாயையும் வெட்டித் தள்ளியதன் மூலமும்; 30,000 கோடி ரூபாய் அளவிற்குப் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியார் முதலாளிகளுக்கு விற்பதன் மூலமும் கஜானாவை நிரப்பிக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது, மைய அரசு.

மன்மோகன் சிங் கும்பல் சாமானிய மக்களை என்றுமே ஒரு பொருட்டாகக் கருதியதில்லை. அக்கும்பல் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வினைக் கட்டுப்படுத்தாததோடு, அப்பொருட்களின் விலை மேலும் உயரும் எனத் தெரிந்தேதான், எரிகிற நெருப்பில் எண்ணெயை எடுத்து ஊற்றுவது போலத்தான், இந்தக் கூடுதல் வரி விதிப்பையும் மானிய வெட்டையும் கொண்டு வந்திருக்கிறது; இது மட்டுமின்றி, பட்ஜெட்டை அறிவித்த கையோடு, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயுவின் விலையை உயர்த்தப் போவதாகவும் திமிரோடு அறிவித்திருக்கிறது.

விவசாய இடுபொருட்களுக்கான விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரி வரும் வேளையில், மன்மோகன் சிங் கும்பல் அக்கோரிக்கையை ஒரு பொருட்டாக மதிக்காமல், தெனாவட்டாக யூரியாவிற்கான மானியத்தை வெட்டியிருக்கிறது. இதுவொருபுறமிருக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட 50 மாவட்டங்களில் யூரியாவிற்கான மானியத்தை விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கும் திட்டத்தையும் இந்த பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தியிருக்கிறது. இந்நடவடிக்கை, யூரியாவின் விலையை கார்ப்பரேட் முதலாளிகளும் வர்த்தகச் சூதாடிகளும் தீர்மானிக்கும்படி

சத்தான உணவு கிடைக்க வழியில்லாததால் எலும்பும் தோலுமாகக் காணப்படும் ம.பி. மாநிலத்தைச் சேர்ந்த குழந்தை: நாட்டுக்கே அவமானம்.





படிப்பகம்

www.padippakam.com

விட்டுவிடும் முன்னோட்டம் தவிர வேறில்லை. அம்மோனியா, பொட்டாசியம் உரங்களுக்கு மானியம் வழங்குவதையும், அவற்றின் விலையைத் தீர்மானிப்பதையும் நேரடியாகக் கைகழுவிய மைய அரசு, யூரியா விசயத்தில் தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் சதியில் இறங்கியிருக்கிறது. இப்படியொரு நிலை இந்தியா முழுவதும் விரிவாக்கப்படும்பொழுது யூரியாவிற்கு மானியம் வழங்குவது பெயரளவில் மட்டுமே இருக்கும்; அதே சமயம், யூரியாவின் விலையில் பெரும்பகுதி விவசாயிகளின் தலையில் சுமத்தப்படும்.



விலைவாசி உயர்வு அடித்தட்டு மக்களை கடுமையாகப் பாதித்துவரும் வேளையில், 30,000 கோடிரூபாய்க்கும் மேல் மக்களுக்கான மானியம் பட்ஜெட்டில் வெட்டப்பட்டுள்ளது.

''அரசின் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்'' என பட்ஜெட் உரையில் கொள்கைப் பிரகடனம் செய்திருக்கிறார், நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி. இதற்கு இராணுவச் செலவு உள்ளிட்ட அரசின் ஊதாரிச் செலவுகளையும் மேல்தட்டு கும்பலுக்கும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் வரித் தள்ளுபடி, வரிச் சலுகைகளையும் கட்டுப்படுத்தினாலே, அரசின் செலவைக் குறைத்துவிட முடியும். ஆனால், வழக்கம் போலவே இந்த பட்ஜெட்டும் மேல்தட்டுக் கும்பலின் நலனை முன்நிறுத்தியும், உழைக்கும் மக்களின் நலனைப் பலியிட்டும்தான் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்ஜெட்டில் இராணுவத்துக்கு ஒதுக்கப் பட்டுள்ள 1,93,407 கோடி ரூபாய் நிதியில், 79,500 கோடி ரூபாய் ஆயுதங்களும் நவீன போர் விமானங்களும் வாங்க ஒதுக்கப்பட்டுள்ளது. ஊழலில் ஊறிப் போன அதிகாரிகளுக்கும் ஆயுத பேரத் தரகர்களுக்கும் இதைவிட இனிப்பான செய்தி வேறெதுவும் இருக்க முடியாது.

நடுத்தர மற்றும் மேல்தட்டு வர்க்கத்தினருக்கு 4,500 கோடி ரூபாய் அளவிற்கு வருமான வரிச் சலுகையினை வாரி வழங்கியிருக்கிறார், நிதியமைச்சர். உழைக்கும் மக்களுக்கு மானிய விலையிலோ இலவசமாகவோ அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதை ஓட்டுவங்கி அரசியல் எனத் திட்டித் தீர்க்கும் இக்கும்பல், தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த வருமான வரிச்சலுகை போதாது எனக் கூப்பாடு போடுகிறது.

இந்த ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறை 5,21,980 கோடி ரூபாயாக இருக்கும் என பட்ஜெட்டில் அறிவிக்கப் பட்டுள்ளது. அதேசமயம், கடந்த ஆண்டில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட 5,29,432 கோடி ரூபாய்க்கான வரிச் சலுகைகளுள் ஒன்றைக்கூட நிதியமைச்சர் இந்த பட்ஜெட்டில் ரத்து செய்யவில்லை. நிதிப் பற்றாக் குறை பூதகரமாக வளர்ந்து நிற்பதற்கு இந்த ஊரான் வீட்டு நெய்யே என்ற வள்ளல்தனம்தான் காரணம். ஆனால், பற்றாக்குறையைச் சமாளிக்க மானியத்தை வெட்டிய கையோடு, தொழிலாளர் வைப்பு நிதிக்கு வழங்கப்பட்டு வந்த வட்டியை 9.5 சதவீதத்திலிருந்து 8.25 சதவீதமாகக் குறைத்து, 4.5 கோடி தொழிலாளர்களின் எதிர்காலத்தைக் களவாடிவிட்டது, காங்கிரசு கூட்டணி அரசு. இந்த வட்டிக் குறைப்பு மன்மோகன் சிங் கும்பலின் வக்கிரப் புத்தியையும் அற்பத்தனத்தையும் ஒருசேர எடுத்துக் காட்டுகிறது.

திருவாளர் மன்மோகன் சிங் சமீபத்தில், ''இந்தியாவில் உள்ள குழந்தைகளுள் 42 சதவீதத்தினர் ஊட்டச்சத்து இன்றி நோஞ்சான்களாக வளருவதாகவும், இதுவொரு தேசிய அவமானம்'' என்றும் கூறினார். அடித்தட்டு மக்களை எந்தளவிற்கு வறுமையும் ஏழ்மையும் வாட்டி வருகின்றன என்பதை உறுதிப்படுத்தும் புள்ளிவிவரம் இது. மன்மோகன் சிங் திடீர் ஞானோதயம் வாய்த்தவரைப் போல இப்படிக் கூறியிருக்கும் அதே சமயம், அவரது அல்லக்கையும் திட்ட கமிசனின் துணைத் தலைவருமான மாண்டேக் சிங் அலுவாலியா, ''நகர்ப்புறத்தில் தனிநபர் வருமானம் நாளொன்றுக்கு ரூ.28.65-க்குக் கீழாகவும், கிராமப்புறத்தில் தனிநபர் வருமானம் ரூ.22.42-க்குக் கீழாகவும் இருப்பதுதான் வறுமைக் கோட்டின் அளவுகோல். இதன்படி வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் இந்திய மக்களின் எண்ணிக்கை 37.2 விழுக்காட்டிலிருந்து 29.8 விழுக்காடாகக் குறைந்துவிட்டதென'' தற்பொழுது தடாலடியாக அறிவித்திருக்கிறார். ஒருபுறம் நோஞ்சான் குழந்தைகளுக்காக முதலைக் கண்ணீர் வடித்துவிட்டு, மறுபுறம் வறியவர்களின் எண்ணிக்கைக் குறைந்துவிட்டதாகக் கணக்குக் காட்டுவது எப்பேர்பட்ட கயமைத் தனம்!

திட்ட கமிசன் தற்போது அறிவித்துள்ள வறுமைக் கோட்டின் அளவுகோல், அக்கமிசன் ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்திடம் தெரிவித்திருந்த அளவுகோலைவிட, ஏறத்தாழ நான்கு ரூபாய் குறைவானது. விலைவாசி உயர்ந்துகொண்டே செல்லும் சமயத்தில், வறியவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்ட வறுமைக் கோட்டின் அளவுகோலை வெட்டும் சில்லறைத்தனமான குறுக்குவழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளது, மன்



படிப்பகம்

www.padippakam.com

மோகன் - அலுவாலியா கும்பல். இந்தக் குறுக்குப் புத்திக்கு எதிராக நாடெங்கும் 8888கண்டனங்கள் எழுந்த பிறகும் அதைப் பொருட்படுத்தாத அலுவாலியா, "இந்தக் கணக்கு வேண்டுமானால் துல்லியம் இல்லாமல் இருக்கலாம். நாட்டில் வறுமை குறைந்திருக்கிறது. பட்டினிச் சாவுகள் இல்லை என்பது உண்மையே" என இறுமாப்பாகப் பதில் அளித்திருக்கிறார்.

மன்மோகன் - அலுவாலியா - சிதம்பரம் கும்பல் தேர்ந்தெடுத்து அமல்படுத்தி வரும் பொருளாதார வளர்ச்சிப் பாதை, வறுமை, ஏழ்மை, சமூக ஏற்றத்தாழ்வை மட்டும் தீவிரமாக்கவில்லை; நாட்டின் பொருளாதாரத்தையும் சீர்குலைத்து நாசப்படுத்தி வருகிறது. குறிப்பாக, நாட்டின் பொருளாதாரம் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே அவர்கள் எதிர்பார்த்த 8 சதவீத வளர்ச்சியை எட்டமுடியாமல் முடங்கிப் போய்விட்டது. விவசாயம் போலவே, உற்பத்தி சார்ந்த தொழிற்துறையும் நீண்ட கோமா நிலைக்குச் சென்றுவிட்டது. இவையனைத்தும் தனியார்மயம் - தாராளமயம் மிகப்பெரும் தோல்வி அடைந்துவிட்டது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

ஆனால், மன்மோகன் சிங் கும்பல் மண்ணுக்குள் தலை புதைக்கும் நெருப்புக் கோழியைப் போல, இந்த உண்மையைக் காண மறுப்பதோடு, தனியார்மயம் - தாராளமயத்தை இன்னும் தீவிரமாக நடைமுறைப்படுத்தினால் இந்த நெருக்கடியிலிருந்து தப்பித்துவிடலாம் என்ற ஆகாயக் கோட்டையைக் கட்டி காட்டுகிறது. இந்தச் செக்குமாட்டுத் தனத்தற்கு ஏற்றபடியே, பட்ஜெட்டில் நிதி மூலதனத்திற்கும், பங்குச் சந்தை முதலீட்டிற்கும், விமான சேவை, மின்சாரம் போன்ற துறைகளில் நுழைந்துள்ள கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் சலுகைகள் வாரி வழங்கப்பட்டுள்ளன. பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புகளைக் கொஞ்சம்கூடப் பொருட்படுத்தாமல், சில்லறை வணிகத்தில் 100 சதவீத அந்நிய முதலீட்டை அனுமதிப்பது உள்ளிட்டுப்பல்வேறு பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தப் போவதாகவும் அறிவித்திருக்கிறது, காங்கிரசு கூட்டணி அரசு.

நாட்டையும் மக்களையும் மீள முடியாத பேரழிவில் தள்ளாமல் ஓய்வதில்லை எனக் கங்கணம் கட்டிக் கொண்டு மன்மோகன் சிங் கும்பல் வேலை செய்து வருவதைத்தான் இந்த பட்ஜெட்டும் எடுத்துக் காட்டியிருக்கிறது. ஆனால், போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளோ, துடப்பக் கட்டைக்குப் பட்டுக் குஞ்சம் கட்டுவது போல, "பட்ஜெட்டில் இந்த அளவிற்கு மானியத்தை வெட்டியிருக்கத் தேவையில்லை; மக்கள் நலத் திட்டங்களுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாக நிதி ஒதுக்கியிருக்கலாம்" என ஆலோசனைகளை அள்ளிவிட்டு வருகிறார்கள்.

● குப்பன்

## 108 ஆம்புலன்ஸ் சேவை:

# தனியார்மயத்துக்கு எதிராகத் தொழிலாளர்களின் பிரச்சாரம்

எதிர்பாராமல் நிகழும் சாலை விபத்துகள், தீ விபத்துகள், திடீர் மாரடைப்பு முதலானவற்றால் பாதிக்கப்பட்டோரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்று காப்பாற்றும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட 108 ஆம்புலன்ஸ் சேவையை ஜி.வி.கே. இ.எம்.ஆர்.ஐ. (அவசரகால மேலாண்மை மற்றும் ஆராய்ச்சிக் கழகம்) என்ற தனியார் நிறுவனம் இயக்கி வருகிறது.

அரசு சின்னத்தைப் பொறித்துக் கொண்டு ஆம்புலன்ஸ் சேவையை நடத்திவரும் இத்தனியார் நிறுவனத்தில் நாளொன்றுக்கு 12 மணி நேரம் வீதம் இரண்டு ஷிப்டுகளில் கொத்தடிமைகளாகப் பணிபுரியும் ஊழியர்கள், மாதம் ரூ.7000 சம்பளத்தில் வாரத்தில் ஏழு நாட்களிலும் வேலை செய்யுமாறும், பணியாளர்களுக்கு தங்குமிடமோ, ஓய்வறையோ இல்லாமல் வெட்டவெளியில் பணியாற்றுமாறும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதுபற்றி வாய்திறந்தால், ஊழியர்களை இடமாற்றம் செய்து பழிவாங்குவதும், மிரட்டுவதும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது.

இக்கொத்தடிமைத்தனத்துக்கு எதிராகக் குமுறிய சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களின் தொழிலாளர்கள் பு.ஜ.தொ.மு.வின் வழிகாட்டுதலில் தமக்கென "108 தொழிலாளர் சங்கம்" என்ற பெயரில் தொழிற்சங்கத்தைக் கட்டியமைத்து போராடி வருகின்றனர். கடந்த 28.2.2012 அன்று இராமநாதபுரம் நகரின் கேணிக்கரையில் உள்ள டி.எஸ். திருமண மண்டபத்தில் ஜி.வி.கே. ஈ.எம். ஆர்.ஐ. நிறுவனத்தின் ஆள்சேர்ப்பு முகாம் நடைபெற்ற போது, இந்நிறுவனம் அரசு நிறுவனமல்ல என்பதையும், இது அரசு வேலைக்கான ஆள்சேர்ப்பு முகாமும் அல்ல என்பதையும் உணர்த்தி, இத்தனியார் நிறுவனம் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக நடத்திவருவதையும், சட்டவிரோதமாக வாரத்தின் ஏழு நாட்களிலும் 12 மணி நேரம் வேலை வாங்குவதையும், ஆம்புலன்ஸ் வண்டியில் மைலேஜ் கணக்கு, பஞ்சர் கணக்கு கேட்பதையும், வண்டியில் உயிர்காக்கும் மருந்துகள்-உபகரணங்கள் இல்லாததையும் விளக்கி, இத்தனியார் நிறுவனத்தின் கொள்ளையையும் அடக்குமுறைகளையும் அம்பலப்படுத்தி துண்டுப் பிரசுரம் வெளியிட்டு நேர்முகத் தேர்வுக்கு வந்தவர்களிடமும், பகுதிவாழ் உழைக்கும் மக்களிடமும் 108 தொழிலாளர் சங்கத்தினர் பிரச்சாரம் செய்தனர். விவரம் தெரியாமல் நேர்முகத் தேர்வுக்கு வந்த இளைஞர்களிடம் இப்பிரச்சாரம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

இப்பிரச்சாரத்தாலும், இந்நிறுவனத்தால் சட்டவிரோதமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட இரு தொழிலாளர்களுக்காக தொழிலாளர் நல அலுவலகத்தில் 108 தொழிலாளர் சங்கம் முறையிட்டதன் பேரில் அதிகாரிகள் இது குறித்து விசாரணை நடத்தி வருவதாலும் ஜி.வி.கே. நிறுவனம் அரண்டு போயுள்ளது. சங்கத்தின் செயல்பாடுகளால் உற்சாகமும் புதிய நம்பிக்கையும் பெற்றுள்ள தொழிலாளர்கள், தமிழகமெங்குமுள்ள 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களை அமைப்பாக்கிப் போராட ஆயத்தமாகி வருகின்றனர்.

தகவல்:
பு.ஜ.செய்தியாளர், இராமநாதபுரம்.



படிப்பகம்

www.padippakam.com

# வர்க்க ஒற்றுமையுடன் முன்னேறும் ஓசூர் தொழிலாளர் போராட்டம்



ஓசூர் சிப்காட்-1 பகுதியில் இயங்கிவரும் கமாஸ் வெக்ட்ரா ஆலையில் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்கள் கடந்த ஜனவரியிலிருந்து உள்ளிருப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர். மேலும், இதே சிப்காட் பகுதியிலுள்ள குளோபல் பார்மாடெக் நிறுவனத்தில் தொழிலாளர்கள் ஊதிய உயர்வுக்காகப் போராடியதைத் தொடர்ந்து தொழிற்சங்க முன்னோடிகள் பழிவாங்கப்பட்டுள்ளனர்.

குளோபல் பார்மாடெக் நிறுவனத்தில், பெண்களின் உடை மாற்றும் அறையில் இரகசியமாக கேமராவை வைத்து, கர்ப்பிணியான பெண் தொழிலாளி உணவருந்தியபின் சிறிது நேரம் கண்ணயர்ந்ததைப் படம்பிடித்து, அதைப் பகிரங்கமாக வெளியிட்டு, தொழிலாளர்கள் வேலை நேரத்தில் உறங்கியதாகப் பொய்க்குற்றம் சாட்டி அவமானப்படுத்திய நிர்வாக அதிகாரியான பொறுக்கி ஏகாம்பரத்தைக் கைது செய்யக் கோரி கடந்த ஜனவரியில் தொழிலாளர்கள் அணிதிரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அதைத் தொடர்ந்து கடந்த 10.2.2012 அன்று தொழிலாளி மகேந்திரனை 20 பேர் கொண்ட கூலிப்படையைக் கொண்டு ஆலை நிர்வாகம் தாக்கியது. இத்தாக்குதலை எதிர்த்து தொழிலாளர்கள் உள்ளிருப்புப் போராட்டத்தை அறிவித்து, நிர்வாக அதிகாரி ஏகாம்பரத்தை வெளியே அனுமதிக்காமல் போராடினர். இதைக் காரணம் காட்டி 13.2.2012 அன்று தொழிற்சங்க நிர்வாகிகள் அனைவரையும் ஆலை நிர்வாகம் தற்காலிகப் பணிநீக்கம் செய்தது. பொறுக்கி ஏகாம்பரத்தைக் கைது செய்யக் கோரி தொழிலாளர்கள் போராடியதன் காரணமாக அவனும் ரமேஷ், மணிகண்டன், சுரேஷ் ஆகிய ஆலை நிர்வாகிகளும் 14.2.2012 அன்று கைது செய்யப்பட்டனர். அதேசமயம், அவர்களை மிரட்டியதாக பொய்வழக்கு போட்ட போலீசு, சங்க நிர்வாகிகள் 9 பேரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. நிர்வாகத்தின் பழிவாங்கலையும் அடக்குமுறையையும் எதிர்த்து கடந்த 13.2.2012 முதலாக உள்ளிருப்புப் போராட்டத்தை 60 பெண் தொழிலாளர்களும் 110 ஆண் தொழிலாளர்களும் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். ஆலையினுள்ளேயே கூட்டாகச் சோறாக்கி ஒற்றுமையுடன் தொழிலாளர்கள் போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

இந்நிலையில், இவ்விரு ஆலைகளில் தொடரும் உள்ளிருப்புப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று, ஓசூர் வட்டாரத்தில் தொடரும் முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தில், பு.ஜ.தொ.மு. வின் ஏற்பாட்டில் 22.2.2012 அன்று ஓசூர் பகுதியில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தின் தீர்மானத்தின்படி, தொழிலாளர் துறை உடனடியாகத் தலையிடக் கோரி 27.2.2012 அன்று மிகப் பெரிய பேரணியும் ராம்நகர் - அண்ணாசிலை அருகே கமாஸ் வெக்ட்ரா, குளோபல் பார்மாடெக் மட்டுமின்றி, பாட்டா, கார்போரண்டம், சிவானந்தா பைப்ஸ், வெண்ட் இன்டியா, ஏஎம் ஸ்டீல், ஏவி டெக், இந்துஸ்தான் யுனிலீவர், எக்சைடு, உஷா முதலான நிறுவனங்களின் தொழிலாளர்கள் குடும்பம் குடும்பமாகப் பங்கேற்ற ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

சாலைமறியல் போராட்டம், நிர்வாக அதிகாரி ஏகாம்பரம் வீட்டின் முன்பாக ஆர்ப்பாட்டம், தொழிலாளர்கள் குடும்பத்தின் குழந்தைகள் நடத்திய ஆர்ப்பாட்டம், தொழிலாளர் அலுவலர் ஜெகதீசனை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் - என சோர்வின்றி தொழிலாளி வர்க்கத்துக்கே உரிய போர்க்குணத்துடன் போராடி வந்த தொழிலாளர்கள், கடந்த மார்ச் 22-ஆம் தேதியன்று தமது குடும்பத்தோடு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு, கைதாகினர். இவ்வளவுக்குப் பின்னரும் அசைந்து கொடுக்காத ஆலை நிர்வாகத்தையும், அதற்கு ஆதரவாக நிற்கும் அதிகார வர்க்கத்தையும் அம்பலப்படுத்தியும் முதலாளித்துவப் பயங்கரவாதத்தை வீழ்த்த அறைகூவியும் 26.3.2012 அன்று ஓசூர் - ராம் நகரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்ற பு.ஜ.தொ.மு. வின் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

வர்க்க ஒற்றுமையுடன் தொடர்ந்து போராடிவரும் ஓசூர் தொழிலாளர்கள், இவ்வட்டாரமெங்கும் உழைக்கும் மக்களின் ஆதரவைத் திரட்டி, அடுத்த கட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

-பு.ஜ.செய்தியாளர், ஓசூர்.








படிப்பகம்

www.padippakam.com

# மின்சாரச் சந்தையை வட்டமிடும் பணந்தின்னிகள்

**ஆன்லைன் சந்தையில் சூதாடப்படும் பண்டமாக மின்சாரத்தை அங்கீகரித்துள்ளது அரசு. வருங்காலத்தில் மின்கட்டணம் என்பது சந்தை நிலவரத்துக்கு ஏற்ப ஏறி இறங்கும்.**

மின் வாரியம் கூறும் கட்டணத்தைத் தரத் தயாராக இருப்பவர்களுக்கும் மின்சாரம் கிடைப்பதில்லை என்பதுதான் மின்வெட்டு என்று கூறப்படுகிறது. கூடுதல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம் இந்த மின்வெட்டை முடிவுக்குக் கொண்டு வரப்போவதாக அரசு சொல்கிறது. மின் கட்டணத்தை உயர்த்துவதன் மூலமும் இந்தப் பற்றாக்குறையை 'முடிவுக்கு' கொண்டு வரலாம்.

பாட்டில் தண்ணீரும் கேன் தண்ணீரும் தண்ணீர் பஞ்சத்தை இப்படித்தான் 'ஒழித்திருக்கின்றன'. குடி தண்ணீர் வாங்க காசில்லை என்ற பிரச்சினையை தண்ணீர் பற்றாக்குறை என்று யாரும் சொல்வதில்லை. அது பணப்பற்றாக்குறையாகிவிடுகிறது.

ஐந்துக்கும் பத்துக்கும் செல்போன் டாப்-அப் செய்வதைப் போல, 20-30 ரூபாய்க்கு பெட்ரோல் போட்டுக் கொள்வதற்கும் எப்படி இன்று பழக்கப்படுத்தப் பட்டிருக்கிறோமோ, அதேபோல மின்சாரச் சந்தையின் ஏற்ற இறக்கங்களுக்கும் பழக்கப்படுத்தப்பட இருக்கிறோம். மின்சாரம் என்பது கத்தரிக்காயைப் போல அன்றாடம் சந்தையில் விலை மாறும் சரக்காகி வருகிறது. இந்த மாற்றம் வெகு வேகமாக நம்மீதும் திணிக்கப்படுகிறது.

டெல்லி மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 'ஸ்மார்ட் மீட்டர்' என்ற மின்சார மீட்டரை அறிமுகப்படுத்தவிருக்கிறதாம். காலை, மதியம், மாலை, இரவு என ஒரு நாளின் குறிப்பிட்ட நேரங்களில், ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை என்ன என்பதை இந்த மீட்டரைப் பார்த்து வாடிக்கையாளர்கள் தெரிந்து கொள்ள முடியுமாம். அதாவது, வரவிருக்கும் காலத்தில் மின் கட்டணம் என்பது ஒரு மாதத்திற்கோ, ஒரு நாளுக்கோ கூட நிரந்தரமாக இருக்காது. மின்சாரச் சந்தையின் விலை நிலவரத்துக்கு ஏற்ப ஏறி இறங்கிக் கொண்டிருக்கும். மின்சாரத்தின் விலை அதிகமாக இருக்கும் நேரத்தில் மின்சாரப் பயன்பாட்டை தவிர்த்துக் கொண்டு, விலை குறைவாக இருக்கும் நேரத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மின் கட்டண செலவைக் கட்டுப்படுத்த முடியும். இது மின்சாரத் துறையில் செய்யப்படும் இரண்டாம் தலைமுறை சீர்திருத்தமாகும் என்று கூறியிருக்கிறார் டில்லி மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் பி.டி.சுதாகர். (பி.டி.ஐ; 26.2.12)

மைய அரசு அமைத்திருக்கும் 'இந்தியா ஸ்மார்ட் கிரிட் டாஸ்க் ஃபோர்ஸ்' என்ற அமைப்பின் தலைவரான சாம் பிட்ரோடா, மின்சார மீட்டரை ஜி.எஸ்.எம். தொழில்நுட்பத்துடன் இணைப்பதன் மூலம் உருவாக்கப்படும் இந்த ஸ்மார்ட் மீட்டர் கருவிகள் இந்தியா முழுவதற்கும் பத்து கோடி தேவையென்றும், அவற்றை மலிவு விலையில் உருவாக்கும் முயற்சி நடைபெறுவதாகவும் கூறியிருக்கிறார். இந்தியாவிலேயே முதன் முறையாக புதுச்சேரி நகரிலுள்ள 87,000 வீடுகளில் அடுத்த நான்கு மாதங்களில் இந்த மீட்டர்கள் நிறுவப்படும் என்று இந்த டாஸ்க் ஃபோர்ஸ் அமைப்பு அறிவித்திருக்கிறது. (ஐ.பி.என். லைவ், மார்ச் 3, 2012)

மின் விநியோகத்தின் மீதான மையப்படுத்தப்பட்ட நிர்வாகம், மின் திருட்டைத் தடுக்கும் முயற்சி, மின் செலவை மிச்சப்படுத்த மக்களுக்கு தரப்படும் வாய்ப்பு என்ற வார்த்தை ஜாலங்களால் இந்த திட்டத்தை நியாயப்படுத்துகிறது அரசு. உண்மை அதுவல்ல. மக்கள்





படிப்பகம்

நலனைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் மின் கட்டணத்தை நிர்ணயம் செய்வது என்ற முறையையே ஒழித்துவிட்டு, சந்தையில் மின்சாரத்தின் விலை என்னவோ அதைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்பதற்கு மக்களைப் பழக்குவதே இந்த ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தின் நோக்கம்.




**அரசாங்கம் மின் கட்டணத்தை நிர்ணயம் செய்வது என்ற முறையையே ஒழித்துவிட்டு, சந்தையில் மின்சாரத்தின் விலை என்னவோ அதைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்பதற்கு மக்களைப் பழக்குவதே இந்த ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தின் நோக்கம்.**

28.3.2012 அன்று சட்டசபையில் மின்கட்டண உயர்வு தொடர்பான ஒரு கேள்விக்கு பதிலளித்த ஜெயலலிதா, கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று மாநில மின்வாரியம் கோராவிட்டாலும்கூட, கட்டணத்தை உயர்த்துகின்ற அதிகாரம் மின்சார ஒழுங்கு முறை ஆணையத்துக்கு உண்டு என்று ஒரு விளக்கமளித்தார்.

தன்னுடைய அரசு அறிவித்திருக்கும் கட்டண உயர்வுக்கு, தான் பொறுப்பேற்றுக் கொள்ளாமல், வேறு யாரோ வைத்த செய்வினை போல ஜெயலலிதா சித்தரிக்கிறார் என்ற போதிலும், அப்படிப்பட்ட அதிகாரம் ஆணையத்துக்கு வழங்கப்பட்டிருப்பது உண்மையே.

மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்பது மின்சார உற்பத்தி மற்றும் விநியோகத்தை தனியார்மயமாக்கும் நோக்கத்திற்காகவே உலக வங்கியின் ஆணைக்கேற்ப உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு. கட்டண நிர்ணய அதிகாரம், உரிமம் வழங்கும் அதிகாரம் ஆகியவை மாநில அரசிடமிருந்து பிடுங்கி சுய அதிகாரம் பெற்ற அமைப்பான இதனிடம் வழங்கப்பட்டுவிட்டன. இதற்கான சட்டம் 1998-இலேயே இயற்றப்பட்டுவிட்டது.

மின்சாரத்தைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளுக்கு இந்தச் சட்டம் போதுமானதாக இல்லை என்பதால்-2003 இல் பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் மத்திய மின்சாரச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம், மின் உற்பத்தி - கம்பிகள் மூலம் கொண்டு செல்லுதல் - நுகர்வோருக்கு விநியோகித்தல் ஆகிய 3 பணிகளையும் மின்வாரியமே செய்வது திறமையின்மைக்கும் ஏகபோகத்துக்கும் வழிவகுப்பதால், வாரியங்களை மூன்றாக உடைக்கக் கூறியது. மின்சாரம் வணிக ரீதியில் விற்கப்படவேண்டும் என்றும், மின்சாரம் உற்பத்தி செய்ய அரசாங்க உரிமம் தேவையில்லை என்றும், தனியார் முதலாளிகள் மின்னுற்பத்தி செய்வதுடன் மின்சாரச் சந்தையில் ஊக வணிக சூதாட்டமும் நடத்தலாம் என்றும் அனுமதித்தது. மின்வாரியங்கள் சொந்த உற்பத்தியை நிறுத்திவிட்டு, தனியாரிடம் மின்சாரத்தைக் கொள்முதல் செய்யுமாறும், விநியோகத்தையும் அவர்களிடம் ஒப்படைக்குமாறும் வலியுறுத்தியது. தனியாரிடமிருந்து அரசு கொள்முதல் செய்கின்ற மின்சாரத்திற்கு விலை நிர்ணயம் செய்யும் அதிகாரமும் ஆணையத்திடமே தரப்பட்டது. கட்டண உயர்வுக்கு எதிராக யாரும் நீதிமன்றத்தை நாடவியலாதென்றும், இதற்கென உருவாக்கப்படும் ‘மின்சாரத்துக்கான மேல்முறையீட்டு ஆணையம்’தான் தீர்ப்பளிக்க முடியும் என்றும் இச்சட்டம் கூறியது.

மின் உற்பத்தியிலிருந்து மாநில மின்வாரியங்கள் திட்டமிட்டே அகற்றப்பட்டன. மின்சாரத் துறைக்கான நிதி, மாநில அரசுகளின் திட்ட ஒதுக்கீட்டில் 31.55 விழுக்காட்டிலிருந்து (1990-91) பத்தே ஆண்டுகளில் 15.25 விழுக்காடாக (2001-02) வீழ்ச்சி அடைந்தது. இலாபமீட்டி வந்த மின் வாரியங்கள் நட்டத்தில் விழத் தொடங்கின.

மின் வாரியங்கள் நட்டத்தில் விழுவதற்கான காரணமே, விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம்தான் என்ற கருத்தை அரசும், ஊடகங்களும் திட்டமிட்டே உருவாக்கியிருக்கின்றன. 1994-95-இல் தமிழக மின்வாரியம் ஈட்டிய உபரி ரூ. 347 கோடி. 2007-08 -ஆம் ஆண்டில் இது 3512 கோடி ரூபாய் பற்றாக்குறையாக மாறியது. 1994 -இலும் சரி, 2008 -இலும் சரி விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டுத்தான் வருகிறது. நட்டத்திற்கு காரணம் அதுவல்ல.

1994 - இல் தனது மின்சாரத் தேவையில் 0.4 சதவீதத்தை மட்டுமே தனியாரிடமிருந்து கொள்முதல் செய்து வந்த தமிழக மின்வாரியம், 2008 - இல் சுமார் 35% மின்சாரத்தைத் தனியாரிடம் வாங்கியது. இன்று தமிழக மின்வாரியத்தின் கடன் சுமார் ரூ.56,000 கோடி. இது ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே.

‘‘போட்டி இருந்தால் விலை குறையும். சேவைத் தரம் உயரும்’’ என்பதுதான், அரசுத்துறைகளை ஒழிப்பதற்கும், தனியார் துறையை ஊக்குவிப்பதற்கும் சொல்லப்படுகின்ற காரணம். மின்சாரத்துறையில் தனியார் அனுமதிக்கப்பட்ட பிறகு கட்டணம் குறையவில்லை. மாறாக, ஏறிக்கொண்டிருக்கிறது. மின் வாரியத்தை நட்டத்திலிருந்து காப்பாற்றத்தான் இந்த கட்டண உயர்வு என்று அரசு கூறினாலும் உண்மை அதுவல்ல.

தனியார் மின் உற்பத்தியாளர்களுடன் மின்வாரியங்கள் போட்டிருக்கும் மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்களின்படி, அந்த முதலாளிகளுக்குத் தரவேண்டிய தொகையைத் தருவதற்கு கட்டண உயர்வு அவசியம்



படிப்பகம்

www.padippakam.com

என்று மத்திய மின்சார அமைச்சகத்தின் 21.1.2011 தேதியிட்ட கடிதம் தெளிவாகக் கூறுகிறது. (ஆதாரம் : 'மின்சாரக் கட்டணம்- தனியார்துறையின் வேட்டைக்காடு', சா.காந்தி, ஒய்வு பெற்ற பொறியாளர்)

மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தம் (Power Purchase Agreement) என்பதென்ன? தனியார் நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்கு மாநில மின்வாரியங்கள் போட்டுக் கொள்ளும் ஒப்பந்தங்கள் இவை. இவற்றின்படி, ஒரு யூனிட் மின்சாரம் என்ன விலை என்பதும் எத்தனை மாதங்களுக்கு அந்த விலையில் மின்சாரத்தை தரவேண்டும்/பெற வேண்டும் என்பதும் தீர்மானிக்கப்பட்டுவிடும். மின்சாரத்தின் விலையை இருதரப்பினரும் பேசித் தீர்மானிப்பர்.

இந்த வகை ஒப்பந்தங்களில் மிகவும் இழிபுகழ் பெற்றது என்ரான் ஒப்பந்தம். 90-களில் தபோல் மின் நிலையத்திலிருந்து ஒரு யூனிட் 8 ரூபாய் விலையில் மின்சாரத்தை வாங்கிக் கொள்வதாக ஒப்பந்தம் போட்டு விட்டு, அந்த விலைக்கு மின்சாரம் வாங்க



முடியாமல், மின்சார உற்பத்தியை நிறுத்தி வைப்பதற்காக மாதந்தோறும் நிலைக்கட்டணம் செலுத்தியே திவாலானது மகாராட்டிர அரசு.

தமிழகத்தில் அப்போலோ (மருத்துவமனை) குழுமத்துக்குச் சொந்தமான பிள்ளைப்பெருமாநல்லூர் மின்நிலையத்திலிருந்து 2005-06 - இல் தமிழக அரசு வாங்கிய மின்சாரத்தின் விலை யூனிட்டுக்கு ரூ.17.78. சாமல்பட்டி பவர் என்ற நிறுவனத்திடமிருந்து யூனிட் ரூ. 8.74; மதுரை பவர் - ரூ. 8.63. சென்னை பேசின் பிரிட்ஜில் மின் வாரியத்துக்குச் சொந்தமான நிலத்தில் அமைந்திருக்கும் ஜி.எம்.ஆர். என்ற தனியார் அனல் மின் நிலையத்திலிருந்து வாங்கப்பட்ட மின்சாரத்தின் விலை யூனிட்டுக்கு ரூ.6.58. யூனிட்டுக்கு ரூ. 17.74 கொடுத்து அப்போலோ நிறுவனத்தின் மின்சாரத்தை வாங்க முடியாததால், மின்சாரம் வாங்கத் தவறியதற்குத் தண்டமாக, 2005-06 - இல் மட்டும் நாளொன்றுக்கு ஒரு கோடி வீதம் 330 கோடி ரூபாயை கொடுத்திருக்கிறது மின்வாரியம்.(காந்தி, மேற்படிநூல்)

தமிழக மின்வாரியம் உற்பத்தி செய்யும் நீர்மின்சக்தியின் விலை யூனிட்டுக்கு 21 காசுகள். அனல் மின்சக்தியின் அதிகபட்ச விலை ரூ.2.14 காசுகள் என்பதையும் இங்கே ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். தமிழக மின் வாரியத்தின் 56,000 கோடி ரூபாய் கடனும், அதனைக் கட்டுவதற்கு நாம் தரப்போகும் கூடுதல் கட்டணமும் அரசுக்குப் போகவில்லை. நேரே முதலாளிகளின் பணப்பெட்டிக்குத்தான் போய்ச் சேர்கிறது.

ஒப்பந்தம் செய்த விலையில் ஒப்பந்தப்படி மின்சாரம் வாங்கவில்லையென்றால், தங்களது மின் நிலையங்கள் இயங்காமல் சும்மா இருப்பதற்கே அபராதக் கட்டணம் வசூலித்து மின்வாரியத்தைத் திவாலாக்கும் கறார் பேர்வழிகளான தனியார் முதலாளிகள், தமது தரப்பில் ஒப்பந்தங்களை மதிக்கிறார்களா?

ஒரு யூனிட் 2.26 காசுக்கு மின்சாரம் சப்ளை செய்வதாக ஏலம் கேட்டு, டாடாவுக்குச் சொந்தமான முந்திரா அல்ட்ரா மெகா பிராஜக்ட் என்ற 4000 மெகாவாட் அனல் மின்நிலையம் ஒப்பந்தம் போட்டுக்கொண்டது. இதற்கான நிலக்கரியை இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்து வந்தது. இப்போது நிலக்கரியின் சர்வதேச விலை உயர்ந்துவிட்டதால், தான் ஏலம் கேட்ட விலையில் மின்சாரம் தர முடியாது என்றும் விலையைக் கூட்ட வேண்டும் என்றும் கோருகிறது டாடா நிறுவனம். இந்தோனேசியாவில் உள்ள அந்த சுரங்கங்களும் டாடாவுக்கு சொந்தமானவையே என்பதால், மின்சாரத்தின் விலையைக் கூட்ட மறுக்கின்றன மாநில மின்வாரியங்கள்.

''மின்சாரத்தின் விலையைக் கூட்டித் தர மறுத்தால் மின்நிலையத்தை மூடுவோம். திவாலாகப்போவது நாங்கள் அல்ல, எங்களுக்கு கடன் கொடுத்த பொதுத்துறை வங்கிகள்தான். பரவாயில்லையா?'' என்று தெனாவெட்டாக அரசை மிரட்டுகிறார் டாடா பவர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான அனில் சர்தானா. (எகனாமிக் டைம்ஸ், 5.2.2012)

தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கும், மின் வாரியங்களுக்கும் சுமார் 4 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் கொடுத்திருக்கும் பொதுத்துறை வங்கிகளோ, தங்களைத் திவால் ஆகாமல் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, மின் கட்டணத்தை உயர்த்து மாறு ஆணையத்திடம் முறையிடுகின்றன.

இன்று இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் பெரும்பகுதி அனல் மின் உற்பத்தியே. இதற்குத் தேவையான நிலக்கரியை பொதுத்துறை நிறுவனமான கோல் இந்தியா தருகிறது. குறைந்த விலையில் மக்களுக்கு மின்சாரத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக மின்வாரியங்களுக்குச் சொந்தமான அனல் மின்நிலையங்களுக்குச் சலுகை விலையில்



படிப்பகம்

www.padippakam.com

கரியை விற்கிறது கோல் இந்தியா. கோல் இந்தியா தருகின்ற நிலக்கரி போதாமல், கணிசமான அளவு நிலக்கரியை பொதுத்துறை மின் உற்பத்தி நிறுவனங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொள்கின்றன.

தற்போது உலகச் சந்தையில் நிலக்கரியின் விலை உயர்ந்து விட்டதைத் தொடர்ந்து, மன்மோகன்சிங்கை சந்தித்த டாடா, அம்பானி, ஜின்டால், அதானி உள்ளிட்ட தரகுப் பெருமுதலாளிகள், ''மின்சாரத்தின் விலையை உயர்த்துங்கள், அல்லது நிலக்கரியைச் சலுகை விலையில் வழங்குங்கள். இல்லையேல் அனல் மின் நிலையங்களை மூடவேண்டிவரும்'' என்று அன்புடன் மிரட்டியுள்ளனர். உடனே சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களையும் அதிகாரிகளையும் கூட்டிய மன்மோகன்சிங், முதலாளிகளுக்குத் தேவையான நிலக்கரியை வெட்டி எடுத்தோ, இறக்குமதி செய்தோ கொடுக்க வேண்டியது கோல் இந்தியா நிறுவனத்தின் பொறுப்பென்றும், ஒப்புக்கொண்டதில் 80% நிலக்கரியைத் தரத் தவறினால் முதலாளிகளுக்கு அபராதம் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறார். உள்நாட்டு நிலக்கரியை குறைந்த விலையில் விற்பது மட்டுமல்ல; இறக்குமதி செய்து, தள்ளுபடி விலையில் இம்முதலாளிகளுக்கு விற்க வேண்டும்.




**பேருந்துநிலைய கக்கூசை ஏலம் விடுவது போல, 255 நகரங்களின் மின் விநியோகத்தை ஏலம் விட்டு அரசாங்கம் கல்லா கட்டிவிடலாம் என்றும், அந்த ஏலதாரர்கள் மக்களிடம் வசூலித்துக் கொள்ளட்டும் என்றும் ஆலோசனை கூறியிருக்கிறது, சுங்லு கமிட்டி. பஞ்சாப், ஹரியானாவில் 31 நகரங்களில் முன்னோட்டமாக இது அமல்படுத்தப்பட இருக்கிறது.**

டாடாவுக்கு இந்தோனேசியாவிலும், அதானிக்கு ஆஸ்திரேலியாவிலும் நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. இந்தோனேசிய டாடாவிடமிருந்து அதிக விலைக்கு வாங்கி, இந்திய டாடாவுக்கு மானிய விலையில் நிலக்கரி விற்பனை! இதற்குப் பெயர் சுதந்திரப் போட்டி, மானியங்களை அகற்றுதல்!

இது மட்டுமல்ல, வரவிருக்கும் 6 ஆண்டுகளில் நிறுவப்படவுள்ள 40,000 மெகாவாட் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரிச் சுரங்கங்கள் தரகு முதலாளிகளுக்கு 'சும்மா' தூக்கித் தரப்பட்டிருக்கின்றன. இவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை சந்தை விலையில் விற்று லாபம் பார்க்கப்போகிறார்கள். (பிசினெஸ் லைன், 15.3.2011)

தனியார் மின் உற்பத்தியாளர்களில் இரு பிரிவினர் உண்டு. உற்பத்தி செய்யும் மின்சாரத்தைக் குறிப்பிட்ட மின்வாரியத்துக்கோ, ஆலைக்கோ, சில ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட விலையில் கொள்முதல் ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டு, விற்பனை செய்பவர்கள் - சுயேச்சையான மின் உற்பத்தியாளர்கள் (Independent Power Producers).

இத்தகைய ஒப்பந்தங்கள் ஏதுமில்லாமல் சந்தையில் அன்றன்றைக்கு நிலவும் மின்சாரத் தேவையின் அடிப்படையில், மின்சாரத்துக்கு விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்பவர்கள் வணிக மின் உற்பத்தியாளர்கள் (Mercantile Power Corporations). ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை 17 ரூபாய்க்கும் மேல் கூடப் போவதுண்டு. இதற்கு உச்சவரம்பு ஏதும் கிடையாது. இத்தகைய தனியார் பிணந்தின்னிகளிடம் மின்சாரம் வாங்கித்தான் தமிழக மின்வாரியம் திவாலாகியிருக்கிறது. சான்றாக, 2009-10 - இல் தமிழக மின்வாரியம், தனது மொத்த மின் தேவையில் 19 விழுக்காட்டை வணிக மின் உற்பத்தியாளர்களிடம் வாங்கிவிட்டு, அதற்கு விலையாக தனது மொத்த வருவாயில் 49.45 விழுக்காட்டை கொடுத்திருக்கிறது.

இன்று 16,000 மெகாவாட் உற்பத்தியுடன் இந்திய மின் சந்தையின் 10%ஐ இவர்கள் கட்டுப்படுத்துகின்றனர். அடுத்த சில ஆண்டுகளுக்குள் மேலும் 40,000 மெகாவாட் இவர்களது பிடிக்குள் வர இருக்கிறது. உலகிலேயே மிகப்பெரிய குறுகிய கால பிணந்தின்னி மின் சந்தை இந்தியச் சந்தைதான். இதனை மேலும் ஊக்குவிக்கும் வகையில் அக். 2008 முதல் 'பவர் எக்ஸ்சேஞ்ஜ் ஆப் இந்தியா' என்ற ஆன்லைன் சந்தை தொடங்கப்பட்டு, இதில் சூதாடப்படும் பண்டமாக மின்சாரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தொடங்கி மூன்றாவது ஆண்டிலேயே 1000 கோடி யூனிட்டுகளுக்கு மேற்பட்ட மின்சாரம் இந்தச் சந்தையில் சூதாடப்பட்டிருக்கிறது என்று பெருமை பொங்க அறிவித்திருக்கிறார் மத்திய மின்சாரத்துறை இணை அமைச்சர் கே.சி.வேணுகோபால்.

தனியார் அணுமின் நிலையங்களும் அனுமதிக்கப்பட இருக்கின்றன. ரிலையன்ஸ் எனர்ஜி, டாடா பவர், லார்சன் அண்டு டூப்ரோ போன்ற நிறுவனங்கள் பிரான்சின் அரேவா, ஜப்பானிய தோஷிபா நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை வருகின்றன. இந்திய அணுசக்திக்கழகத்தின் (NPCIL) முன்னாள் தலைவர் வி.கே.சதுர்வேதி ரிலையன்ஸிலும், எஸ்.ஏ.வோரா என்ற முன்னாள் இயக்குநர் டாடா பவர் நிறுவனத்திலும் பொறுப்பேற்றிருக்கின்றனர். (அவுட்லுக், 22 அக்; 2007)

சூரிய ஒளி, காற்றாலை போன்ற மாற்று மின்சார முயற்சிகளும்கூட, பெரும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களிடமே தரப்படுகின்றன. அவர்களுக்கு மானியங்களை வாரி வழங்குவதுடன், அவர்கள் தயாரிக்கும் மின்சாரத்தையும் அடாத விலை கொடுத்து வாங்கு



படிப்பகம்

www.padippakam.com

கின்றன மின்வாரியங்கள். தமிழக மின்வாரியம் காற்றாலைகளுக்கு வைத்திருக்கும் கடன் மட்டும் 1500 கோடி ரூபாய்.



தற்போது 77% மின்சாரத்தை மத்திய, மாநில அரசு மின்நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்றன. 23% தனியார் உற்பத்தி. அடுத்த 5 ஆண்டுகளுக்குள் தனியார் முதலாளிகளின் பங்கை 60% ஆக உயர்த்தவிருப்பதாகக் கூறி அமெரிக்க முதலீட்டாளர்களை வரவேற்றிருக்கிறார் மத்திய மின்சார அமைச்சர் ஷிண்டே.

மின் உற்பத்தி மட்டுமல்ல, மின் விநியோகமும் தனியார்மயமாக்கப்பட்டு வருகின்றது. டில்லி மின்விநியோக நிறுவனத்தின் பெயர், டாடா பவர் கம்பெனி என்றே மாற்றப்பட்டுவிட்டது. உற்பத்தி, விநியோகம் இரண்டையும் அரசு மின்வாரியமே செய்வது ஏகபோகம் என்று கூறி, மாநில மின் வாரியங்களை உடைத்திருக்கும் அரசு, டாடா-அம்பானிகளின் நிறுவனங்கள் உற்பத்தியிலும் விநியோகத்திலும் மட்டுமின்றி எரிபொருளிலும் தரகு முதலாளிகள் ஏகபோகம் செலுத்துவதை கேள்விக்குள்ளாக்கவில்லை.

இருப்பினும், மோசமான சேவை, அசாத்தியமான கட்டண உயர்வு ஆகிவற்றால் தனியார் சேவை பல்லிளித்துவிட்டது. ஆத்திரம் கொண்ட டில்லி, மும்பை மக்கள் மீண்டும் அரசு மின்வாரியம் கோரிப் போராடுகின்றனர்.

மைய அரசு அமைத்திருக்கும் சுங்லு கமிட்டியோ, மின் தட இழப்பைக் குறைப்பதற்கு, மின் விநியோகத்தை மின்வாரியங்களிடமிருந்து பறித்து, அதைத் தனியார் முகவர்களுக்கு (Franchisee) கொடுக்குமாறும், கம்பிகள்- டிரான்ஸ்பார்மர்கள் உள்ளிட்ட கட்டுமானங்களை 25 ஆண்டுகளுக்கு இலவசமாகப் பயன்படுத்திக்கொள்ள அவர்களை அனுமதிக்குமாறும் ஆலோசனை கூறியிருக்கிறது. பேருந்துநிலைய கக்கூசை ஏலம் விடுவது போல, 255 நகரங்களின் மின் விநியோகத்தை ஏலம் விட்டு அரசாங்கம் கல்லா கட்டிவிடலாம் என்றும், அந்த ஏலதாரர்கள் மக்களிடம் வசூலித்துக் கொள்ளட்டும் என்றும் ஆலோசனை கூறியிருக்கிறது. பஞ்சாப், ஹரியானாவில் 31 நகரங்களில் முன்னோட்டமாக இது அமல்படுத்தப்பட இருக்கிறது. (இந்தியன் பவர் செக்டார், 10.2.2012) நெடுஞ்சாலைத் துறை டோல்கேட்டுகள் வசூலில் வெற்றியடைந்திருப்பதால், அதே முறையிலான தனியார்துறை-பொதுத் துறை கூட்டினை மின் விநியோகத்திலும் அமல்படுத்தலாமென்றும் அரசு சிந்தித்து வருகிறது. மின் கட்டண வசூலை உத்திரவாதப்படுத்த, ஸ்மார்ட் மீட்டருடன் ப்ரீபெய்டு கார்டு முறையை இணைப்பது குறித்தும் பரிசீலித்து வருகிறார்கள்.

தெற்காசியா முழுவதற்கும் 30,000 கோடி டாலர் செலவில் ஒரு மின் விநியோக வலைப்பின்னலை அமைத்து, ஒரே மின்சாரச் சந்தையின் கீழ் தெற்காசியாவின் எல்லா நாடுகளையும் கொண்டுவரவேண்டும் என்பதும் இந்தியத் தரகுமுதலாளிகளின் வேட்கை. தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயத்துக்கான அமைச்சர்கள் கூட்டத்தில் மத்திய அமைச்சர் ஆனந்த் சர்மா இதனைக் கூறினார். இத்திட்டத்தின் அடிப்படையில் தான் இந்திய-இலங்கை கடல்வழி மின்தடம் அமைக்கப்பட இருக்கிறது.

இன்று நாம் சந்திக்கும் பிரச்சினையை மின் உற்பத்திப் பற்றாக்குறை தோற்றுவிக்கும் நெருக்கடி என்று மட்டும் குறுக்கிப் புரிந்து கொள்ள கூடாது. குஜராத்திடம் 2000 மெகாவாட் மின்சாரம் உபரியாக விற்க வழியில்லாமல் உள்ளது. முதலாளித்துவ பொருளாதாரத்தில் பற்றாக்குறையைக் காட்டிலும் அபாயகரமான பிரச்சினை உபரி.

நாளை தமிழகம் மின் உபரி மாநிலமாகலாம். ஆனால் அந்த உபரி, சாதாரண மக்களின் மின்சாரப் பற்றாக்குறையை அதிகரிக்கும். இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் பிதுங்கி வழியும் தானியம், மக்கள் அன்றாடம் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்து வருவதைப் போல.

உணவு-பட்டினியைத் தோற்றுவிக்கும். மின்சாரம்-இருட்டையும் தோற்றுவிக்கும்.

● சூரியன்

## அறிவிப்பு

''கறுப்புப் பணம்: கறுப்புக்கும் வெள்ளைக்கும் இடையில்...'' மற்றும் ''ஜெயாவின் நிர்வாகத் திறன்: கலைகிறது பார்ப்பன பம்மாத்து!'' ஆகிய இரு கட்டுரைகளின் தொடர்ச்சி தவிர்க்க வியலாத காரணத்தினால் இவ்விதழில் இடம்பெறவில்லை என தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

# கட்டணக் கொள்ளையை வீழ்த்திய பெற்றோர்களின் போராட்டம்!

**சி**தம்பரத்திலுள்ள காமராஜ் மெட்ரிக் பள்ளியில் ஸ்மார்ட் கிளாஸ் என்ற பெயரில் அரசுக் கட்டணத்தைவிட பல மடங்கு அதிகமாக பத்தாயிரம் முதல் பதினைந்தாயிரம் ரூபாய் வரை வசூலிப்பதை எதிர்த்து தொடர்ந்து விடாப்பிடியாக நடத்திய போராட்டத்தில், மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கத்தினர் வெற்றியைச் சாதித்துள்ளனர். இப்பள்ளி நிர்வாகம் தம்மிடமிருந்து கட்டணமாக 20 லட்ச ரூபாய் அளவுக்குப் பறிக்கப் படுவதைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

ஸ்மார்ட் கிளாசுக்கு அரசுக் கட்டணம் மட்டுமே செலுத்திய மாணவர்களுக்கு அரையாண்டு விடைத்தாள், மதிப்பெண் பட்டியல் தரமுடியாது என அடாவடித்தனம் செய்த பள்ளி நிர்வாகத்தை எதிர்த்து கடந்த ஜனவரி 25 அன்று பெற்றோர் சங்கத்தினர் பள்ளியை முற்றுகையிட்டுப் போராடி வெற்றியைச் சாதித்தனர். (பார்க்க: புதிய ஜனநாயகம், பிப். 2012) இருப்பினும், பள்ளி நிர்வாகம் தீர்மானித்த கட்டணத்தைச் செலுத்தாத மாணவர்களைத் தனியாக அமர வைத்து இழிவுபடுத்தும் கொடுஞ்செயல் தொடர்ந்த நிலையில், நடவடிக்கை எடுக்கக் கோரி மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் துணையுடன் பெற்றோர் சங்கத்தினர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.

''அரசு உத்தரவை மதிக்காத பள்ளித் தாளாளரைக் கைது செய்!'' என சுவரொட்டிப் பிரச்சாரத்தோடு, ஜனவரி - பிப்ரவரி மாதங்களில் தொடர்ச்சியாக தெருமுனைப் பிரச்சாரத்தை நகரெங்கும் நடத்தி ஆதரவைத் திரட்டினர்.

அதன் தொடர்ச்சியாக, மாணவர்களை வகுப்பறையில் ஒன்றாக அமர வைக்கும்வரை காலவரையற்ற முற்றுகைப் போராட்டத்தை 27.2.2012 அன்று நடத்தி நிர்வாகத்தைப் பணிய வைத்தனர். பின்னர், நீதியரசர் சிங்காரவேலுவிடம் இவ்வனைத்து நிகழ்வுகளையும் புகாராக அனுப்பி வைத்தனர். 1.3.2012 அன்று வழக்கு விசாரணையின் போது, ஸ்மார்ட் கிளாசுக்காக ரூ.15 லட்சத்துக்கு மேல் செலவாகியுள்ளதாக நிர்வாகம் கூறியபடி ரூ.15 லட்சத்தை பள்ளியில் மொத்தமுள்ள 2500 மாணவர்களின்படி வகுத்து, ஒரு மாணவனுக்கு ரூ. 600 செலுத்தினால் போதும் என கட்டணத்தை நிர்ணயித்து, பெற்றோர் சங்கத்தைச் சேர்ந்த 200 பேரும் இத்தொகையை டிடி எடுத்து பள்ளி நிர்வாகத்துக்கு அனுப்புமாறும் சிங்காரவேலர் உத்தரவிட்டுள்ளார்.

கல்விக் கொள்ளையருக்கு எதிரான இந்தப் போராட்டத்தின் வெற்றியைக் கண்ட இதர மாணவர்களின் பெற்றோர்கள், தங்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட ஒரு கோடிக்கும் மேலான தொகையைத் திரும்பப் பெற முடியும் என்ற நம்பிக்கையைப் பெற்றுள்ளனர். ஒற்றுமையுடனும் உறுதியுடனும் பெற்றோர்கள் நடத்திய இப்போராட்டமும் அதன் வெற்றியும் இவ்வட்டாரமெங்கும் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

-பு.ஜ. செய்தியாளர், சிதம்பரம்.

# “அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் அடிப்படை வசதிகளை உடனே செய்து கொடு!”

## – புரட்சிகர மாணவர் – இளைஞர் முன்னணியின் ஆர்ப்பாட்டம்.

**த**மிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள் குடிநீர், கழிவறை, உணவக, நூலக வசதியில்லாமலும், போதிய கட்டிடங்கள் இல்லாமலும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் திறமையை ஊக்குவித்து வளர்க்கும் வகையில் கலை - பண்பாட்டு விழாக்களோ, விளையாட்டு விழாக்களோ நடத்தப்படுவதில்லை. இவற்றை உடனடியாக நிறைவேற்றக் கோரியும், தங்கள் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் மாணவர்கள் மீது அரசும் போலீசும் நடத்திவரும் பொய்ப்பிரச்சாரத்தையும் தாக்குதலையும் முறியடிக்க அனைத்து மாணவர்களும் ஓரணியில் திரள வேண்டிய அவசியத்தை உணர்த்தியும் பு.மா.இ.மு.சார்பில் 1.3.2012 அன்று சென்னை மெமோரியல் ஹால் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



வணிகமயக் கல்வியை ஊக்குவித்து அடிப்படை வசதிகள் இல்லாமல் அரசுக் கல்லூரிகளைப் புறக்கணிக்கும் தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை முறியடிக்கவும், மாணவர் - ஆசிரியர் - உழைக்கும் மக்களின் ஒற்றுமையைக் கட்டிக்காக்கவும் அறைகூவி முழக்கங்கள் எங்கும் எதிரொலிக்க சென்னைக் கிளைச் செயலர் தோழர் கார்த்திகேயன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், சட்டக்கல்லூரி மாணவர் தோழர் மருது, ம.உ.பா.மையத்தின் வழக்குரைஞர் மில்டன், பு.மா.இ.மு. மாநில அமைப்பாளர் தோழர் கணேசன் ஆகியோர் உரையாற்றினர். பல்வேறு கல்லூரிகளிலிருந்து மாணவர்களும் பெற்றோர்களும் இளைஞர்களும் பெருந்திரளாகப் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம், மாணவர்களைச் சமூக அக்கறையற்ற விட்டேத்திகளாகவும் வன்முறையாளர்களாகவும் சித்தரித்துவரும் ஊடகங்கள், போலீசு, நீதித்துறையின் பொய்ப்பிரச்சாரத்தை முறியடிப்பதாக அமைந்தது.

-பு.ஜ. செய்தியாளர்.



படிப்பகம்

www.padippakam.com

# மக்களாட்சி அல்ல, மாஃபியா ஆட்சி!

**கனிம வளங்களைக் கொள்ளையிடும் மாஃபியாக்களின் ஆதிக்கமும் அட்டூழியங்களும் யாரும் கேள்வி கேட்க முடியாத வண்ணம் அதிகரித்து விட்டன.**

மத்தியப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக அள்ளப்பட்ட கனிமங்களையும் இரும்புத்தாதுவையும் ஏற்றிவந்த டிராக்டரைத் தடுத்து நிறுத்திய நரேந்திரகுமார் எனும் இளம் ஐ.பி.எஸ். அதிகாரியின் மீது சுரங்க மாஃபியாக் கும்பல் டிராக்டரை ஏற்றிக் கொன்றுள்ளது. சுரங்க முறைகேட்டைத் தடுக்க உயரதிகாரிகளிடம் நரேந்திரகுமார் பல முறை வலியுறுத்தியும் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கவில்லை. கொள்ளையர்கள் பா.ஜ.க. ஆட்சியின் பாதுகாப்பின் கீழ் அஞ்சாமல் கொள்ளையைத் தொடர்ந்துள்ளனர். மாநில முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் முதல் அமைச்சர்கள், பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் வரை அனைவரும் சட்டவிரோத சுரங்கக்கொள்ளை நடத்துவதாக முன்னாள் காங்கிரசு முதல்வர் திக்விஜய் சிங் குற்றம் சாட்டியிருக்கிறார்.

இது படுகொலை என்பதையே மறைத்து, விபத்து என்று சக அதிகாரிகள் தனக்குச் செய்தி அனுப்பியதாகக் குற்றம் சாட்டுகிறார், நரேந்திர குமாரின் தந்தை கேசவ் தேவ். இவர் உ.பி மாநிலத்தில் பணியாற்றும் போலீசு எஸ்.ஐ. கொல்லப்பட்ட நரேந்திர குமாரின் மனைவி ஐ.ஏ.எஸ். அதிகாரி. தற்போது பேறு கால விடுப்பில் இருக்கிறார். பாரதிய ஜனதா எம்.எல்.ஏ. மோகன்குமார்தான் இந்தக் கொலைக்குக் காரணம் என்று குற்றம் சாட்டும் கேசவ் தேவ், தனது மகனுக்கும் மருமகளுக்கும் மோகன்குமார் கொலைமிரட்டல் விட்டிருந்ததாகவும், இதன் காரணமாகத்தான் தனது மருமகளுக்குத் திடீரென்று மாற்றல் உத்தரவு போடப்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார். ‘‘மகனை இழந்ததால், பாவம் கேசவ்தேவுக்கு பைத்தியம் பிடித்து விட்டது’’ என்று ஊடகங்களுக்கு திமிராகப் பேட்டி தருகிறார், ம.பி. உள்துறை அமைச்சர்.

இதே மாநிலத்தில் மணல் கொள்ளை மாஃபியாக்கள், பன்னா மாவட்டத்தில் போலீசு உயர் அதிகாரி கௌட் என்பவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். சம்பல் பள்ளத்தாக்கு பகுதியில் பா.ஜ.க. முன்னாள் எம்.எல்.ஏ. நரேந்திர சிங் தலைமையிலான கள்ளச்சாராய மாஃபியாக்கள், ஹோலி பண்டிகை அன்று மதுவிற்பனை செய்ததைத் தடுக்க முயன்ற ஐ.பி.எஸ். அதிகாரி ஜெய்தேவன் மீது கொடூரத் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

ம.பி.யின் உமாரியா மாவட்டத்தில் உள்ள அரசு நிலக்கரி சுரங்கங்களில் இருந்து பா.ஜ.க. தலைவர் ஒருவரின் தலைமையில் நிலக்கரி திருட்டில் ஈடுபட்டுள்ள மாஃபியாக்களை அம்பலப்படுத்தி இந்தி, ஆங்கிலப் பத்திரிக்கைகளில் எழுதிக் கொண்டிருந்தார் மூத்த பத்திரிகையாளர் சந்திரிகா ராய்(42). சர்வ கட்சிகள், அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நடந்துவந்த இக்கொள்ளையை அம்பலப்படுத்தியமையால் சந்திரிகா ராயையும் அவரின் மனைவி, மகன், மகள் அனைவரையும் வீடு புகுந்து படுகொலை செய்துள்ளது மாபியா கும்பல். போலீசு திட்டமிட்டே புலன் விசாரணையை திசை திருப்புகிறது என்றும், கொலைகாரர்கள் குறித்துத் துப்பு கொடுப்பவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் பரிசளிப்பதாகவும் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார், அவரது சகோதரர் மிதிலேஷ் ராய்.

சுரங்க மாஃபியாவை எதிர்த்துப் போராடிய நரேந்திர குமார் சாதாரண நபரல்ல, ஐ.பி.எஸ். அதிகாரி. அவரின் மனைவியும் கூட ஐ.ஏ.எஸ். அதிகாரி. சந்திரிகா ராய் மூத்த பத்திரிகையாளர். சென்ற ஆண்டு மராட்டிய மாநிலத்தில் கலப்பட மண்ணெண்ணை கும்பலைத் தடுக்க முயன்று உயிரோடு கொளுத்தப்பட்டவரோ ஒரு சப் கலெக்டர்.

இருந்த போதிலும், அரிதாகத் தென்படும் சில நேர்மையான அதிகாரிகளையும், எப்போதாவது வழங்கப்படும் கோர்ட்டு தீர்ப்புகளையும் காட்டி ‘நேர்மையானவர்களால்’ இந்த அமைப்பைச் சரிசெய்துவிட முடியும் என்றும் ஊழலை, கொள்ளைகளை ஒழித்து விட முடியும் என்றும் செய்யப்படும் பிரச்சாரம் தொடரத்தான் செய்கிறது.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் கனிமவளங்களைக் கொள்ளையிடும் மாஃபியா கும்பலால் கொடூரமாகக் கொல்லப்பட்ட பத்திரிக்கையாளர் சந்திரிகா ராய் மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரி நரேந்திர குமார் (வலது).





படிப்பகம்

www.padippakam.com

சட்டவரையறைக்குள்ளாகவே கிரிமினல்களின் கொட்டத்தைத் தடுத்துவிட முடியும் என விதைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கை, நல்லெண்ணம் கொண்ட சில அதிகாரிகளுக்கு மட்டுமல்ல; சாமானிய மனிதர்களுக்கும் இருக்கத்தான் செய்கிறது. ஊரின் நலன் மீதும், இயற்கைச் செல்வங்களின் மீதும் அக்கறை கொண்ட இளைஞர்கள், இத்தகைய மாஃபியாக்களுக்கு எதிராகச் சட்டரீதியாகப் போராடும்போது அவர்களும் பலியாடுகளாகி விடுகின்றனர்.



தமிழகத்தில் மணல் கொள்ளை மாஃபியா கும்பலால் கொல்லப்பட்ட சதீஷ்குமார் (இடது); ரியல் எஸ்டேட் மாஃபியாக்களால் கொல்லப்பட்ட புவனேஸ்வரன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூர் அருகே நம்பியாற்றில் சட்டவிரோதமாக மணல் அள்ளி வந்த டிப்பர் லாரியைப் பொதுமக்கள் வழிமறித்தபோது, லாரியை ஏற்றி சதீஷ்குமார் என்ற இளைஞரைக் கொன்றுள்ளனர். சதீஷ்குமார் மட்டுமல்ல, மணல் கொள்ளையை எதிர்த்த சி.பி.ஐ. கட்சித் தொண்டர் சுடலைமுத்துவும், தனியாகப் போராடிய தாசில்தார் ஒருவரும் சில ஆண்டுகளுக்கு முன் பலியாகியிருக்கின்றனர்.

தமிழகத்தின் மணல் கொள்ளை மாஃபியா என்பது ஓட்டுப் பொறுக்கிகளும் அதிகார வர்க்கத்தினரும் இணைந்து அமைத்துள்ள தேர்தல்களுக்கு அப்பாற்பட்ட கொள்கைக் கூட்டணி. இருப்பினும், இந்த உண்மை திட்டமிட்டே மறைக்கப்படுகிறது. சதீஷ்குமார் கொலையை ஒட்டித் தலையங்கம் எழுதியுள்ள தினமணி நாளேடு, ‘முதல்வர் முறைத்துப் பார்த்தாலே போதும், முறைகேடுகளில் ஈடுபடுவோர் மூலைக்கொருவராக ஓடி ஒளிந்து கொண்டுவிடுவார்கள்’ என்று எழுதுகிறது. எந்தக் கட்சிப் பிரமுகரால் சதீஷ்குமார் கொல்லப்பட்டாரோ, அந்தக் கொள்ளைக் கூட்டத் தலைவியின் கடைக்கண்ணில் நீதியை எதிர்பார்க்கக் கோருகிறார், தினமணி வைத்தியநாதன்.

ஒட்டுமொத்த அரசமைப்பும் மக்கள் மத்தியில் அம்பலப்பட்டுப்போன நிலையில், இவ்வமைப்பின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த ஆளும் வர்க்கம் மேற்கொண்ட முயற்சிகளில் ஒன்றுதான் தகவல் அறியும் உரிமைச் சட்டம். தனியார்மய-தாராளமயச் சீர்திருத்தத்துக்கு மனிதமுகம் தருகிறோம் என்ற போர்வையில் ‘அமைப்பை மேலும் ஜனநாயகப்படுத்துவது’ என்று பீற்றிக்கொண்டு கொண்டுவரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தினால் ஊழலை அம்பலப்படுத்தி அமைப்பை சரிசெய்துவிடலாம் என்ற பிரச்சாரம், பல நேர்மையான சமூக ஆர்வலர்களை மயக்கத்தில் ஆழ்த்தியது.

இந்த சட்டத்தின் மூலம் தகவல்பெற முயல்பவர்களே குறிவைத்துக் கொல்லப்படுகின்றனர். மும்பையில் சட்டவிரோதக் கட்டுமானங்கள் குறித்த தகவல்களைக் கேட்டிருந்த பிரேம்கந்த் ஜா, நந்தேடுவில் தகவல் உரிமைச் சட்ட செயல்பாட்டாளர் ராம்தாஸ், மராட்டிய ஊழல் அதிகாரிகளை அம்பலப்படுத்திய தத்தா பாட்டில், மும்பையில் ராணுவ அதிகாரிகளின் ஆதர்ஷ் ஊழல் குறித்த தகவல்களை அறிய முயன்ற சந்தோஷ் திவாரி, அகமதாபாத்தில் சட்டவிரோத இறைச்சிக் கூடங்கள் குறித்த தகவல்களைச் சேகரித்த நதீம் சயீத், பீகாரில் நலத்திட்ட ஊழல்களை எதிர்த்துப் போராடிய சசிதர் மிஷ்ரா, போபாலில் மசூத் எனும் ஊழல் எதிர்ப்புப் போராளி - எனக் கொல்லப்பட்டோரின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. ஆவடி அருகிலுள்ள தனது நிலத்தை ஆக்கிரமித்தவர்கள் குறித்து தகவல்களை அறிய முயன்ற புவனேஸ்வரன் (38) என்பவரை தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. ரங்கநாதனின் அடியாட்கள் கடந்த ஜனவரியில் அடித்தே கொன்றுள்ளனர்.

பொதுச்சொத்தைச் சூறையாடும் கிரிமினல் மாஃபியா கூட்டணியை அதிகார வர்க்கம், போலீசு, நீதித்துறையின் உதவியுடன் எதிர்த்து வெற்றி பெற்று விடலாம் எனும் நம்பிக்கையில் போராடுபவர்களை மாஃபியாக்கள் அழித்து வருகின்றனர். நேர்மையான ஐ.ஏ.எஸ்; ஐ.பி.எஸ். அதிகாரிகளே கொன்று வீசப்படும் சூழ்நிலையில், ‘நீதிமன்றத் தீர்ப்புகள், தகவல் அறியும் உரிமை, லோக்பால்’ போன்றவற்றைக் காட்டி ஊடகங்கள் உருவாக்கும் பிரமைக்கு, அபூர்வமான செயல்வீரர்கள் பலர் பலி கொடுக்கப்படுகின்றனர்.

தனியார்மயம் - தாராளமயத்தின் விளைவாக உருவாகி இருக்கும் மணல் கொள்ளை மாஃபியாவிலிருந்து சுரங்க மாபியா வரையிலான கிரிமினல் கும்பல்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சட்ட விரோதமானவையாக இருந்தாலும், அவர்கள் இரகசிய உலகப் பேர்வழிகள் அல்லர். அவர்களெல்லாம் சட்டபூர்வமான பதவிகளில் அமர்ந்திருக்கின்றனர். அவர்களைப் பற்றி அரசிடம் புகார் செய்வதற்கு ஏதுமில்லை. அவர்கள்தான் அரசு.

தனிநபர்களின் போராட்டங்களாலோ, காகிதச் சட்டங்களாலோ இவர்களை ஒழிக்க முடியாது. அவ்வாறு ஒழிக்க முடியும் என்று நம்பிய அப்பாவிகள்தான் ஒழிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்றாட வாழ்வின் சாதாரண அநீதிகளை எதிர்த்துப் போராடுவதற்குக்கூடப் புரட்சிகர அமைப்பும், போர்க்குணமிக்க நடவடிக்கையும் தேவை என்பதையே இந்த அனுபவங்கள் காட்டுகின்றன.

● சுப்பு



படிப்பகம்

www.padippakam.com

## கொத்தடிமைத் தொழிலாளர் அவலம்:

# வல்லரசின் முகத்தில் வழியும் மலம்!

**கொத்தடிமைத் தொழிலாளர்கள் எத்தனைக் கொடூரமாகச் சுரண்டப்படுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டும் வெள்ளையன் என்ற தொழிலாளியின் கண்ணீர்க்கதை!**

கொத்தடிமை முறையா? அதெல்லாம் அந்தக் கால முங்க என்பதுதான் பெரும்பாலோனோரின் எண்ணம். இது பற்றி, அத்தி பூத்தாற் போலத் தினப் பத்திரிகைகளில் வரும் செய்திகளையும் எளிதில் கடந்து சென்று விடுகிறோம்.

உண்மை அத்தனை எளிதில் கடக்கக் கூடியதாய் இல்லை. விழுப்புரம் மாவட்டம் திருவாக்கரையில் கல் குவாரி ஒன்றில் வேலை செய்கிறார் 40 வயதான வெள்ளையன். கடந்த ஜனவரி 31-ஆம் தேதி காலை இவரது வீட்டுக்கு வந்த கல்குவாரி முதலாளி துரையின் அடியாட்கள் இவரைச் சரமாரியாக அடித்து இழுத்துச் சென்றுள்ளனர். கல்குவாரியில் சம்மட்டி ஒன்றைத் திருடிவிட்டதாக இவர் மீது குற்றம் சுமத்தியுள்ளனர். தன்னுடன் வேலை செய்யும் வீரப்பன் என்பவரது சம்மட்டியை இவர் 300 ரூபாய்க்கு விற்றுக் கொடுத்ததுதான் இவர் மீது சந்தேகப்படக் காரணம். இந்தச் சந்தேகத்துக்கு விசாரணை கிடையாது. நேரடியாகத் தண்டனைதான்.

முதலாளி துரையிடம், தான் திருடவில்லை என்று வெள்ளையன் மன்றாடியுள்ளார்; ஒரு கட்டத்தில் சம்மட்டிக்கான தொகையை வேலை பார்த்துக் கழித்துக் கொள்வதாகச் சொல்லி, தன்னை விட்டுவிடக் கோரிக் கெஞ்சியுள்ளார். எதையும் பொருட்படுத்தாத கல்குவாரி முதலாளி, உன்ன மாதிரி ஆட்களுக்கு இப்படி தண்டனை கொடுத்தால்தான் பார்க்கிற மத்தவனுக்கும் புத்தி வரும் என்று சொல்லி, அங்கேயே ஒரு சட்டியைக் கொண்டு வரச் செய்து, மறைவாகச் சென்று தானே அதில் மலம் கழித்து, அதனைக் கொண்டு வந்து வெள்ளையனின் வாயில் திணித்துள்ளான்.

பிற கல்குவாரி தொழிலாளர்கள் மற்றும் வெள்ளையனின் மனைவி முன்னிலையில் இந்தக் கொடுமை அரங்கேறியுள்ளது. பிறகு வெள்ளையனைக் கொடூரமாக தாக்கியுள்ளனர். அடி தாங்காமல் மயங்கிச் சரிந்தவரை அடைத்து வைத்துக் கொண்டனர். இக்கொடுமைகளை பார்த்தேயாக வேண்டும் என்று இவரது மனைவியை அடித்து உதைத்து நிர்பந்தித்துள்ளனர். இவையனைத்தையும் செல்பேசியில் படம்பிடித்தும் வைத்துள்ளான் முதலாளி துரை. வெள்ளையனுடைய மற்றும் அவரது மாமனார் வீடுகளிலுள்ள பொருட்களைக் கைப்பற்றிக் கொண்டு வீடுகளையும் பூட்டி வைத்துள்ளனர். வெள்ளையனின் 9 வயது மகளுக்கு இச்சம்பவம் பற்றி நினைவு கூர்ந்தாலே பேச்சுக் குழறுகிறது.

ஒரு சம்மட்டிக்காகவா இத்தனை வக்கிரமும், கொடூரமும் நிறைந்த வன்கொடுமை? சந்தேகத்தின் பேரிலேயே மொத்த வாழ்வையும் சீரழிக்கும் தண்டனையை கொடுக்கும் அதிகாரத்தைக் கல்குவாரி முதலாளிக்கு வழங்கியது யார்? எதற்கும் அஞ்சாமல் இத்தகைய கொடூரத்தை இழைக்கும் ஆண்டைத் திமிரை கல்குவாரி முதலாளி எங்கிருந்து பெற்றான்? 300 ரூபாயை முதலாளி முகத்தில் விட்டெறிந்துவிட்டு வேறு வேலைக்குப் போக வழியில்லாத அடிமை நிலையில் வெள்ளையனைக் கட்டுப்படுத்தி வைத்துள்ளது எது? இத்தனை கொடூரமும் கண்முன்னே நிகழ்ந்த போதும் எதிர்க்க இயலா கையறு நிலையில் கல்குவாரியில் வேலை செய்பவர்களைக் கட்டிப் போட்டு வைத்திருந்தது எது? இக்கேள்விகளுக்கு மனசாட்சியுள்ள அனைவரும் விடை காண வேண்டியுள்ளது.

கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டம் 1976-இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் போலவே கொத்தடிமை முறைக்குக் காரணமான சமூகப் பொருளாதார காரணிகளை ஒழிக்க எந்தத் திட்டமும் இல்லாத வெறும் காகிதச் சட்டம். 1978-இல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி

நிரூபிக்கப்படாத திருட்டுக் குற்றத்திற்காக, வாயில் மலம் திணிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்ட வெள்ளையன். (உடன்) அவரது மனைவி மற்றும் மகள்.





படிப்பகம்

www.padippakam.com

26 லட்சம் கொத்தடிமைகள் நாடு முழுவதும் இருந்தனர். 1995-இல் தமிழகத்தில் மட்டும் 10 லட்சம் கொத்தடிமைகள் இருந்துள்ளனர் என உச்ச நீதிமன்றத்தின் அறிக்கை சொல்கிறது. இன்றைய நிலையில், தமிழ்நாட்டு கல்குவாரிகளில் மட்டும் 5.5 லட்சம் கொத்தடிமைகள் வேலை செய்கின்றனர் என தமிழ்நாடு கல்லுடைக்கும் தொழிலாளர் சங்க நிறுவனர் ஞானமணி சொல்கிறார். கொத்தடிமைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதைத்தான் இப்புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

> **முன்னூறு ரூபாயை முதலாளி முகத்தில் விட்டெறிந்துவிட்டு வேறு வேலைக்குப் போக வழியில்லாத அடிமை நிலையில் வெள்ளையனைக் கட்டுப்படுத்தி வைத்துள்ளது எது? அவருக்கு நேர்ந்த கொடூரத்தை நேருக்கு நேராகப் பார்த்த பிறகும் அதனை எதிர்க்க இயலா கையறு நிலையில் கல்குவாரியில் வேலை செய்பவர்களைக் கட்டிப் போட்டு வைத்திருந்தது எது?**

நாடு முழுவதும் கொத்தடிமைகளாக இருப்பவர்களில் 80% பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள். விவசாயம் பொய்த்துப் போவது, குடும்பத் தேவைகளுக்காக அதிக வட்டிக்குக் கடன் வாங்குவது, அதனை அடைக்க வேறு வழியின்றிக் கொத்தடிமைகளாக வருபவர்கள் ஒரு பக்கமெனில், பரம்பரை பரம்பரையாகவே கொத்தடிமைகளாக வேலை செய்பவர்களும் தொடர்கிறார்கள்.

திருவாக்கரையில் தாக்கப்பட்ட வெள்ளையன் சேலம் பகுதியைச் சேர்ந்தவர். இவரது தாத்தா, அப்பா காலத்திலிருந்தே கொத்தடிமைகளாக வேலை செய்து வருகின்றனர். வறுமை காரணமாகவும், நாடோடிகள் போலத் திரிய வேண்டியிருப்பதாலும் இவர்கள் வீட்டுப் பிள்ளைகள் படிப்பை பாதியில் நிறுத்தி விடுவதால் வாரிசுகளும் கொத்தடிமைகளாக தொடரும் அவலம் நிலவுகிறது.

கல்குவாரிகள், விவசாயம், செங்கல் சூளைகள், கனிமச்சுரங்கங்கள், தீப்பெட்டி, வெடிமருந்துத் தொழிற்சாலைகள், கோவை மாநகரின் தங்கப்பட்டறைகள் போன்றவைதாம் கொத்தடிமைகளை வேலைக்கு வைத்துள்ள பாரம்பரிய தொழில்துறைகள். இங்கெல்லாம் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அன்றாட நிகழ்வுகளாகும்.

விபத்தின் காரணமாக இறப்போ, உடல் ஊனமோ ஏற்பட்டால் எந்த நிவாரணமும் வழங்கப்படுவதில்லை. எதிர்த்து கேள்வி கேட்டால் கொலை வெறித் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

அவ்வப்போது கணக்குக் காட்டுவதற்காக கொத்தடிமை நிலையிலிருந்து சிலரை மீட்பதாகக் காட்டிக் கொள்கிறது அரசு. ஆனால், மீட்கப்பட்டவர்களோ மீண்டும் கொத்தடிமைகளாக செல்ல வேண்டிய நிலையில்தான் உள்ளனர். செங்கல் சூளையிலிருந்து மீட்கப்பட்டவர்களுக்கு அரசே அமைத்துக் கொடுத்த செங்கல் சூளைகளைப் பல இடங்களில் முதலாளிகள் அடித்து நொறுக்கியுள்ளனர். கல்குவாரிகளிலிருந்து மீட்கப்பட்ட கொத்தடிமைகள் சொந்தமாகக் கல்குவாரிகள் நடத்த முற்பட்டு, முதலாளிகள் மற்றும் அதிகாரிகளின் கடும் தாக்குதலை எதிர்கொள்கின்றனர்.

அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் ரவுடிகளுடன் கொத்தடிமைகளை வேலைக்கமர்த்தும் முதலாளிகள் நெருங்கிய வலைப்பின்னலைப் பராமரிக்கிறார்கள். எனவே, எதிர்ப்பவர்களை ஒடுக்குவதும், ஓரிடத்தில் வேலையிழந்தவருக்கு வேறெங்கும் வேலை கிடைக்கவிடாமல் செய்வதும் சாத்தியமாகிறது. தட்டிக் கேட்க யாருமின்றித் தனி அரசாங்கம் நடத்தும் ஆண்டைத் திமிர்தான் தொழிலாளர்களை மிருகத்தினும் கேவலமாக நடத்த வைக்கிறது.

தமிழகத்தில் ஆறு வருடங்களுக்கு முன்பு கல்லுடைப்போருக்கான குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட்ட போதிலும், அது எங்குமே நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. மேலும், கல்குவாரிகளில் 20% சட்டவிரோதமானவை என்று சொல்கிறார் ஏ.ஐ.டி.யூ.சி துணைச் செயலாளர் கே.ரவி. இன்று இணையம், ஊடகங்களின் செல்வாக்கு காரணமாக அநீதிகளைத் தட்டிக் கேட்பதற்கான வாய்ப்பு வளர்ந்து விட்டதாகப் பலர் கருதிக்கொண்டிருந்தாலும், கொத்தடிமைக் கொடூரங்கள் அதிகரித்துத்தான் செல்கின்றன. அதிகாரிகளின் துணையுடன் முதலாளிகளின் நிலப்பிரபுத்துவ ஆண்டைத்தனம்தான் இங்கெல்லாம் ஆட்சி செய்கிறது.

திருவாக்கரை சம்பவம் போன்றவற்றில் தப்பித் தவறி மாட்டிக் கொள்ளும் சிலரும், பின்னர் முறைப்படி வெளியே வந்து விடுகிறார்கள்.

தமிழகம் தொழில்துறை வளர்ச்சியில் மட்டுமின்றி, கொத்தடிமைகள் அதிகமுள்ள மாநிலம் என்ற வகையிலும் இந்தியாவில் முன்னிலை வகிக்கிறது. மறுகாலனியாக்க கொள்கைகள் விவசாயிகளை ஏதுமற்றவர்களாக்கி வீதியில் வீசுகின்றன. சுமங்கலித் திட்டம் என்ற பெயரில் கிராமப்புற ஏழைப்பெண்களையும், அடுக்குமாடிக் கட்டிடங்களையும் நான்கு வழிச்சாலைகளையும் கட்டி எழுப்புவதற்காக எலிப் பொந்துகள் போன்ற தகரக் கொட்டகைகளில் தங்கி வேலை செய்யும் ஒடிசா, பீகார் தொழிலாளர்களையும் நவீன கொத்தடிமைகளாகத் தினமும் உருவாக்கி வருகின்றன.

நாடு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுவதாகவும், தொழிலாளர்களின் ஊதியமும் மக்களின் வாழ்க்கைத் தரமும் அதிவேகமாக உயர்ந்து வருவதாகவும் பிதற்றிக் கொண்டிருக்கும் கனவான்களின் முகத்திலறைகின்றன இவ்வுண்மைகள்.

● அன்பு



படிப்பகம்

www.padippakam.com

# அணு உலை ஆதரவாளர்களுக்கு புகுஷிமா விடுக்கும் எச்சரிக்கை!

**அணு விபத்து உள்ளிட்டு அனைத்து ஆலை விபத்துகளுக்கும் காரணமான முதலாளித்துவ இலாபவெறியையும் அதிகார வர்க்க அலட்சியத்தையும் அதிநவீன தொழில்நுட்பங்கள் தடுத்து விடுமா?**

கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஜப்பானில் நிகழ்ந்த புகுஷிமா அணு உலை விபத்து அளிக்கும் படிப்பினைகள் என்ன? விபத்து நடந்து ஓராண்டாகியும் அதன் பாதிப்புகள் குறித்த முழு உண்மையும் வெளியிடப்பட வில்லை. அணு உலையிலிருந்து வெளிப்பட்ட கதிர் வீச்சின் செறிவு, பாதிக்கப்பட்ட பரப்பளவு, உலை விபத்தில் மாண்டவர்களின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் குறித்து ஜப்பான் அரசு தொடர்ந்து பொய் சொல்லி வருகின்றது.

எனினும், ஜப்பானின் ஊடகங்களும் பல்வேறு அமைப்புகளும் தகவலறியும் உரிமையைப் பயன்படுத்திப் பல உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளன. ஜப்பான் நாடாளுமன்றக் குழு இந்த விபத்து குறித்து நடத்திய விசாரணையும், பல அதிர்ச்சியூட்டும் உண்மைகளை வெளிக் கொணர்ந்துள்ளது.

கூடங்குளத்தில் கட்டப்படும் அணு உலை, புகுஷிமா அணு உலையைவிடத் தொழில்நுட்ப ரீதியில் முன்னேறியது, அதனால் இங்கே அதுபோன்றதொரு விபத்து ஏற்படாது என நம் நாட்டு அணுஉலை ஆதரவாளர்கள் தொடர்ந்து கூறிவருகிறார்கள். புகுஷிமா விபத்திற்குக் காரணம் தொழில்நுட்பக் குறைபாடல்ல; முதலாளித்துவ இலாபவெறியும், நிர்வாகச் சீர்கேடுகளும், மனிதத் தவறுகளும்தான் காரணம் என்பதை மேற்கூறிய ஆய்வுகள் நிரூபித்திருக்கின்றன.

சுனாமிப் பேரலைகள் புகுந்து அணு உலையின் குளிர்விப்பான் இயங்காமல் போனதால் விபத்து ஏற்பட்டதாகவே கூறப்படுகிறது. ஆனால், சுனாமியின் காரணமாக மின் வினியோகம் தடைப்பட்டு, குளிர்விப்பானின் இயக்கம் நின்றுபோனது ஊழியர்களுக்குத் தெரியவில்லை. உலைக்கு உள்ளே வெப்பம் அதிகரித்து. உலை மெல்ல உருக ஆரம்பித்த பிறகுதான் குளிர்விப்பான் செயலிழந்து விட்டதையே அவர்கள் புரிந்து கொண்டிருக்கின்றனர். இது மனிதத்தவறு.

விபத்துக் காலங்களில் அணு உலையை கையாள்வதற்கான கையேட்டில் குளிர்விப்பான் இயங்குகிறதா என்பதைச் சோதிக்கவேண்டும் என்றோ, இயங்காவிட்டால் செய்ய வேண்டியதென்னவென்றோ கூறப்படவில்லை. இது அலட்சியம்.

உப்புநீர் புகுந்தால் கருவிகள் பழுதாகி நட்டம் அதிகமாகும் என்று கூறி, உலையை கட்டிய ஜெனரல் எலெக்டிரிகல் நிறுவனம் கடல் நீரைப் பயன்படுத்தி உலையைக் குளிர்விக்க முயன்றதைத் தடுத்துள்ளது. இது மக்களைப் பற்றிக் கவலைப்படாத முதலாளித்துவத்தின் இலாப வெறி.

வரவிருக்கும் விபரீதம் கண்டு அஞ்சிய அரசு உலையை நிரந்தரமாக மூடுவது என்று முடிவு செய்ததால்தான் கடல் நீரைப் பயன்படுத்தும்படி உத்தரவிட்டது.

மிகப்பெரிய விபத்தை எதிர்பார்த்த அணு உலை நிர்வாகம், விபத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியைக் கைவிட்டு, 800-க்கும் அதிகமான ஊழியர்களில் 50 பேரைத் தவிர மற்ற அனைவரையும் வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளது. அணு உலை வட்டாரத்தில் வாழ்ந்த 80,000 பேரையும் உடனே வெளியேற்றியது.

புகுஷிமாவிலிருந்து 250 கி.மீ. தொலைவிலிருந்த டோக்கியோ நகரத்தையும் காலி செய்யும்படி அணு சக்தித் துறை அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளனர். டோக்கியோவின் மக்கள் தொகை 3 கோடி. இந்த விபரீத யோசனையை ஏற்க மறுத்த பிரதமர், அதிகமான ஊழியர்களை ஈடுபடுத்தியாவது, உலையைச் சரி செய்ய உத்தரவிட்டிருக்கிறார். நிர்வாகத்தின் பொறுப்பின்மைக்கும் முதலாளித்துவ இலாபவெறிக்கும் இது சான்று.

வெடிப்பைத் தொடர்ந்து, உலையில் ஏற்பட்ட பிரச்சினைகள், அவற்றைச் சரி செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை குறித்த விவரங்களை நாடாளுமன்ற ஆய்வுக்குழு தெரிந்து கொள்ளமுடியவில்லை. காரணம், அப்போது நடத்தப்பட்ட கூட்டங்கள் எதற்கும் குறிப்புப் பதிவுகள் (மினிட்ஸ்) இல்லை. இதனால் விபத்தையொட்டி கண்டுபிடிக்கப்பட்ட தவறுகள், குறைபாடுகள் அதிகாரிகளுக்கு மட்டுமே தெரிந்த இரகசியங்களாக மறைக்கப்பட்டுள்ளன.

அணு உலையைச் சுற்றி 20 கி.மீ. மட்டுமே கதிர்வீச்சு அபாயம் இருப்பதாக ஜப்பான் அரசு கூறுகிறது. ஆனால், அணு உலை வெடிப்பினால் வெளிப்பட்ட அபாயகரமான 'சீசியம்' துகள்கள் 45 கி.மீ. தூரத்தில் உள்ள லிடேட் என்ற கிராமத்தில் கொட்டிக்கிடக்கின்றன. மரங்களில் படர்ந்துள்ள சீசியம் துகள்கள் காற்று வேகமாக வீசும் போது, காற்றின் திசையில் இன்னும் அதிக தூரத்திற்கு பரவுகின்றன.

கதிர்வீச்சு அபாயம் 20 கி.மீ. மட்டுமே என்று ஜப்பான் அரசு தன் மக்களுக்கு கூறிக்கொண்டிருக்க, அணு உலையி



படிப்பகம்

www.padippakam.com




ஃபுகுஷிமாவில் அணு உலை வெடித்த ஓராண்டு நினைவு தினத்தையொட்டி, ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலும் (வலது), பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலும் அணுசக்தி திட்டங்களைக் கைவிடக் கோரி நடந்த ஆர்ப்பாட்டங்கள்.

லிருந்து 80 கி.மீ. தொலைவு வரை உள்ள பகுதிகளில் வாழும் அமெரிக்கர்களை உடனே வெளியேறும்படி அறிவுறுத்தியது அமெரிக்கத் தூதரகம். மக்களை அப்புறப்படுத்துவதிலும் ஜப்பான் அரசு முறையாகச் செயல்படவில்லை. பல இடங்களில் மக்கள் தாமாகவே வெளியேறியுள்ளனர். மினாமி என்ற பகுதியிலிருந்த மருத்துவமனையிலிருந்து நோயாளிகளை வெளியேற்ற எவ்வித வசதியும் இல்லாததால் இரண்டு நாட்களில் 12 நோயாளிகள் உயிரிழந்ததுடன், பல நோயாளிகளும், மருத்துவர்களும் கதிர்வீச்சினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புகுஷிமாவிலிருந்து வெளியேறிய கதிர்வீச்சு முக்கியமாக நெற்பயிர்களையும், பசு மாடுகளையும் பாதித்துள்ளது. இதன் காரணமாக அரிசியும், பாலும் கதிர்வீச்சுத் தன்மை கொண்டதாக மாறியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான பால்பவுடர் தயாரிப்பதில் முன்னணியில் உள்ள ஜப்பான் நிறுவனமான 'மெய்ஜி', புகுஷிமா விபத்திற்குப் பிறகு உற்பத்தி செய்யப்பட்ட தங்களது பொருட்களில் கதிர்வீச்சுத் தன்மை உள்ளதைக் கண்டுபிடித்து, அவற்றை திரும்பப் பெற்றுக்கொண்டது.

புகுஷிமா அணு உலை சுனாமி தாக்குதலையும், திடீர் மின் தடையையும் சமாளிக்கும் வகையில் கட்டப்படவில்லை என ஜப்பானின் அணு சக்திப் பாதுகாப்புத் துறையின் தலைவர் ஹரூக்கி மடாரம் பாராளுமன்ற விசாரணைக் குழுவிடம் தெரிவித்துள்ளார். மேலும் ஜப்பானின் அணு சக்தி விதிமுறைகள் தவறானவையாகவும், காலாவதியானவையாகவும் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

புகுஷிமா அணு உலையைக் கட்டிய டோக்கியோ மின்சார நிறுவனம், அது பூகம்பம் மற்றும் சுனாமி பாதிப்பு ஏற்படக்கூடிய இடம் எனத் தெரிந்தேதான் அணு உலைகளைக் கட்டியுள்ளது. அங்கே சுனாமி தடுப்புச் சுவரும் கட்டப்பட்டுள்ளது. ஆனால் மிகப்பெரிய சுனாமி அலைகள் இங்கே எழும்பும் என்று எச்சரித்து வெளிவந்த ஆய்வுகளை அறிவியல்பூர்வமற்றவை என்று கூறி நிராகரித்துள்ளது இந்த நிறுவனம். தற்போது தங்கள் கற்பனைக்கு எட்டாத அளவிற்கு சுனாமி அலை எழுந்து விட்டதாகக்கூறித் தமது தவறை மறைக்கின்றனர் அதிகாரிகள்.

கடந்த பத்து வருடங்களாக புகுஷிமா அணு உலையின் பாதுகாப்பு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படவே இல்லை. விபத்து ஏற்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, புகுஷிமா உலையால் சுனாமியைச் சமாளிக்க முடியாது என்று கூறியிருக்கிறது. இவையெல்லாம் இப்போதுதான் தெரிய வருகின்றன.

ஜப்பானிய மொழியில் ''சொட்கேய்'' என்றொரு சொல் உண்டு. கற்பனைக்கு அப்பாற்பட்டது என்று அதற்குப் பொருள். அணு உலை அதிகாரிகள் வல்லுநர்களிடத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து எந்தக் கேள்வி கேட்டாலும், இப்படிப்பட்டதொரு தவறு நடக்கும் என்றோ, இயற்கைப் பேரழிவு இவ்வளவு பெரிதாக இருக்குமென்றோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்று கூறுகிறார்கள். அதாவது சொட்கேய் என்ற சொல்லுக்குப் பின்னால் ஒளிந்து கொள்கிறார்கள்.

அதிகாரிகளின் இந்தக் கூற்றை ஏற்க மறுக்கும் ஜப்பான் நாடாளுமன்றத்தின் விசாரணை அறிக்கை, அதிகாரிகள் தங்களது தவறுகளை மறைத்துக் கொண்டு இயற்கையின் மீது பழிபோட்டுத் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பதாக குற்றம் சாட்டுகிறது.

அணுசக்தித் துறையில் முன்னணியில் உள்ள, அணு உலைகளை ஏற்றுமதி செய்கின்ற நாடுகளில் ஒன்றான ஜப்பானின், கல்வி, மக்களின் விழிப்புணர்வு, வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் பெரிதும் முன்னேறிய நாடான ஜப்பானின் இலட்சணம் இது. மனிதத் தவறுகளும், அதிகார வர்க்கச் சீர்கேடுகளும் மலிந்த இந்தியாவில் அத்தகைய காரணங்களால் விபத்து ஏற்படுவதற்கான சாத்தியம் பல நூறு மடங்கு அதிகம் என்பதே உண்மை.

அணு உலையைப் பாதுகாக்க எத்தனை முன்னேற்பாடுகளைச் செய்திருந்தாலும், நம் எதிர்பார்ப்புக்கு மேல் இடர் வந்தால் அதன் விலை எத்தனை ஆயிரம் உயிர்களாக இருக்கும் என்ற கேள்விதான் முக்கியமானது. சொட்கேய் என்ற சொல் இலட்சக்கணக்கான மனித உயிர்களைப் பகடைக்காய் ஆக்க நாம் அனுமதிக்க முடியாது.

● அறிவு



படிப்பகம்

www.padippakam.com

## தண்ணீர் தனியார்மயம்:

# பேரழிவின் தொடக்கம்!

**உயிராதாரமான தண்ணீரை விற்பனைச் சரக்கு என்று அறிவித்திருப்பதன் மூலம் ஒரு பேரழிவை முன்மொழிகிறது, தேசியத் தண்ணீர்க் கொள்கை.**

அரசுத்துறை நிறுவனங்களையும் இயற்கை மூல வளங்களையும் தனியார்மயமாக்கி பன்னாட்டு ஏக போக நிறுவனங்களுக்கும் உள்நாட்டுத் தரகுப் பெரு முதலாளிகளுக்கும் தாரைவார்த்துவரும் இந்திய ஆட்சியாளர்கள், இயற்கையின் கொடையான தண்ணீரையும் தனியார்மயமாக்க மூர்க்கமாகக் கிளம்பிவிட்டார்கள்.

இயற்கையின் கொடையான தண்ணீர் உயிரின் ஆதாரம். இயற்கையின் விதிப்படி தண்ணீர் என்பது எல்லா உயிரினங்களுக்கும் இந்த மண்ணுக்கும் உரித் தான பொதுச் சொத்து. தற்போது வாழும் மக்களுக்கு மட்டுமின்றி வரவிருக்கும் தலைமுறைக்கும் அதன் மீது உரிமை உண்டு. அத்தகைய தண்ணீரை பெருமுதலாளி களின் இலாபத்திற்கான வணிகப் பொருளாக, காசுக்கு விற்கும் கடைச்சரக்காக மாற்றும் அநீதியை கொள்கை அறிவிப்பாக இந்திய அரசு அண்மையில் வெளி யிட்டுள்ளது.

''தேசிய நீர்க் கொள்கை வரைவு- 2012'' என்ற 31.1.2012 தேதியிட்ட அறிவிக்கையை இந்திய நீர்வள அமைச்சகம் கடந்த பிப்ரவரி முதல் வாரத்தில் தனது இணைய தளத்தில் வெளியிட்டுள்ளது. ஆங்கிலத் திலும் இந்தியிலும் மட்டுமே வெளியிடப்பட்டுள்ள இந்தக் கொள்கை வரைவின் மீது பொதுமக்கள் தங்கள் கருத்துகளை மின்னஞ்சல் மூலமாக அனுப்ப வேண்டுமாம். இவற்றைப் பரிசீலித்து இந்த வரைவு அறிக்கை இறுதியாக்கப் பட்டு நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

15 பக்கங்களைக் கொண்ட இந்த வரைவு அறிக்கையானது, தண்ணீர் துறையில் சேவையை அளிப்பவர் என்ற பொறுப் பிலிருந்து அரசாங்கம் விலகிக் கொள்ள வேண்டும் என்று பரிந் துரைத்துள்ளது. அதற்குப் பதிலாக, சமூகக் குழுக்களும் தனியார் துறையினரும் இச்சேவையை அளிப்பதை ஊக்குவித்து ஆதரிக்க வேண்டும் என்கிறது. தண்ணீரை வியாபாரப் பண்ட மாக்குவதன் மூலம், தகாத முறையில் தண்ணீரைப் பயன்படுத்துவதும் விரயமாக்குவதும் குறையும் என்று இந்த அறிக்கை அறிவுறுத்துகிறது.

கடந்த ஆண்டு டிசம்பரில் இந்த நகல் அறிக்கை யின் தயாரிப்பு ஏற்பாடுகள் நடந்துவந்த சூழலில், உலக வங்கியின் கைக்கூலியும் திட்டக் கமிசனின் துணைத் தலைவருமான மான்டேக்சிங் அலுவாலியா, ''இந்தி யாவில் மிகவும் அடிமட்ட விலையில் விற்கப்படும் ஒரே பண்டம்தான் தண்ணீர். இதை மாற்றியமைக்க வேண்டும்'' என்று திமிராக அறிவித்தார். அவரது வழி காட்டுதலில் தயாராகியுள்ள இந்த வரைவு அறிக்கை யானது, விவசாயத்துக்கும் குடிமக்களுக்கும் எந்த வடி வத்திலும் தண்ணீருக்காக மானியம் அளிப்பதை முற்றாக ஒழிக்க வேண்டும் என்கிறது. விவசாயத்துக் கான மின்சாரத்துக்கும், தண்ணீருக்கும் மானியம் அளிப்பது வீண்விரயமாக்கும் செயல் என்கிறது.

''உலக மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. இதில் இந்தியர்கள் 17 சதவீதத்தினர். ஆனால், உலகப் பரப்பில் உள்ள நீர்வள ஆதாரம் வெறும் 4 சதவீதம்தான். புவி வெப்பமடைகிறது. உயிராதாரமான நீர் பற்றாக்குறையாகி வரு கிறது'' என்றெல்லாம் கவலையோடு முன்னுரை யாக இந்த வரைவு அறிக்கை கூறுகிறது. பின்னர் ''கவலைப் படாதே சகோதரா! இதோ தீர்வு கிடைத்து விட்டது; இயற்கை மூல வளங்களையும் நீராதாரங் களையும் தனியார் முதலாளிகளுக்கு விற்று விடலாம்'' என்கிறது.

புதிய தேசிய நீர் கொள்கையின்படி, தண் ணீர் சேவை தனியார்

திட்டக் கமிசன் துணைத் தலைவர் மான்டேக்சிங் அலுவாலியா: தண்ணீர் தனியார்மயத்தை மூர்க்கமாகச் செயல்படுத்தும் உலக வங்கியின் கைக்கூலி.





படிப்பகம்

www.padippakam.com




''பெக்டெல்'' எனும் ஏகபோக தனியார் தண்ணீர்க் கொள்ளை நிறுவனத்தை விரட்டியடித்த பொலிவியா நாட்டின் கொச்சபம்பா நகர மக்களின் பேரெழுச்சி.

வசம் இருக்குமாம். இருப்பினும், மாநில அரசுகளும் உள்ளாட்சி அமைப்புகளும் குடிமக்களுக்கு அத்தியாவசியமான குறைந்தபட்ச அளவு தண்ணீரைக் கொடுக்க உத்தரவாதப்படுத்த வேண்டுமாம். அதாவது, அரசாங்கங்கள் தனியாரிடமிருந்து தண்ணீரைப் பணம் கொடுத்து வாங்கி மக்களுக்குக் கொடுக்க வேண்டும். இந்தத் தண்ணீரை ''இலவசத் தண்ணீர்'' அல்லது ''விலையில்லாத் தண்ணீர்'' என்ற பெயர் வைக்கும் உரிமை மட்டுமே அரசாங்கத்திடம் இருக்கும். ஏனெனில், சேவை அளிப்பவர் என்ற பொறுப்பை அரசாங்கங்கள் படிப்படியாகக் கைவிட வேண்டும் என்கிறது இக்கொள்கை.

மின்சார ஒழுங்குமுறை ஆணையம் போன்று நீர் ஒழுங்குமுறை ஆணையம் ஒன்று அமைக்கப்படுமாம். அது கட்டண நிர்ணயம், நீர் ஒதுக்கீடு, கண்காணித்தல், ஆலோசனை வழங்குதல் முதலானவற்றைச் செய்யுமாம். மின்சாரக் கட்டணத்தை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயிப்பதைப் போல, தண்ணீர் ஒழுங்குமுறை ஆணையம் தண்ணீர்க் கட்டணத்தை நிர்ணயிக்குமாம்.

அப்படியானால் தண்ணீரின் விலை எவ்வளவு? நீர்த் திட்டங்களின் நிர்வாகம், விநியோகம், செயல்பாடு, பராமரிப்பு ஆகியவற்றுக்கான செலவுகளை முழுமையாக வசூலிக்கின்ற வகையில் கட்டணம் தீர்மானிக்கப்பட வேண்டுமென்று கந்துவட்டிக்காரனைப் போல கூறுகிறது இக்கொள்கை அறிக்கை. அதாவது, காசிலிருந்தால் குடிநீர் கிடைக்கும். இல்லையென்றால், நாவறண்டு குடிமக்கள் சாக வேண்டும் என்கிறது, இந்தக் கொள்கை அறிக்கை. அதேசமயம், தனியார் நிறுவனங்கள் கழிவு நீரைச் சுத்திகரிக்கவும், மறுசுழற்சி செய்யவும் அரசாங்கம் மானியம் அளிக்க வேண்டும் என்கிறது. சாதாரணக் குடிமகன் தண்ணீருக்குக் கட்டணம் செலுத்த வேண்டுமாம். தண்ணீர் முதலாளியாய் இருந்தால் மானியமும் ஊக்கத்தொகையும் தரப்படுமாம்.

இந்த வரைவு அறிக்கை இந்திய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டதல்ல. ''தேசிய நீராதார திட்ட வரைவுக்கான பரிசீலனை - சீர்திருத்தங்களுக்கான திசை வழிகள்'' என்ற அறிக்கையை உலக வங்கியின் கீழ் இயங்கும் ''நீர் ஆதாரக் குழு-2030'' என்ற அமைப்பு இந்திய அரசின் திட்டக் குழுவிற்கு வழங்கியது. இந்த ''நீர்ஆதாரக்குழு-2030'' என்ற அமைப்புக்கு கோக், பெப்சி, யுனிலீவர், கார்கில், மெக்கன்சி முதலான பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் நிதிவழங்கும் புரவலர்களாக உள்ளன.

இந்த நீர் ஆதாரக்குழு, கடந்த 2011 அக்டோபரில் இந்திய திட்டக் கமிசனுக்கு அளித்த திசைவழி அறிக்கைதான், அப்படியே எந்த மாற்றமுமின்றி ''தேசிய நீர்க் கொள்கை-2012'' என்ற பெயரில் இந்திய அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நகல் கொள்கை அறிக்கை தயாரிப்பதில் செல்வாக்கு செலுத்திய பெருந்தொழில் நிறுவனங்கள், இப்போது இந்த அறிக்கையை வரவேற்று ஆதரிக்கின்றன. ஃபிக்கி எனும் பெருமுதலாளிகளின் சங்கத்தின் முதுநிலை துணை இயக்குநரான ரொமித் சென், தண்ணீருக்கு முறையான விலை வைப்பதன் மூலம் தண்ணீரை வீண் விரயமாக்குவதைத் தடுக்க முடியும் என்று இந்த வரைவு அறிக்கையைப் பாராட்டுகிறார். இவையனைத்தும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் மற்றும் தரகுப் பெருமுதலாளிகளின் கொள்ளைக்காகவே தண்ணீர் தனியார்மயமாக்கப்படுகிறது என்பதையும், ஆட்சியாளர்கள் அவர்களின் கைக்கூலிகளாக இருப்பதையும் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

ஏற்கெனவே உள்ள 2002-ஆம் ஆண்டின் தேசிய நீர்க் கொள்கையானது, பொது நீராதாரங்களில் பயன்பாட்டிற்கான முன்னுரிமையைத் தீர்மானித்திருந்தது. இதன்படி, குடிநீர், விவசாயம், நீர் மின்சாரம், சுற்றுச்சூழல், விவசாயம் சார்ந்த மற்றும் சாராத தொழில்கள், போக்குவரத்து மற்றும் இதர பயன்பாடு என்ற வரிசையில் முன்னுரிமை தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்போதைய வரைவு அறிக்கையில் இத்தகைய முன்னுரிமை தீர்மானிக்கப்படவில்லை. அதாவது, குடிநீர் இல்லாமல் மக்கள் தவித்தாலும், தண்ணீர் இல்லாமல் விவசாயப் பயிர்கள் கருகிக் கொண்டிருந்தாலும் அவற்றுக்கு முன்னுரிமை தரப்படாமல், பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கும் தரகுப் பெரு



படிப்பகம்

www.padippakam.com



முதலாளிகளின் தொழிற்சாலைகளுக்கும், வாட்டர் போலோ போன்ற தண்ணீரில் நடக்கும் மேட்டுக்குடியினரின் கேளிக்கை விளையாட்டுகளுக்கும் தண்ணீர் தாராளமாகத் தரப்படும். இதை யாரும் கேள்வி கேட்க முடியாது.

இந்திய அரசியல் சட்டத்தில் அதிகாரம் குறித்த பிரிவுகளில் மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப் என மூன்று பகுதிகள் உள்ளன. இதில் மாநிலப் பட்டியலின் 17-வது பிரிவில் பாசனம், கால்வாய்கள், நீர்த்தேக்கம், நீர் மின்சாரம் ஆகியவை உள்ளன. புதிய வரைவுக் கொள்கையானது, மாநில அரசின் அதிகாரத்தை மறுத்து, பொது அதிகாரப் பட்டியலுக்கோ அல்லது இந்திய அரசின் நேரடி அதிகாரத்துக்கோ மாற்றியமைக்க ஒரு சட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்கிறது.

1882-ஆம் ஆண்டின் இந்திய சொத்துக்களின் மீதான உரிமை கட்டுப்பாடு சட்டம் திருத்தப்பட்டு, நிலத்தடி நீரின் மீது நிலச் சொந்தக்காரர்களுக்கு உரிமையில்லை என்று மாற்ற வேண்டுமென்கிறது புதிய கொள்கை. ஒரு ஊரில் பொதுச் சொத்தாக உள்ள ஏரியோ அல்லது வளமான நீர் நிறைந்த ஒரு விவசாயியின் கிணறோ இருந்தால், இனிமேல் அவை அவர்களுக்குச் சொந்தமில்லை. அதனைக் கட்டுப்படுத்தி விநியோகிக்கும் பொறுப்பை ஒழுங்குமுறை ஆணையம் பறித்துக் கொள்ளும்.

குடிமக்களுக்கு அடிப்படைத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க அரசாங்கம் உத்திரவாதம் செய்ய வேண்டும் என்று இந்த நகல் அறிக்கை கூறினாலும், இதனை குடிமக்களின் அடிப்படை உரிமையாக்கி சட்டமாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்த அறிக்கை பரிந்துரைக்கவில்லை. அத்தியாவசியத் தேவையான பால், மின்சாரம் போன்றவற்றைப் போலவே குடிநீர் கிடைக்கவும் உத்திரவாதம் செய்துள்ளோம், காசுள்ளவர்கள் தாராளமாக வாங்கிக் கொள்ளலாம் என்று அரசு அறிவிக்க வேண்டியதான் பாக்கி.

தென்னமெரிக்காவிலுள்ள ஏழை நாடான ஈக்வடார், மனித இனம் மட்டுமின்றி இயற்கையும் உரிமைகளைப் பெற்றிருப்பதாக 2008-ஆம் ஆண்டில் சட்டம் இயற்றியது. இதன்படி இயற்கையின் அங்கமான மலைகளும் ஆறுகளும் ஏரிகளும் பொதுச் சொத்தான தங்களை வணிகப் பொருளாக்குவதையோ, கழிவுகளைக் கொட்டி நாசமாக்குவதையோ எதிர்த்து தங்களது வாழும் உரிமைக்காக, தங்கள் சார்பில் மனித இனத்தைக் கொண்டு வழக்கு தொடுத்து போராட முடியும். ஈக்வடார் நாட்டின் வழியில் பொலிவியாவும் புதிய சட்டத்தை இயற்றியுள்ளது. ''தாய்மண் சட்டம்'' என்றழைக்கப்படும் இச்சட்டம், மனித இனத்துக்கு இணையாக இயற்கைக்கும் சமமான உரிமைகளை அளித்துள்ளது. இதனை மேலும் 12 நாடுகள் சட்டமாக்க ஆலோசித்து வருகின்றன. அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் வழியில் தாய்மண்ணின் உரிமைக்கான பிரகடனத்தை ஐ.நா. மன்றம் அங்கீகரிக்க வேண்டும் என்று பொலிவியா முன்மொழிந்துள்ளது. ஆனால், அமெரிக்காவின் அடிமையாகவும் அடியாளாகவும் இருந்துகொண்டு வல்லரசாகத் துடிக்கும் இந்திய அரசோ, தண்ணீரைத் தனியார்மயமாக்க மூர்க்கமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தண்ணீர் வியாபாரம் என்பது நமது பண்பாட்டிற்கு எதிரான கொடுஞ்செயல். அடிப்படை மனித உரிமைக்கு எதிரான அநீதி. இயற்கையின் நியதிக்கு எதிரான வன்கொடுமை. உயிரினங்களைப் பூண்டோடு அழிக்கும் பயங்கரவாதம். தண்ணீர் தனியார்மயம் என்பது மறுகாலனியாதிக்கத்தின் கோர வடிவம். எனவே தண்ணீரை எவனுக்கும் தனியுடமையாக்கக் கூடாது. தண்ணீரை வணிகச் சரக்காக்கக் கூடாது. உணவு இல்லாமல்கூட பல நாட்கள் மனிதனால் உயிர் வாழ முடியும். ஆனால், தண்ணீர் இல்லாமல் மனிதனால் ஒரிரு நாட்கள் கூட உயிர் வாழ முடியாது. எனவே நாம் உயிர் வாழ வேண்டுமென்றாலே இத்தனியார்மயத்தை இன்றே இப்பொழுதே எதிர்த்துப் போராடி வீழ்த்த வேண்டும். பொலிவியாவின் கொச்சபம்பா நகர மக்கள் பெக்டெல் எனும் ஏகபோக தண்ணீர் நிறுவனத்தை விரட்டியடித்ததைப் போல, தண்ணீரைக் கைப்பற்றிக் கொண்டு ஆதிக்கம் செய்யவரும் பன்னாட்டு ஏகபோகக் கம்பெனிகளையும் அதற்குக்கைகட்டிச் சேவகம் செய்யும் ஆட்சியாளர்களையும் எதிர்த்து போராட வேண்டும்.

● குமார்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி




களைச் சேர்ந்த அப்பகுதித் தோழர்கள் வரவேற்றனர். தங்கள் ஊர்களில் வந்து பிரச்சாரம் செய்த செஞ்சட்டைத் தோழர்களை இங்கே கண்ட மக்கள் தம் உறவினர்களைக் கண்டதுபோல மனம் நெகிழ்ந்தனர்.

அடக்குமுறைகள் தொடங்கிய மறுகணமே இதற்கு எதிரான பிரச்சாரம் மற்றும் போராட்டங்களில் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய அமைப்புகள் இறங்கின. இடிந்தகரை-கூடங்குளம் மக்கள் முள்ளிவாய்க்காலைப் போல சுற்றி வளைக்கப்பட்டு அடக்கப்படுகின்றனர் என்பதை தமிழகம் முழுவதும் அம்பலப்படுத்தி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதுடன், எல்லா மாவட்ட மையங்களிலும் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டங்கள் - மறியல் போராட்டங்களில் நூற்றுக்கணக்கான தோழர்கள் கலந்து கொண்டனர்.

இடிந்தகரை, கூடங்குளம் வட்டாரம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, 'போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் யாராக இருந்தாலும் கைது செய்யப்படுவார்கள்' என்று அரசு பகிரங்கமாக அறிவித்திருந்தது. இது சட்டவிரோதமானது என்று நெல்லை ஆட்சியர் மற்றும் டி.ஐ.ஜி. ஆகியோரிடம் வாதிட்டும் பயனில்லாமல் போகவே, 'இடிந்தகரை செல்கிறோம், முடிந்தால் கைது செய்துகொள்ளுங்கள்' என்று ஊடகங்கள் மூலம் வெளிப்படையாக அறிவித்து விட்டு புறப்பட்டனர் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்கள். மதுரை உயர் நீதிமன்ற வாயிலில் அடக்குமுறைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திய மதுரை வழக்குரைஞர்கள் 15 பேரும் இடிந்தகரை நோக்கிப் புறப்பட்டனர்.

வழியெங்கும் போலீசு படை மறித்து நின்றதால், மக்களின் உதவியுடன் சுற்று வழியில் பல கிலோமீட்டர் நடந்து இடிந்தகரை சென்று சேர்ந்தார்கள் வழக்குரைஞர்கள். கூடியிருந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மத்தியில் உரையாற்றுமாறு உதயகுமார் கேட்டுக் கொண்டதன் பேரில் தோழர் ராஜு அங்கே உரையாற்றினார். 'நம்முடைய ஊரிலேயே நாம் கைதிகளைப் போல வைக்கப்பட்டிருப்பதா, எதற்காக கைது, எதற்காக சிறை?' என்று அவர் கேள்வி எழுப்பினார்.

கைது, சிறை போன்றவை அந்த மக்களுக்குப் புதிது என்ற போதிலும், அரசின் அடக்குமுறை மக்களின் உறுதியை அதிகரித்திருந்தது. கூட்டுத்துவ முறையில் உணவு தயாரித்து பகிர்ந்து கொண்டும், கடல் வழியே படகில் தண்ணீரைக் கொண்டு வந்தும் தமது போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தனர் மக்கள். இருப்பினும் நூற்றுக்கணக்கான பொய் வழக்குகளைப் போட்டு தயார் நிலையில் வைத்திருக்கும் ஜெ அரசு, அந்த ஆயுதங்களை எடுத்து சுழற்றுகிறது. வீடு வீடாகத் தேடுதல் வேட்டைகள், அச்சுறுத்தல்கள் நடக்கின்றன. நாகர்கோவிலில் உள்ள உதயகுமாருக்குச் சொந்தமான பள்ளி மற்றும் அவரது வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

சாதாரண குற்றப் பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட கூட்டப்புளி மக்கள் மீது, அரசுக்கு எதிராக சதி செய்ததாகவும், போர் தொடுக்க முயன்றதாகவும் (இ.பி.கோ 121, 121-அ,123 ) மரண தண்டனை, ஆயுள் தண்டனைக்குரிய குற்றப் பிரிவுகளின் கீழ் வழக்கு தொடுத்து பிணையில் வர முடியாமல் தடுத்திருக்கிறது போலீசு.

''யாரையும் நாங்கள் ஊருக்குள் புகுந்து கைது செய்யப் போவதில்லை'' என்று தேனொழுகப் பேசியிருக்கிறார் ஏ.டி.ஜி.பி.ஜார்ஜ். ஆனால் கடந்த சில மாதங்களாக போராடுவோர் மீது பதிவு செய்யப்பட்டுள்ள பொய் வழக்குகளே அரசின் வஞ்சக முகத்துக்குச் சான்று.

போலீசு பதிவு செய்து வைத்திருக்கும் சுமார் 170 முதல் தகவல் அறிக்கைகளில் உதயகுமார், சிவசுப்பிரமணியம் போன்ற சில முன்னணியாளர்களின் பெயர்கள் உள்ளன. அதன் பின்னர் 'இவர்களுடன், கண்டால் அடையாளம் சொல்லத்தக்க இரண்டாயிரம் பேரும், சேர்ந்து' குற்றத்தில் ஈடுபட்டதாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டாயிரம் பேரில் உன்னையும் சேர்த்து சிறைக்கு அனுப்பி விடுவேன் என்று மக்களை மிரட்டுகிறது போலீசு.

தங்களுடைய அன்றாட வாழ்வையும், உயிரையும் அணு உலை பறித்துவிடும் என்ற அச்சத்தினால்தான் இந்தப் போராட்டத்தில் இறங்கினார்கள் மக்கள். இப்போது அவர்கள் எதிர்கொள்வது சிறை அல்லது துப்பாக்கி. 'அணு உலையைத் தடுத்தாலும் உங்களுக்கு அதே கதிதான்' என்று அம்மக்களை அச்சுறுத்துகிறது அரசு. அமைதி வழியில் மாதக் கணக்கில் போராடிய அந்த மக்கள், அரச வன்முறையைக் கண்டு திகைத்து நிற்கிறார்கள்.

அணு உலையின் ஆபத்துகள் குறித்து படித்தும் கேட்டும் அறிந்து கொண்டிருக்கும் அந்த மக்கள், அதனினும் கொடிது இந்த அரசு தான் என்ற உண்மையைக் கடந்த சில நாட்களில் தமது சொந்த அனுபவத்தில் கண்டு கொண்டிருக்கிறார்கள். இந்த நெடிய போராட்டத்தில் இது முக்கியமானதொரு படி.




- பு.ஜ.செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# விவசாயிகளின் தற்கொலையும் வங்கிகளின் வாராக்கடனும்



நுண்கடன் என்ற நவீன கந்துவட்டிக் கடன் சுரண்டலுக்குப் பலியான ஒரு இளம் விவசாயி.

1995-ஆம் ஆண்டு தொடங்கி 2010-ஆம் ஆண்டு முடியவுள்ள 16 ஆண்டுகளில் இந்தியாவெங்கிலும் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 2,56,913 என அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது, தேசியக் குற்ற ஆவண ஆணையம். இப்பதினாறு ஆண்டுகளில், முதல் எட்டு ஆண்டுகளில் (1995-2002) தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 1,21,157; அடுத்த எட்டு ஆண்டுகளில் (2003-2010) விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது முந்தையை எட்டு ஆண்டுகளை ஒப்பிடும்பொழுது, ஆண்டொன்றுக்குச் சராசரியாக 1,825 என்ற வீதத்தில் அதிகரித்து, 1,35,756-ஐத் தொட்டுவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளது, அந்த ஆணையம். இப்புள்ளிவிவரத்தை நுணுகிப் பார்த்தோமானால், இப்பதினாறு ஆண்டுகளில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 44 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயிருக்கும் அதிர்ச்சிகரமான உண்மை புலப்படும்.

இப்புள்ளிவிவரத்தோடு மைய அரசு வெளியிட்டுள்ள இன்னொரு புள்ளிவிவரத்தைச் சேர்த்துப் பார்ப்போம். 2010 டிசம்பரில் 68,597.09 கோடி ரூபாயாக இருந்த பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன், அடுத்த ஒரே ஆண்டில், 2011 டிசம்பரில் 1,03,891.27 கோடி ரூபாயாக அதிகரித்துவிட்டது என நிதித்துறை இணை அமைச்சர் நமோ நாராயண் மீனா மாநிலங்களவையில் அறிவித்திருக்கிறார்.

இந்த வாராக் கடன் ஒருபுறமிருக்க, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு, வசூலாகாமல் நிலுவையாக இருந்து வரும் கடன் தனிக் கணக்கு. இதில், மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு நிலுவையாக இருக்கும் கடன் 1,21,000 கோடி ரூபாய். விமானப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு நிலுவையாக இருக்கும் கடன் 39,000 கோடி ரூபாய். இந்த 39,000 கோடி ரூபாய் கடனில் சமீபத்தில் போண்டியாகிப் போன கிங் ஃபிஷர் நிறுவனத்தின் பங்கு மட்டும் 7,000 கோடி ரூபாயாகும்.

தனியார்மயம் – தாராளமயம் எந்தளவிற்குத் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறதோ, அந்தளவிற்கு விவசாயிகள் கந்துவட்டிக் கடனில் சிக்கிக்கொண்டு தற்கொலை செய்து கொள்வதும்; கார்ப்பரேட் முதலாளிகள் பொதுத்துறை வங்கிகளிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாமல் நாமம் போடுவதும் அதிகரித்திருப்பதை இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து புரிந்து கொள்ளலாம். ஆனால், காங்கிரசு கூட்டணி அரசோ, ‘‘பொருளாதார மந்தத்தின் காரணமாகத்தான் கடன் பாக்கியும் வாராக் கடனும் அதிகரித்திருப்பதாக’’க் கூறி, கார்ப்பரேட் முதலாளிகளின் மோசடிகளை மூடிமறைக்க முயலுகிறது. இன்னொருபுறம், கந்துவட்டிக் கடன் சுமையால் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டும் மோசடியிலும் சதித்தனத்திலும் அரசே ஈடுபட்டு வருகிறது.

குறிப்பாக, ஆந்திர மாநிலத்தில், ஒரு விவசாயி கடன் தொல்லையால்தான் தற்கொலை செய்து கொண்டார் என்று நிரூபிப்பதற்கு 13 சான்றாவணங்களைப் பெற வேண்டும் என்ற விதி உருவாக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிராவிலோ, கந்துவட்டிக் கடன் தொல்லையால் நேர்ந்த தற்கொலையா, இல்லையா என்பதை ஆராய்ந்து சான்றளிப்பதற்காகவே ஒரு அதிகார வர்க்கக் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைகளையும் மீறி, விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் குறித்துத் தேசிய குற்ற ஆவண ஆணையம் வெளியிட்டு வரும் ஆதாரபூர்வமான புள்ளிவிவரங்களைத் திட்டமிட்டே புறக்கணிக்கின்றன, மைய, மாநில அரசுகள்; மேலும், தமது கைத்தடி அதிகாரிகள் தரும் புள்ளிவிவரங்களை மட்டுமே நாடாளுமன்றத்திலும் சட்டசபையிலும் அறிவித்து, விவசாயிகள் கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொள்வது குறைந்து வருவதாக மாய்மாலம் செய்கின்றன.

இப்புள்ளிவிவர மோசடிகளுக்கு மட்டுமல்ல; கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளைக்கும், விவசாயிகளின் அவல வாழ்க்கைக்கும் நாம் முடிவு காணுவது எப்போது? •



படிப்பகம்